ஈரப் பதிப்புகிலை சதம் 10

சுதந்தீரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லைட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

Office of the Registrar of Books & Newspapers, CEYLON. 13 APR 1953

புத்தகம் 8 ஜய ஆ பங்குனி மீ 28உ [10-4-53] ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 16 இதழ் 45

விசாரணைக் குழு நியமித்து தமிழர் குறைகளைத் தீர்க்கப் போகிறார்களாம்!

எதிர் வரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஆட்சியாளரின் மாய்மாலம்

அதிருப்தியடைந்துள்ள சிறுபான்மையினரை ஏமாற்ற கட்சிமாறிய பிரதிநிதியின் அசகாய மூளை!

இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு—குறிப்பாக தமிழ் பேசும் இனத்திற்கு இலங்கை அரசாங்கம்இழைத்துவந்துள்ள இன்னல்கள்—கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆட்சியாளரின் வெறிபிடித்த செயல்கள் சிறுபான்மை மக்களிடம் பெரும் எதிர்ப்பையும்—அதிருப்தியையும் சமீப காலம் தொட்டு உக்கிரமாக்கியுள்ளது.

ஆனல் இப்போது சிறுபான்மை மக்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு ஒரு கமிஷனை நியமிக்கப் போவதாக அரசாங்கம் மாய்மாலம் செய்ய இருக்கிறது என்றுதெரிகிறது. அடுத்த பொதுத் தேர்தல் விரைவில் நடக்க இருப்பதால் ஆளும் கட்சியின் காக்கா பிடிக்கும் செய்கையாக இது இருக்கும்.

இந்த திட்டத்தின் பிரகாரம் சிறுபான்மை மக்களின் குறைபாடுகளை-தேவைகளை விசாரிப்பதற்காக அரசாங்கம் ஒரு விசாரணைக்கமிஷனை நியமிக்கும்.

இந்த கமிஷன் அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னதாகவே நியமிக்கப்படும் என்றும் தெரிகிறது. சிறுபான்மை மக்கள் இந்த கமிஷன்முன் தங்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். கமிஷன் முன் வைக்கும் சிபார்ஸுகளை அடிப்படையாகக்கொண்டு, அவற்றை நடைமுறையிலாக்குவது என்ற வாக்குறுதியின்பேரில் யூ. என். பி. தேர்தலில் போட்டியிடும் என்று நம்பப்படுகிறது.

இத்தகைய ஒரு கமிஷனை நியமிக்குமாறு சமீபத்தில் யூ. என். பி. யின் பக்கம் கறணமடித்தஒரு பாராளுமன்ற காரியதரிசி கேட்டுக்கொண்டதன்பேரிலேயே அரசாங்கம் மேற்கூறிய முடிவுக்கு வந்துள்ளதாம்.

இதுசம்பந்தமான பிரச்னை இம்மாத முடிவுக்குமுன் கூட இருக்கும் மந்திரிசபை கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் இறுதியான ஒரு தீர்மானம் வெகு விரைவில் எடுக்கப்படலாமென்றும் தெரியவருகிறது.

திடீர்த்தேர்தல் நடத்தும் திட்டத்துடனேயே அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கிறது என்று நம்பப்படுகிறது.

அரசாங்க ஊழியத்திலிருந்து ஓய்வுபெற்ற இரண்டு தமிழ்ப் பெரியார்கள் இந்த கமிஷனில் பணியாற்ற அழைக்கப்படுவார்கள் என்று சமீபத்தில் பாராளுமன்ற அங்கத்தவர் விடுதியில் ஒரு அரசாங்கக் கட்சி தமிழ் அங்கத்தவர் கூறியதாக தெரிகிறது.

அரசாங்க ஊழியத்திலுள்ளவர்களின் சம்பள விகிதத்தை அரசாங்கம் கூட்டியிருக்கிறதல்லவா? இதுவும் நடக்கவிருக்கும் தேர்தலில் யூ. என். பிக்கு ஆதரவு திரட்ட செய்யப்பட்ட தகடுதத்தம் என்றே பல அரசியல் வட்டாரங்களிலும், அரசாங்க ஊழியர்கள் மத்தியிலும் பேசப்படுகிறது. சம்பளத்தைக்கூட்டி தேர்தலில் வாக்குகளைப் பெற்றுவிட்டு அதன்பின் அரசாங்க ஊழியருக்கு இன்று அளிக்கப்படும் மான்யங்களை ரத்து செய்வது அதன் அந்தரங்கத்திட்டம் என்று மேற்குறிப்பிட்ட வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

சிறுபான்மை மக்கள் மத்தியில் புகைந்துவரும் அதி

(9-ம் பக்கம் பார்க்க)

10 லட்சம் ரூபா இயந்திர உபகரணங்கள் குறட்டை விடுகின்றன

(நமது நிருபர்)

இலங்கையிலுள்ள வைத்திய ஆராய்ச்சி நிலையத் (M. R. I) தின் செயலாற்றம்பற்றி விசாரணை நடத்த சுகாதார மந்திரி இலாகா தீர்மானிக்க விருக்கிறது என்று தெரியவருகிறது.

இந்த நிலையத்தை எதிர்த்து பல குற்றச்சாட்டுகளை மேற்படி இலாகா தயாரித்துள்ளது.

சுதந்திரன் கேள்விக் கொத்து

சுதந்திரன் அபிவிருத்திக் கேள்விக் கொத்தை நூற்றுக்கணக்கான நேயர்கள் பூர்த்தி செய்து அனுப்பி வைத்திருக்கிறீர்கள். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.

இதுவரை அனுப்பி வைக்காத நேயர்களை ஏற்கனவே குறிப்பிட்டபடி இம்மாதம் 10-ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்,
சுதந்திரன்.

பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து இறக்குமதி செய்யப்பட்ட பல உயர்தரமான நுணுக்கக் கருவிகள் வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் குறட்டை விடுகின்றன. ஆனல் இதே மெஷின்கள் இல்லாததால் தமது வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி அதிகாரிகள் பலதடவைகள் அரசாங்கத்திற்கு முறையிட்டுள்ளனர்.

இந்த யந்திரங்களில் ஒன்று ரூபா 28 ஆயிரம் முடிந்திருக்கிறது. மொத்தத்தில் இந்த யந்திரசாதனங்களுக்காக அரசாங்கம் பத்து லட்சம் ரூபா செலவழித்திருக்கிறது.

என்றாலும் புதிப்புது ஆராய்ச்சித்துறைகளில் ஆராய்ச்சி வேலைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

"இந்த யந்திரங்கள் வெறு

(9-ம் பக்கம் பாாக்க)

கொத்தலாவலையை எதிர்த்து டட்லி குழுவின் பகிரங்கத் தாக்குதல்

"மது ஒழிப்பை எதிர்ப்பவரை பிரதமராக இருக்க விடமாட்டோம்"

மதுவிலக்கு இயக்கத்தவர்கள் கூட்டத்தில் டட்லி சேனநாயகா அறிவிப்பு

(நமது நிருபர்)

கொத்தலாவலை அரசாங்கத்தை எதிர்த்து டட்லி சேனநாயகாவின்குழு ஆரம்பித்துள்ள இயக்கத்தின் "பகிரங்கத் தாக்குதல்" சென்ற செவ்வாய்கிழமை தொடுக்கப்பட்டது.

திரு டட்லியின் வாசஸ்தலமான "வூட்லன்ட்"ஹில் நடந்த மது ஒழிப்பு இயக்கத்தினரின் ஒரு கூட்டத்தில் பேசும்போது திரு டட்லி சேனநாயகா இந்த "பகிரங்க யுத்தத்தை" ஆரம்பித்துவைத்துள்ளார்.

அரசாங்க ஆதிக்கத்தைக் கைப் பற்றுவதற்காக, தான் மது ஒழிப்பு இயக்கத்திற்கு தலைமை வகித்து நடத்தவில்லை என்று கூறிய முன்னை நாள் பிரதமர் திரு டட்லி சேனநாயகா, "என்றாலும் ஒரு உண்மையை தெளிவு படுத்த நான் விரும்புகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் மதுவையும் குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்க மறுக்கும் ஒருவரை இந்த நாட்டின் பிரதமராகஇருக்க விட மாட்டோம். அந்த இடத்திற்கு மது ஒழிப்பு இயக்கத்திலுள்ள ஒருவரை வேண்டுமானல் நியமிப்போம்" என்று பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் தெரிவித்தார்.

மது ஒழிப்பு இயக்கத்தை தேசிய ரீதியில் வியாபித்து நடத்துவதென்றும், நாட்டின் சகல மூலை முடுக்குகளிலும் அதற்கான கூட்டங்கள் நடத்துவது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டங்களுக்குப்பின் இறுதியாக கொழும்பில் நடத்தும் கூட்டத்திற்கு இந்தியாவில் மது ஒழிப்பு அமுல் செய்த தலைவர்களான திரு சி. ராஜகோபாலாச்சாரியாரையும், திரு மொரார்ஜி தேசாயையும் வரவழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மது ஒழிப்பு இயக்கம் நடத்தவில்லை என்று திரு டட்லி சேனநாயகா கூறிய போதிலும் கொத்தலாவலையை அதிகாரத்திலிருந்து விலக்கவேண்டும் என்ற உணர்வு பெரும்பான்மையான யு. என். பி. அங்கத்தவர்கள் மத்தியில் தலைதூக்கி வருவதாகவும், எனவேதான் மது ஒழிப்பு இயக்கத்தை இதற்கு ஒரு கருவியாக இவர்கள் பாவிக்கிறார்கள் என்றும் டட்லி கோஷ்டியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவட்டாரங்களிலிருந்து நமக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது.

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மறமறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலங்கடத்தாமல்



உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

கேட்லாக் இனம்!

வெஸ்டன் ஏஜென்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழ் மொழியின் தமிழ் இனத்தின் பரிதாப நிலை

"மொழி அழிந்தால் இனம் அழியும்" என்பதை எண்ணித்தான் அரசியல் சூழ்ச்சி நடைபெறுகிறது

"தமிழ் அழியாது, தமிழரும் அழியமாட்டார்கள். பாரீர் தமிழன் கீர்த்தியை. கங்கைக் கரையிலே வீர முழக்கமிட்டான். கடாரத்திலே வெற்றிச் சங்கமூதினான். இமயத்திலே இலச்சினை பொறித்தான். எலிமயிரில் செய்த பட்டாடைகளை உரோமுக்கு அனுப்பினான். ஆங்கிலேயர் கடற் கொள்ளைக்காரராக—காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த நேரத்திலே நாகரிகத்தில் சிறந்து விளங்கினான். அலை கடலிலே சுழலுக்கும், சுறுவுக்கும் பயப்படாது நாவாய் ஓட்டி நானிலம் வென்றான். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியிற் பிறந்த தமிழன் பெருமையை—கீர்த்தியை—சிறப்பை—அவன் மொழி வளத்தை ஒருவராலும் அழிக்க முடியாது" என்று மேடை அதிர மார்தட்டிப் பேசுகிறார்கள் அரசியல் மோகங்கொண்டவர்கள். அரை மந்திரி கால் மந்திரியாக இருக்கும் கனவான்கள்.

ஆனால்?

இவ்வளவு கீர்த்தியுடன் இருந்த தமிழன், தனியரசு செலுத்திய தமிழன், பயமென்பதையே அறியாத தமிழன், நாகரிகமாக வாழ்ந்த தமிழன், இன்று கீர்த்தி இழந்து, தனியரசு இழந்து, வீரத்தை இழந்து, நாகரிகத்தை இழந்து, தமிழ் மொழியை இழந்து, எலியாகப், பூனையாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பதன் காரணமென்ன? என்பதை அந்தக் கனங்கள் கூறுது பழம் பெருமை பேசுவதன் காரணமென்ன? அதுதான் பதவி மோகம்!

தன் ஒருவனுக்காக ஒரு பழம் பெரும் சமூகத்துக்கும், மொழிக்கும் கேடுவிளைவிக்கிறோமென்று அவர்கள் எண்ணுவது கிடையாது? ஆசை வெட்கமறியாதல்லவா?

"தமிழை—தமிழனை இகழ்ந்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்று மேடையேறிப் பேசும் பெரிய மனிதர்கள் 'தமிழனைக் கள்ளத்தோணி' என்று கூறும்பொழுது வாய் மூடி மௌனியாக இருப்பதன் மர்மமென்ன?

நீதியரசர் நாகலிங்கத்துக்கு பிரதம நீதியரசர் பதவி கொடுக்க மறுத்ததை நீதி மந்திரியின் காரியதரிசியும், 'தமிழருக்குக் கேடு வந்தால் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டேன்' என்றி கூறியவருமான திரு வி. குமாரசாமி கண்டும் காணுதவர் போலிருப்பதன் காரணமென்ன?

பாராண்ட தமிழன் இன்று தோட்டக்காடாள்வது இவர்கள்போன்ற பதவிப் பித்தர்களினாலென்பது வரலாறு கண்ட உண்மை அல்லவா?

'மொழி அழிந்தால் இனம் அழியும்' என்பதை எண்ணித்தான் தமிழ் மொழியை அழிக்க அரசியல் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தென்னாட்டில் தமிழின் நிலை என்ன? இலங்கையில் நிலை என்ன? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மொழி பேசும் ஒரே இனமாக இருந்த தமிழர் வடமொழி வரவால் பல மொழியினராக மாறிவிட்டது வரலாறு காட்டும் உண்மையல்லவா?

கன்னடமும், களிதெலுங்கும் கவின் மலையாளமும், துளுவும் பேசுவோரின் வரலாறென்ன? செந்தமிழ் நாட்டிலே கொடுந்தமிழ் என்ற சொல்லு வழங்குவது எதனால்?

தமிழ் நாட்டிலே தமிழர்களால் பராமரிக்கப்படுகின்ற ஆலயங்களிலே தமிழ் மொழியில் மந்திரம் ஓதப்படுகின்றதா? தமிழர் கடவுளுக்கு தமிழே தெரியாதா? தமிழ் தெரியாதவர் எப்படி தமிழர் கடவுளாக முடியும்? தமிழர் கடவுள் என்று கூறப்படும் முகனுக்குக்கூடத் தமிழ் தெரியாதே! விளையாடுவது தெரியுமா? தெரிந்திருந்தால், "சுக்ராம், பரதம் விஷ்ணும், சிவர்ணம் சதுர்ப்புஜம், பிரசன்னவதனம், தியாகே, சர்வவிக்னோபசாந்தகே, கந்தம் சமர்ப்பயாமி, புஷ்பம் சமர்ப்பயாமி சொர்னம் சமர்ப்பயாமி" என்று பூசை செய்வார்களா?

விளங்காத மொழியில் அர்த்தமற்ற விளையாட்டு நடைபெறுமா?

இலங்கை வந்த குன்றக்குடி அடிகள் 'தமிழில் பூசை செய்யுங்கள்' என்று கூறினார். அவர் நாட்டிலே அவர் சொல்லுக்கு மதிப்பிருந்தால் தமிழில் மந்திரமோதுவார்களே! தமிழர் சூத்திரர் அவர் மொழி சூத்திர மொழி என்று இன்றும் கூறித் திரிகிறதே ஒரு கூட்டம் அதனைக் கண்டும் காணுமல் இருக்கிறார்களே தமிழர் என்று எண்ணும்போது நெஞ்சு கொதிக்கிறது.

ஆலயங்களில் செத்த மொழி செங்கோலோச்சுகிறது. சாகாத மொழி தவி தவிக்கிறது. இதனைக் கண்டிக்க ஒருவரும் இல்லை. அப்படிக் கண்டிப்பவர்களை 'நாத்திகர்' என்று இலகுவில் கூறிவிடுகிறார்கள்.

ஆனால் தமிழில் ஆங்கிலத்தைக் கலந்து பேசக்கூடாதென்று ராஜாஜி கூறுகிறார். ஆனால் வடமொழியை வலிந்து புகுத்தப்படுவதைப் பற்றிப் பேசுகிறாரா? சென்னை அரசியலார் வெளியிட்டுள்ள கலைச் சொற்கள் எல்லாம் இனிய தமிழ்ச் சொற்களிருக்க அதனைவிட்டு வடமொழிச் சொற்களிலேயே ஆக்கப்பட்டிருக்கிறதே அதனைப்பற்றி யாராவது கேட்டிருக்கிறார்களா?

தமிழ் வளர்த்த மதுரையிலே—பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட மீனாட்சி அம்மன் ஆலயத்திலே தமிழனின் தனிப் பெருமை தரைமட்டமாகிவிட்டது. தமிழரின் தனிப் பெரும் செல்வமான திருக்குறளை 1330 சலவைக் கல்லில் செதுக்கித் தருகிறேன் ஆலயத்தின் நாற்புறமும் வையுங்கள் என் சொந்தச் செலவிலே செய்து தருகின்றேன் என்று தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாழ் ஆதினத் தலைவர் ஒரு வேண்டுகோள் விட்டார். திருக்குறளா? திருவாலவாயன் ஆலயத்திலா? அடுக்குமா இந்த அக்கிரமம் என்று சில திருமேனிகள் தடுத்துவிட்டார்களாம்! மனு நீதியானால் ஏற்றிருப்பார்கள். ஆனால் தெள்ளு தமிழ்த் தேனும் திருக்குறளை எப்படி ஏற்பார்கள்? மீனாட்சி சுந்தரம் பிள்ளையே கூறிவிட்டாரே வள்ளுவர் செய் திருக்குறளை வழுவற நன்குணர்ந்தோர் உன்னுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" என்று. பின் எப்படி ஏற்பர்.

இதிலிருந்து அறிவது என்ன? தமிழ் அழியவில்லை என்று கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயமா?

மூலஸ்தானத்திலே தமிழர் எப்படி நுழைய முடியாதோ அப்படி அவர்கள் மொழியும் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் தமிழர் அதனை உணர்கிறார்களா?

தமிழ் மொழி இந்தியாவில் 'இந்தி'யாலும் இலங்கையில் சிங்களத்தாலும் சிதைக்கப்படுகிறது.

சில தமிழர்—தங்கள் நலத்திற்காக அங்கு இந்தியைப் படியுங்கள் என்றும், இங்கு சிங்களத்தைப் படியுங்கள் என்றும் கூறுகிறார்கள். அங்கும் தமிழனுக்கு தமிழரசு—தனியரசு இல்லை. இங்கும் தனியரசுஇல்லை. நாடாண்ட மொழி நலிந்து வருகின்றது. பாராண்ட இனம் இன்று பயந்து வாழ்கின்றது,

பேச்சளவில் தமிழ் அரசகருமமொழியாக இருக்கிறது. செயலில்?

ந. பொ. ந. அரசன்

சென்னையில் ஒரு சுப்பிரமணியம், இங்கு ஒரு குமாரசாமி! பெயர் எழுத்தில் வித்தியாசமாக இருக்கிறது. இரண்டும் சுட்டிக்காட்டுவது ஒன்றையல்லவா? அது போலத்தான் இருவர் எண்ணமும் செயலும் குறிக்கோளும்! இவர்கள் தான் தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டு செய்யப்போகிறார்களென்று தமிழர் எண்ணுவரேல் ஏமாந்துபோய் விடுவர் என்பது திண்ணம்.

ஒரு பக்கம் கடலும் இன்னொரு பக்கம் தமிழரும் நெருக்குகிறார்கள் நான் எப்படிக் கால் நீட்டிப் படுப்பேன் என்றனும் கைமுனு தன் தாயாரிடம்.

ஆனால் தமிழோ?

வடமொழியாலும், ஆங்கிலத்தாலும், இந்தியாலும், சிங்களத்தாலும் நசுக்கப்படுவதைக் கண்டு யாராவது ஆட்சிக் கட்சியுடன் ஒத்துழைப்போர் கேட்டார்களா? அவ்வித மொழி உணர்ச்சி இருந்தால் செத்த மொழி செங்கோலோச்சுமா?

தமிழ் வருடப் பிறப்பு என்று கூறுகிறார்களே, எது தமிழ் வருடப் பிறப்பு? நள, பிங்கள, ஜய என்ற 63 வருடங்களும் தமிழா? தமிழர்கள் நன்கு சிந்திக்க வேண்டும். 63 வருடமும் வடமொழியல்லவா? பின் அவை எப்படி தமிழ் வருடங்களாகும். வடமொழி வருடங்கள் என்று கூறலாமே. நாமும் தமிழரென்று கூறுவோர் இனியாகிலும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவ்விதம் உயர்தனிச் செம்மொழியான தமிழ் அழிந்து வருகின்றது; தமிழரும் சிதைந்து வருகின்றனர். இனியும் இதனைப் பார்த்துக்கொண்டு பொறுமையுடனிருப்பது நல்லதா என்று ஒவ்வொரு தமிழ் மகனும் எண்ணிப் பார்த்துத் தமிழை வளர்க்கப் பாடுபடவேண்டும்.

தமிழ்தான் ஒதுக்கப்பட்டு வருகிறதென்றால் தமிழர் ஒதுக்கப்படவில்லையா என்ற கேள்வி உண்டல்லவா? இன்றைய அரசியல் சூழ்நிலையை ஆராய்ந்தால் நன்கு விளங்கும். இந்தியருக்கு பிரஜாஉரிமை கொடுக்காத காரணம் அவர்கள் தமிழர்களாக—தென்னாட்டவராக இருப்பதே காரணம்! வட இந்தியருக்கு பிரஜாஉரிமை மட்டுமல்ல பணமனுப்பும் விஷயத்தில் விசேட சலுகை ஏன்? இங்கு வந்துபோகும் மந்திரி, கவர்னர் எல்லாம் யார்? தமிழரா? தென்னாட்டவரா? இதிலிருந்து ஒரு விஷயம் நன்கு விளங்குகிறது. தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் சங்கடம் அதிகமென்று.

இந்நிலையில் இலங்கையில் தமிழர் என்ற இனமே இல்லாது மறைக்கப்பட்டது மாத்திரமல்ல இலங்கை என்ற பெயரே இல்லாது போய்விட்டது மானங்கெட்ட தமிழரால்! "ஈழத்துணவும்" என்று சங்க இலக்கியத்தினுல் புகழப்பட்ட ஈழம் சிங்களமாகிவிட்டது சிங்கள தேசமாகிவிட்டது!

என்ன ஆச்சர்யப்படுகிறீர்களா?

1952ம் ஆண்டு ஒக்ஸ்போட் யூனிவர்சிட்டியினரால் வெளியிடப்பட்ட பாடசாலைக்குரிய தேசப் படப் புத்தகம், ஜான் பார்த்தலோமியோவால் எழுதப்பட்டதன் தமிழ் மொழி பெயர்ப்பு நான்காம் பதிப்பை எடுத்துப் பாருங்கள்! இலங்கை என்ற சொல் காணப்படுகிறதா என்று. புரட்டிப் பாருங்கள்! அப்பொழுது தெரியும்உண்மை!

இது மொழிபெயர்க்கப்பட்டது தமிழரென்று சொல்பவர்களால் என்பது நன்கு விளங்கும். உண்மைத் தமிழரென்றால் இவ்விதம் துரோகச் செயல் செய்யமாட்டார்கள். அந்த மொழிபெயர்ப்பு ஒன்றுக்கும் உதவாதது. மட்டக்களப்பு, பட்டிகலோ என்றும் பதுளை பதுள என்றுமல்லவா மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஆகவே தமிழ் பேசும் பெருமக்கள் ஏறுபோல் நடப்பதற்கும் அவர் தம் மொழி மேன்மையுடன் பாரெல்லாம் முழங்குவதற்கும்' தமிழர் வாழ்வு நலம் பெறுவதற்கும் தமிழர்க்கு தனியரசு மிகமிகத் தேவை.

வருங்கால வாலிபர்களே இதற்காக இன்றே முயற்சி செய்யுங்கள்,

வாழ்க தமிழ்!



"விஞ்ஞைபாஜீயின் வாழ்க்கை"

பக்கம் 24. விலை அணு 2, வெளியிடுபவர்: சர்வோதயப் பிரசுராலயம். தஞ்சாவூர். காந்தியடிகளுக்குப் பின், இன்றைய உலகில் அஹிம்சையின் அவதாரமாகக் காட்சியளிக்கும் ஒரே ஒருவர் — விந்தை மனிதர் விஞ்ஞைபாஜீ. உலகம் கண்டறியாத வண்ணம், உழைக்காது உயர்ந்த பணக்காரர் உள்ளங்களையெல்லாம் அன்பின் மூலம் கவர்ந்து, லட்சக் கணக்கான ஏக்கர்விளைநிலங்களைத் தானமாகப் பெற்று உழைக்க மனமிருந்தும் வகையின்றி வாழ்விழந்து வந்த எண்ணற்ற ஏழை மக்கட்கு வழங்கிவரும் பூதான இயக்கத்தின் மூலம் இன்று புதுயுகப் புரட்சி சீவந்தராய் பொலிபவர் விஞ்ஞைபாஜீ.

அவரது வாழ்க்கையைச் சுருக்கமாகக் கூறியது இச் சிறு நூல். முற்பகுதியில் இவரது வாழ்க்கைக் குறிப்பைத் தருகின்றனர் பதிப்பகத்தார். பிற்பகுதி, விஞ்ஞைபாஜீயோடு இளமைக் காலமுதல் நட்புரிமை கொண்ட, ஸ்ரீ கோபால் ராவ் காணே எழுதிய "விஞ்ஞைபாதரசன்" என்ற புத்தகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இப்பகுதி விஞ்ஞைபாஜீயின் விசித்திர குணங்களைச் சித்தரிக்கும் பல ரஸமான சம்பவங்களைத் தொகுத்து, நடையில் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது.

உயர்ந்த இலட்சியத்துக்காகப் பெரும் பகுதிக் காலத்தை அகநோக்கிலேயே கழித்த இத்தகைய மகான்களது வரலாறு விரிவாக நமக்கு வேண்டும். அதையும் அவர்களே எழுதவேண்டும். இல்லையெனில் உள்ளதை உள்ளபடி அறிய முடியாது. "என் சரித்திரத்தை யாரும் எழுத வேண்டாம்!" என்று விஞ்ஞைபாஜீயே கூறுவது. அதற்காகத்தான் போலும்! இவரது விரிவான சரிதம் வெளிவரும்வரை, இச்சிறு நூல் தமிழருக்கு மிகவும் பயனுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

"இளந் தமிழன்"

மலர் 3, இதழ் 2. (மலர்க் குழு) ஆசிரியர்: சி. சரவணபவன். பக்கம் 84. (விலை குறிக்கப்படவில்லை) வெளியிடுவோர்: செல்லூர் தமிழ் மன்றம், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி, தாம்பரம்.

வருங்காலத் தமிழுலகின் வாழ்வு மகிழ்வுக்குரியதாய் அமையும் என்பதைக் காட்டுகிறது. இந்த "இளந் தமிழன்" வருகை. கல்லூரி மாணவர் வெளியீடு' என்பதாக இதை நம்ப முடியவில்லை. அனுபவமிக்க பத்திராசிரியர்களின் அமைப்புத் திறனும், எழுத்துத் திறனும் இதில் காணப்படுகின்றன.

"கற்றோர் மனதிலே களி நடம்புரிய விழைகின்றன். பெரியோரின் பொன்மொழியைப் பணிவுடன் கேட்டான். இவன் சிந்தனையிலே —சொலலிலே — செயலிலே அஞ்சாமை இருக்கின்றது!" என்று, தமிழன்னைக்கு இளந்தமிழ' னைக் 'காணிக்கை' யாக்கும் பாங்கிலேயே, ஆசிரியரின் பண்பு பரிமளிக்கின்றது.

கோ. சண்முகசுந்தரம். B. A. எழுதிய, "செவ்வாய் மனிதன்" என்ற சிறு நாடகம் இன்றைய ஒரே உலகக் கொள்கை, எதிர் காலத்தில் விஞ்ஞான வளர்சியின் காரணமாக, (பூமி, சந்திரன், செவ்வாய் முதலிய எல்லா மண்டலங்களும் இணைந்த) 'ஒரே மண்டல' கொள்கையாகப் பரிணமித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை ரஸமாய் எடுத்துக் காட்டுகிறது. மு. ராமலிங்கம், கலைச் செல்வி மாதவி "மாசுடை மங்கையா?" என்ற கட்டுரையில் இளங்கோவின் வாய் மொழியைக் கொண்டு, மாதவியின் கூற்றுகவே மறுத்திருக்கிறார். "யார் தவறு?" என்ற கேள்வியின் மூலம், 'கலித் தொகை' யின் ஓர் அழகிய காதல் பாவையையே கண்முன் நிறுத்துகிறார். அட்டைப் படக் கதையாக, அழகு, சிதம்பரம். பக்தி மிகுந்தபோதும் இராமன் மீதும், பகுத்தறிவும் நேர்மைப் பண்பும் கொண்டு நோக்கத் தவறுத செந்தமிழ்மேதை 'கன்னித் தமிழ்க் கவிஞன் கம்பன்" என்பதைத் தெளிந்த நடையில் காட்டுகிறார் சி. சரவணபவன். பாரதியின் புதுமைப் பெண் கண்ணேட்டத்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூதூர்த் தொகுதியை சிங்களத் தொகுதியாக்க

ஆட்சியாளரின் திட்டம்

கந்தளாயிலும்-அல்லையிலும்

சிங்களக் குடியேற்றம் நடப்பதின் அந்தரங்கம்

திருமணத்திற்கு அயலூர் போனவர் திரும்பி வந்தபோது வீட்டில் சிங்களக் குடும்பம் கண்டு திகைத்த கதை

இதுபோல பல சிந்தை உருக்கும் காட்சிகளை இந்த குடியேற்ற திட்டங்களில் காணலாம்

வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தத்தளித்த ஏழை விவசாயிகளையும், ஈரலிப்புப் பிரதேசத்திலுள்ள உபரிஜனங்களையும், நாட்டின் பல பாகங்களிலும் குடியேற்றத் திட்டங்களை உற்பத்தி செய்து குடியேற்றியது அரசாங்கம். இக்குடியேற்றத்திட்டத்தில் 1954ம் ஆண்டில் 3407 குடும்பங்களை இலங்கையின் பல பாகங்களிலிருந்து திரட்டி, பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றியது. இந்த 3407 குடும்பங்களில் கந்தளாய், அல்லை ஆகிய குடியேற்றத் திட்டங்களில் குடியேறிய குடும்பங்கள் 1350ம் காணி இலாகாவின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மனித வாழ்க்கைக்கு வேண்டிய மூலப்பொருட்களையும், சமூக வாழ்க்கைக்கு வேண்டிய கருவிகளையும், முழுக்க அடையவில்லை என கூறப்படுகிறது.

உண்மையில் ஆட்சியாளர்கள் அடைந்த சுதந்திரத்தை ஆட்சி பீடத்தை ஆக்கிய பாமரர்களும், பாட்டாளிகளும் கண்டிப்பான முறையில் அனுபவிக்க வேண்டுமல்லவா? ஆனால் பெற்ற தாய் தன் குழந்தை முன்னேறி மக்கள் பணியிலீடுபட்டு, அந்த மகவை மக்கள் புகழ, மனம் களிக்க—பார்த்து குதூகலமடைவாள். இதேபோல ஆட்சி பீடத்தை நிறுவிய இலங்கை மாதா தன் குழந்தைகளாகிய ஆட்சிபீட அதிகாரிகள் உண்மை ஜனநாயக முறையில் இனவெறி, சாதித்துவேஷம், வகுப்பு வேற்றுமை ஆகியன மலியாமல் இலங்கைப் பிரஜைகளுக்குதொண்டாற்ற வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் ஈழநாட்டின் மற்ற குழந்தையாகிய தமிழினத்துக்கு தனிப் பெரும் துரோகம் செய்ய திட்டவட்டமான வேலைகளிலீடுபட்டு முதலாவதாக அதைக் குடியேற்றத் திட்டங்களில் சாதித்தது வருந்தத்தக்க விஷயமாகும். கந்தளாய்—அல்லையாகிய குடியேற்றத் திட்டங்களில் அன்றும் இன்றும் சிங்களவர்களைப் பரப்பி மூதூர் தொகுதியை சிங்களத் தொகுதியாக்க அரசாங்கம் எண்ணி விட்டதை நினைத்தால் இந்த அரசியல் நெருக்கடியான நிலையில் உள்ளூர் வாசிகளுக்கு வெந்த புண்ணில் வேல் பாச்சியது போலிருக்கின்றது.

1954ம் ஆண்டில் அல்லையில் 500 குடும்பங்களைக்குடியேற்றி இவர்கட்காக நெற் காணி 1500 ஏக்கரும், மேட்டுப் பிரதேசக் காணி 500 ஏக்கரும் அரசாங்கம் அளித்தது. இதேபோலவே கந்தளாயிலும் 850 குடும்பங்களை குடியேற்றி 2550 ஏக்கர் நெல் காணியும் 1700 ஏக்கர் மேட்டுப் பிரதேசக் காணியும் அளித்தது அரசாங்கம். முதல் குடியேற்றத் திட்டத்தில் குடியேறிய ஏழை விவசாயிகட்கு 5 ஏக்கர் நீர்ப்பாசனமுள்ள காணியும் 3 ஏக்கர் மேட்டுப் பிரதேசக் காணியும் கொடுத்தது அரசாங்கம். ஆனால் இரண்டாவது தரத்தில் குடியேற்றப்பட்ட ஏழை விவசாயிகட்கு 3 ஏக்கர் நீர்ப்பாசனக்காணியும், இரண்டேக்கர் மேட்டுப் பிரதேசக் காணியும் கொடுத்தது அரசாங்கம். ஆனால் முந்தியவர்கட்கு கூடுதலாகவும், பிந்தியவர்கட்கு குறைதலாகவும் காணிகள் வழங்கப்பட்டதற்கு காரணம் முந்திய குடும்பமொன்றுக்கு 5 ஏக்கர் நீர்ப்பாசன முள்ள காணியும், 3 ஏக்கர் மேட்டுப் பிரதேசக் காணியும் மிக கூடுதலான ஊதியம் கொடுப்பதை அரசாங்கம் கண்டு பிந்திய மாதிரி செய்ததே.

காணிலாகாவின் சட்டப்படி ஒரு குடியேற்றத் திட்டத்தில் ஏழை விவசாயிகளைக் குடியேற்றுமுன் காணிலாகா காடுகளைத் துப்பரவு செய்து குடியேறும் குடும்பங்கட்கு வீடுகளையும், கூட்டுறவு சங்கக் கடைகளையும், பாடசாலைகளையும், மலக்கூடங்களையும், மருந்துச் சாலைகளையும், கிணறுகளையும் ஆக்கிக் கொடுக்கவேண்டும் அரசாங்கம். இதன்பின்தான் குடியேற்றவாசிகளை குடியேற்ற வேண்டும் அரசாங்கம். இச்சட்டப்படி அரசாங்கம் ஏழை விவசாயிகளை குடியேற்றமுன் அரசாங்கம் மேற்குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றவில்லை. இதுமட்டுமல்லாமல் உள்ளூர் வாசிகளுக்கு அதிக சலுகை காட்டப்படும் முன்னும் பின்னும் என்றும் சொல்லி விட்டு சாதிக்கத் தவறிவிட்டது அரசாங்கம். இவைகளில் இன்றும் கந்தளாயிலும் அல்லையிலும் குடியேற்றப்பட்ட ஏழைகள் அவல நிலையடைந்திருக்கின்றனர்.

முதலாவது குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட ஒரு ஏழை விவசாயி தனக்கு கொடுக்கப்பட்ட ஐந்து ஏக்கர் நீர்ப்பாசன காணியில் வேளாண்மைச் செய்தும் மூன்று ஏக்கர் மேட்டுப் பிரதேசக் காணியில் தோட்டங்கள் செய்தும் பலமாதங்களாக குடியேற்றத் திட்டத்திலேயே குடும்பங்களுடன் குதூகலமாக வாழ்க்கைத் தேரை ஓட்டிச் சென்றனர். இந்தச் சமயத்தில் கிண்ணியாவில் தன் மகளுக்குத் திருமணம் நடாத்துவதற்காக கிண்ணியா வந்தனர். இங்கு வந்து திருமணம் முடிந்து ஒரு கிழமையளவில் சுணங்கி விட்டு மேற்படி கந்தளாய்க்குச் சென்றனர். அங்குசென்றதும் இவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட வீட்டில் வேறு ஒரு சிங்களக் குடும்பம் வசிப்பதைக் கண்டார்கள். இந்நிலையை குடியேற்றத் திட்ட அதிகாரியிடம் சென்று முறையிட்ட பொழுது அவர் என் இஷ்டம் என்று கூறினர்.

இவர்கள் அழுத கண்களுடன் குடியேறிய குடும்பத்தைக் கெஞ்ச அவர்கள் இவர்களைத் துரத்திவிட்டனர். பின் எத்தனையோ விண்ணப்பங்கள் அரசாங்கத் திற்கு சமர்ப்பித்தும் அரசாங்கம் ஆவன செய்யவில்லை. இதேபோல இன்னும் எத்தனையோ குடும்பங்கள் இந்நிலையில் ஆக்கப்பட்டுக் கஷ்டப்பட்டிருக்கின்றனர்.

படிப்படியாக அல்லையிலும் கந்தளாயிலும் சிங்களவர்களை இன்று எண்ணிக் கணக்கெடுக்க முடியாத முறையில் பரப்பிவிட்டது அரசாங்கம். இதனால் உள்ளூர்வாசிகள் சுபீட்சமாக வாழ்வதற்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்களின் செய்த சதித் திட்டத்தினால் கிண்ணியாவாசிகளின் மாடுகள், கால்நடைகள், ஆடுகள் ஆகியன மேய்வதற்கு மேச்சல் நிலமில்லாமல் பெரும் சங்கடமாகயிருக்கின்றது. துப்பரவு பண்ணிய திடலுக்கு கால்நடைகள் சென்றால் துப்பாக்கிகொண்டு சுட்டுத்தள்ளுகிறார்கள். இப்படிச் சிங்களவர்கள் தவறுதலாக குடியேற்றப்பட்ட உள்ளூர்வாசிகளின் கால்நடைகளும் சுடுபடுகின்றன. இதைத் தடுத்து மேச்சல் நிலம் தயாரிக்க அரசாங்கம் முன்வரவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் துன்புறுகின்றனர். எனவே தமிழினத்தின் முற்போக்குக்குப் பாடுபடும் தலைவர்களே! இவர்களின் நிலையைத் திரும்பிப் பாருங்கள்.

ஹரூருலுவீவ, கட்டுப்பொத்த, கந்தலாயா, சொரபொரவீவ, இரணமடு ஆகிய குடியேற்றத் திட்டங்களில் செய்து கொடுக்கப்பட்ட சௌகரியங்களை அரசாங்கம் ஏன்? கந்தளாயிலும் அல்லையிலும் அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை.

இன்ஷூரன்ஸ் சம்பந்தமானதா .....

கலந்தாலோசியுங்கள்!

வான் காட்

குறைந்த சிலவில் நிகரற்றசேவை

★ மோட்டார். ★ ஆயுள்.

★ தொழிலாளர் நஷ்டஈடு.

கே. கிருஷ்ணசாமி

பிரதம ஏஜன்ட்

வான்காட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

மன்சூர் கட்டடம்

மெயின் வீதி, கொழும்பு—11.

போன்: 5054 தந்தி: கார்டியன்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

கவிதைக் கடிதம்:

மார்புக்கு விருந்து!

"பூலாச்சேனை ஆப்தீன்"

அன்பீன்ற என்னருமை அத்தா னுன்றன்
அடிவணங்கி ஆமீனுள் எழுது மிந்த
அஞ்சலிலென் நெஞ்சினிலே மிஞ்சி வந்த
அன்பையெல்லாம் அள்ளி யுனக் கனுப்புகின்றேன்

கானமயில் வானமுகில் கண்டாற் போல
கதிரவனின் விரிகதிரில் கஞ்சம் போல
காத்திருந்த கயவின் கண் லைலா போன்றுன்
கடிதத்தைக் கண்டுமனங் களித்தேன் அத்தான்

அச்சத்தைத் துச்சமென மதித்து நாளும்
அக்கிரமச் செயல் கட்கோர் அணையுங் கட்டி
அரிவையர் தம் உரிமைகளைப் பெருமை யோடு
அவனியெங்கும் பவனிவரச் செய்வே னென்றுய்

உன்போன்ற உத்தமர்கள் உதித்து விட்டால்
உரிமையின்றி வாடுகின்ற ஊமைப் பெண்கள்
மின்போன்ற தமதெழிலைப் பாணம் வைத்து
மிக எளிதில் சீதனப்பேய் வீழச் செய்வார்

கண்போன்ற அத்தானே! உந்தன் அஞ்சற்
கருத்தெந்தன் கருத்துக்கோர் விருந்தாயிற்று
விண்போன்று பரந்திட்ட நின்தோ ளெந்தன்
விம்முகின்ற மார்புக்கு விருந்தா காதோ?

சிங்கப்பூர் தேர்தல்கள்

இடதுசாரிகள் வெற்றி

சிங்கப்பூரின் புதிய சட்டசபைக்கு நடந்த தேர்தல்களில், உடனடியாக சுதந்திரம் அளிக்க வேண்டும் என்றும், கம்யூனிஸ்டு எதிர்ப்பு சட்டங்களை ரத்து செய்ய வேண்டுமென்றும் கோரும் இடதுசாரிக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

போட்டியிட்ட மொத்தம் 25 ஸ்தானங்களை இடதுசாரிகள் கைப்பற்றி விட்டன. (சோஷலிஸ்ட் லேபர் முன்னணி 10 மக்கள் செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயபாஷை ஆசிரியர்களின் கண்களில் மண்தூவும் புதிய சம்பள உயர்வு

முன்னூறு பேருக்கு 'கிண்ணிப் பிச்சை' கொடுத்து முப்பதாயிரம் பேரை ஏமாற்றுவதா?

சுதந்திர ஆட்சியிலும் அன்னியன் கையாண்ட மொழி ஒதுக்கல் கொள்கை

யூ. என். பி. ஆட்சியை மாற்றுது தமிழ் சிங்கள ஆசிரியர்களுக்கு விமோசனமில்லை

(எஸ். வி. பி. பிள்ளை, மேல்மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்க முன்னாள் செயலாளர்)

இலங்கை ஆங்கில ஆட்சியின் கீழ் இருந்த காலத்திலே சுயபாஷா ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த சம்பளத் திட்டம் வகுக்கப்பட்டது தமது பாஷையை வளர்ப்பதிலும், தமது ஆட்சியை ஸ்திரமாகத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருப்பதிலும் ஆர்வம் கொண்ட ஆட்சியாளர் ஆங்கில ஆசிரியர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் சுயபாஷா ஆசிரியர்களிலும்பார்க்க உயர்ந்த சம்பளததை வகுத்தனர். இதன் காரணமாக நாட்டிலே சுயபாஷா ஆசிரியர்கள் மிகக் குறைந்த அந்தஸ்தில் வைத்துக் கணிக்கப்பட்டனர். இவ்விழி நிலையைப் போக்கப் பல வருடங்களாக சுயபாஷா ஆசிரியர் சங்கங்கள் போராடி வந்தன. பாஷை வேறுபாடற்ற நியாயமான சம்பளம் வகுக்கப்பட வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கைகளை அந்நிய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. 1946-ம் ஆண்டு தரவாரிக் கமிஷனால் வகுக்கப்பட்ட சம்பளத் திட்டத்தில் ஒரு பியோனுக்கும் சுயபாஷா ஆசிரியனுக்கும் ஒரே மாதிரியான சம்பளம் அளிக்கப்பட்டது. ஆனால் ஆங்கில ஆசிரியனுக்கு சுயபாஷா ஆசிரியனுடைய சம்பளத்தைப் பார்க்க மூன்று மடங்கு அதிகமான சம்பளம் வழங்கப்பட்டது. இதை எதிர்த்து சுயபாஷா ஆசிரிய சங்கங்கள் கிளர்ச்சி செய்தன. இதன் பயனாய் அக்காலத்திலிருந்த அரசாங்க சபை பயிற்றப்பட்ட ஆசிரியனுடைய சம்பளத்தை 69 ரூபா தொடக்கம் 150 ரூபா வரை அதிகரித்தது. அதே நேரத்தில் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருக்கு 140 ரூபா தொடக்கச் சம்பளமாக இருந்தது. இது முற்றிலும் பாஷை வேறுபாட்டில் அமைக்கப்பட்ட ஒரு சம்பளத் திட்டமாகும். சம்பளத் திட்டத்தைவிட வேறு அநேக வழிகளில் ஆங்கில—சுயபாஷா ஆசிரியருக்கிடையில் வித்தியாசம் காட்டப்பட்டது. அவற்றில் முக்கியமானவை:

1. ஆசிரிய நியமனத்தில் வித்தியாசம்: 15 பிள்ளைகளுக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படும் பொழுது, 30 பிள்ளைகளுக்கு ஒரு பயிற்றப்பட்ட சுயபாஷா ஆசிரியர் நியமிக்கப்பட்டார்.

2. உயர்ச்சி வித்தியாசம்: ஒரு பயிற்றப்பட்ட இரண்டாம் வகுப்புத் தராதரமுடைய ஆங்கில ஆசிரியர் 4 வருட சேவைக்குப் பின் முதலாம் வகுப்பிற்கு உயர்ச்சியடையச் சுயபாஷா ஆசிரியர் 5 வருடத்தின பின் உயர்ச்சியடைகிறார்.

இவ்விதம் தேசிய பாஷையைப் போதிக்கும் சுயபாஷா ஆசிரியர் ஆங்கில ஆசிரியரிலும் பார்க்க ஒரு குறைந்த வகுப்பினராக அந்நிய ஆட்சியில் மதிக்கப்பட்டதைப் பற்றி எவரும் அக்காலத்தில் ஆச்சரியப்படவில்லை. ஆனால் நாடு சுதந்திரமடைந்ததாகச் சொல்லப்பட்டது. தேசிய பாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. ஆனால் சுயபாஷா ஆசிரியருடைய நிலை பழைய பல்லவிதான். 1951ம் ஆண்டு இலங்கை அரசாங்கம் ஒரு சம்பளத் தரவாரிக் கமிஷனை நியமித்தது. இக்கமிஷன் ஆசிரியர்களுடைய சம்பளத் திட்டத்தை ஆராய்ந்தது. ஆங்கில ஆசிரியர் சங்கங்களும் தமது சம்பளத் திட்டத்தைச் சமர்ப்பித்தன. ஆங்கில ஆசிரியர் சங்கத்தை கமிஷன நேர்முகமாக அழைத்துச் சம்பளத் திட்டத்தைஆராய்ந்தது. ஆனால் சுயபாஷா ஆசிரியர் சங்கங்கள் கமிஷனால் புறக்கணிக்கப்பட்டன. இதன் பின் 1953ம் ஆண்டு சம்பளத் தரவாரிக் கமிஷன் ஒரு சம்பள அறிக்கையை வெளியிட்டது. இச்சம்பள அறிக்கையை பௌலியர் அறிக்கையென்று அழைத்தனர்.

பௌலியர் சம்பள அறிக்கை

1953ம் ஆண்டு வெளியான பௌலியர் சம்பள அறிக்கை சுயபாஷா ஆசிரியர்களை முற்றிலும் அவமதிப்பதாயிருந்தது. அக்காலத்தில் சுயபாஷைக் கல்வியை விருத்தி செய்யப் போகிறேன்என்று பாசாங்கு செய்துகொண்டு கருமமாற்றிய ஓர் ஆங்கில வித்தியாதிபதியின் இரகசியச் சாட்சியைக்கொண்டு கமிஷன் இம்முடிவிற்கு வந்ததாக கூறப்பட்டது. பயிற்றப்பட்ட சுயபாஷா ஆசிரியர்களிலும் பார்க்க பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் தரத்தில் கூடியவர்களென்றும் இதன் காரணத்தால், சுயபாஷா ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளம் வகுத்திருக்கிறோம் என்றும் சம்பளக் கமிஷன் அறிக்கை கூறியது. ஆனால் உண்மை நிலை அப்படியன்று. பாஷை அடிப்படையில் சம்பளம் வகுக்கப்பட்டதென்று கூறினால் அதை ஒருபோதும் இலங்கை மக்கள் ஏற்கமாட்டார்களென்று நன்கறிந்த கமிஷன் சுயபாஷா ஆசிரியர்கள் தரத்தில் குறைந்தவர்களென்ற புதிய சித்தாந்தத்தைக் கண்டு பிடித்தது. இதற்கு வெள்ளைக்கார வித்தியாதிபதியும், ஆங்கில ஆசிரியர்சங்கமும் பக்கபலம் கொடுத்தன. ஆனால் அவர்கள் கூற்று முழுவதும் உண்மையற்றது என்பதை அவர்கள் அறிக்கையே எடுத்துக் காட்டியது:

சுயபாஷா ஆசிரியர்கள் தரத்தில் குறைந்தவர்களென்பதை நிரூபிக்க கமிஷன் கூறிய காரணங்கள் பின்வருமாறு:

1 கடந்த காலத்தில் சுயபாஷாகல்லூரிகளில் பயின்ற ஆசிரியர்களை இப்பொழுது மகரகமையிலிருக்கும் அரசாங்கக் கல்லூரியில் பயின்றவர்களோடு ஒப்பிட முடியாது.

2 எஸ். எஸ். ஸி. பரீட்சை ஆங்கிலத்தில் சித்தியெய்துபவர்கள் தமிழ் அல்லது சிங்களத்தை இரண்டாவது கட்டாய பாஷையாக எடுக்கிறார்கள். ஆனால் எஸ். எஸ். ஸி. பரீட்சை தேசிய பாஷைகளில் எடுப்பவர்கள் ஆங்கிலத்தை கட்டாய பாடமாக எடுப்பதில்லை.

மேலே கூறிய காரணங்களை ஒவ்வொன்றாக ஆராயுமிடத்து சுயபாஷையை வேண்டுமென்றே ஒதுக்கித்தள்ள எண்ணிய சம்பளக் குழு அதை மூடி மறைப்பதற்கு சில நொண்டிச் சாட்டுகளைத் தேடிப் பிடித்திருக்கிறதென்பது தெரியவரும். உண்மையில் சம்பளக் குழு, [illegible] மையற்ற நோக்கும் இல்லாதிருக்குமானால் சுயபாஷா ஆசிரியர்களின் பிரதிநிதிகளைத் தம்முன் சாட்சி சொல்ல அழைத்திருக்கும். தம் முன் சாட்சி சொல்லும் சந்தர்ப்பத்தை சுயபாஷா ஆசிரியர்களுக்கு கொடாமல் தட்டிக்கழித்து ஆங்கில ஆசிரியர்களின் பிரதிநிதிகளை மாத்திரம் தம்முன் சாட்சி சொல்ல அழைத்தது, சம்பளக் குழுவினரின்பாஷைத்துவேஷத்தைவெள்ளிடை மலையாக எடுத்துக்காட்டியது. இவ்விதம் பாஷைத் துவேஷமுடைய குழு மேலே கூறிய நொண்டிக் காரணங்களைக் காட்டிச் சுயபாஷா ஆசிரியர்கள் தரத்தில் குறைந்தவர்கள் எனறு கூறிய பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அக்குழு கூறிய காரணங்களை ஒவ்வொருவரும் ஆராயவேண்டியது இன்றியமையாத கடமையாகும்.

சுயபாஷா கல்லூரிகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும், மகரகமையிலுள்ள ஆங்கிலக் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் ஒப்பிட முடியாது என்று கூறும் சம்பள நிர்ணயக் குழு 1942ம் ஆண்டிற்கு முன் பாட விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளிவந்த ஆசிரியர்களையும், அதன்பின் பாட போதனா முறையை அடிப்படையாகக் கொண்டுமகரகமையில் இருந்து வெளிவரும் ஆசிரியர்களையும் சமமாக ஒப்பிடமுடியும் என்று துணிந்து கூறுமா? ஆங்கில ஆசிரியப் பயிற்சிக்குள்ளேயே காலத்திற்கேற்ப பலவிதமான தரங்கள் உண்டு. ஆனால் அவைகள் கமிஷனர் ஆராய்விற்குத் தென்படவில்லைபோலும். உதாரணத்திற்கு பி. ஏ. பட்டதாரிகளுடைய தரத்தை எடுத்துக் கொள்வோம். இந்திய சர்வகலாசாலை, இங்கிலாந்திலுள்ள கேம்பிரிச் சர்வகலாசாலை, இலங்கைச் சர்வகலாசாலை, அமெரிக்காவிலுள்ள யேல் சர்வகலாசாலை ஆகியவற்றில் பட்டம் பெறும் எல்லா பி. ஏ. பட்டதாரிகளும் பாடவாரியாக ஒரே தரத்தை உடையவர்களல்லர். ஆனால் பி. ஏ. என்ற தரத்தை வைத்து எல்லோருக்கும் ஒரே சம்பளம் கொடுக்கப்படுகிறது. இலங்கையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மட்டில் ஏன் கல்லூரிகளுக்கிடையில் தரத்தில் வித்தியாசம் காட்டவேண்டும்?

பாடத் திட்டத்திலும், பயிற்சி முறையிலும் சுயபாஷா பயிற்சிக் கல்லூரிகளுக்கும் ஆங்கில பயிற்சிக் கல்லூரிகளுக்கும் எவ்வித வித்தியாசமும் சிடையாது. ஆனால் சுற்றுடலிலும், கல்வியைச் சுலபமாகப் பெறக்கூடிய வாசிகசாலை விஞ்ஞானசாலை ஆகியவற்றிலும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவற்றைக் கொண்டு தரத்தை மதிக்க முடியாது. ரூயல் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன், கிராமத்திலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவனிலும் பார்க்க எவ்வளவோ அதிகமான கல்விச் சாதனங்களைக் கொண்டிருக்கிறான். ஆனால் இரு பாடசாலையிலும் இருந்து சித்தியெய்தும் எஸ். எஸ். ஸி. மாணவனுடைய தரம் ஒரே மாதிரித்தான் கணிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் ஆங்கிலப் பயிற்சிக் கல்லூரிகளிலும் சுயபாஷா பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆசிரியர்களுக்குப் பாட விஷயங்களையே அடிப்படையாக வைத்துப் பயிற்சி அளிக்கப்பட்டதை இம்முறையை 1943ம் ஆண்டு வெளிவந்த கல்வி விசேஷ விசாரணைச் சபையாரின் அறிக்கை குறைகூறியது. இச்சபையாரின் சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு 1944-ம் ஆண்டு ஆங்கில சுயபாஷா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு ஒரு பொதுவான பாடத்திட்டம் அமைக்கப்பட்டது.

சம்பள நிர்ணயகுழு கூறிய மற்றொரு காரணம் எஸ். எஸ். ஸி ஆங்கிலத்தில் சித்தியடைபவர்கள் சிங்களம் அல்லது தமிழ் ஒரு கட்டாய பாடமாக எடுக்க சுயபாஷையில் பரீட்சை எடுப்பவர்கள் ஆங்கிலத்தை ஒரு கட்டாய பாடமாக எடுப்பதில்லை என்பதாகும். இது மக்களையும் சுயபாஷா ஆசிரியர்களையும் ஏமாற்றக் கூறிய மற்றொரு காரணமாகும். 1944ம் ஆண்டிற்குமுன் எஸ். எஸ். ஸி. ஆங்கிலத்தில் சித்தியடைபவர்களுக்கு தமிழ் அல்லது சிங்களம் ஒரு கட்டாயபாடமாக இருக்கவில்லையே. இதைக் கமிஷன் அறியாதது வருந்தத்தக்கதாகும்.

பௌலியர் சம்பள அறிக்கை முற்றிலும் பாஷைவேறுபாட்டையே மறைமுகமாக வைத்து அமைக்கப்பட்டது என்பதே பொருத்தமானதாகும். சர்வகலாசாலையில் தமிழ்— சிங்கள டிப்புளோமாப் பரீட்சையில் சித்தியெய்திய ஆசிரியர்களுக்குள்ளே தமிழ் எஸ். எஸ். ஸியுடன் சித்தியடைந்தவர்களுக்கு ஒருவித சம்பளமும், ஆங்கில எஸ். எஸ். ஸியுடன் சித்தியடைந்தவர்களுக்கு இன்னோர் சம்பளமும் வகுத்ததே பௌலியர் சம்பள அறிக்கையின் பாஷை வேறுபாட்டை தெளிவாகக் காட்டுகிறது.

1953-ம் ஆண்டு வெளியான பௌலியர் அறிக்கையை கடந்த இரண்டு வருட காலமாக அரசாங்கம் ஆராய்ந்தது. கடைசியில் அவ்வறிக்கையை சில திருத்தங்களுடன் 1-4-55 வெள்ளிக்கிழமை நிதிமந்திரி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். புதிய திருத்தத்தின்படி சுயபாஷா ஆசிரியர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கப் போகின்றதென்று உள்ளூர் பத்திரிகைகளும் அரசாங்கமும் பிரமாதப் படுத்தின. ஆனால் அறிக்கையின் நிலைமைவேறு. சுயபாஷ ஆசிரியர்களுக்குத் திரும்பவும் ஏமாற்றம்தான்.

புதிய சம்பள அறிக்கை

சமீபத்தில் வெளியான திருத்தப்பட்ட புதிய சம்பள அறிக்கையில் சுயபாஷா ஆசிரியர்களுக்கு அதிக சம்பளத்தை வகுத்திருப்பதென்பது தப்பான அபிப்பிராயமாகும். ஆனால் அவ்வறிக்கை ஒரு சிறிய முன்னேற்றத்தை மாத்திரம் கொண்டிருக்கிறது. சிறியபாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கும் பத்து ஆசிரியர்களுக்கு மேல் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளின் பிரதம உதவி ஆசிரியருக்கும் ஒரு புதிய சம்பளத்திட்டத்தை வகுத்திருக்கிறது. இப்புதிய விகிதம் பின்வருமாறு:—

(9-ம் பக்கம் பார்க்க)

பம்புகள்



விவசாயம், வீட்டுப் பாவனை, அல்லது கைத்தொழில் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பாவனைக்குகந்த

டீசல், மண்ணெண்ணெய், பெட்ரோல் ஆகிய எண்ணெய்களில் ஓடும் எஞ்சின்கள்.

மின்சார சக்திமூலம் அல்லது இயந்திர சக்திமூலம் வேலை செய்யலாம்.

இலங்கைக்கு கீழ்க்கண்டவைகளின் சோல் ஏஜண்டுகள்:

DEMING & MARELLI,

காரியாலயமும் காக்ஷி அறைகளும்

"மஹாராஜா கட்டிடங்கள்"

கலந்துகொள்ளுங்கள்:

மோரிஸ் ரோச் லிமிட்.

பாங்ஷால் வீதி, புறக்கோட்டை, கொழும்பு.

போன்: 5148/6246.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. நூறுநின் காத்தான்குடி

கே: பெண்கள் அரசாங்க சேவையில் ஈடுபடலாமா?

ப: அரசாங்க சேவையில் ஈடுபடலாம். ஆனல் அங்கு அவர்கள் அங்க சேவையில் ஈடுபட்டுவிடாதபடி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஃ

த. முருகுப்பிள்ளை, குறுமன்வெளி

கே: தமிழ்நாட்டிலே சிறந்த தேவாலயம் எது?

ப: அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

கே: பெண்களுக்கு அழகு தருவது இயற்கை அழகா? செயற்கை அழகா?

ப: இரண்டுமல்ல; அகத்தின் அழகு.

ஃ

எம். ஐ. பூபாலசிங்கம் கோண்டாவில்

கே: பூரணசந்திரன் உதிக்கும்போது மக்கள் அதைப் பார்ப்பதற்கு காரணம் என்ன?

ப: எந்த விஷயத்திலும் பூரணத்துவம் அடைய வேண்டும் என்பது மனித ஆசை. நிறைவேறுத இந்த ஆசையை அவர்கள் பூரணத்துவம் அடைந்த சந்திரனைப் பார்ப்பதன்மூலம் தீர்த்துக் கொள்ளுகிறார்கள்.

ஃ

எம். சிதம்பரம் பண்டாரம், அட்டன்

கே: அந்தக்காலத்து துரியோதனன் சபைக்கும் இந்தக்காலத்து மந்திரி சபைக்கும் என்ன சம்பந்தம்?

ப: அந்தக்காலத்து துரியோதனன் சபையில் திரௌபதி துகிலுரியப்பட்டாள். இந்தக்காலத்து மந்திரி சபையில் நீதி தேவதை துகிலுரியப்படுகிறாள்.

ஃ

ஐ. என். கே. பெரியான், கோண்டாவில்

கே: ஒரு பெண் குடும்பத்தின் அரசியானல் அவள் சிங்காசனம் எது? படை எது? கொடி எது? குடை எது? குடிமக்கள், யார்?

ப: சிங்காசனம் படுக்கையறைக் கட்டில், படை கண்ணீர், கொடி முன்தானை, குடை முடிமயிர், குடி கணவன்.

கே: மனிதனுக்கு வாழ்க்கையில் எத்தனை ஏமாற்றங்கள்?

ப: வருஷத்துக்கு 365 ஏமாற்றங்கள். ஆனல் நான்கு வருடத்துக்கொரு முறை 366 ஏமாற்றங்கள்.

ஃ

வ. செல்லையா, மட்டக்களப்பு

கே: காதலறியா வாலிபமாயிருப்பதைவிட இறப்பது மேலல்லவா?

ப: இந்நேரம் நீர் இறந்திருப்பீர் என்று நம்புகிறேன்.

செல்வி ஏ. எச். எல். யாஸ்மின் புத்தளம்

கே: நெருப்பில்லாமல் புகையுண்டாகுமா?

ப: அடக்குமுறையுள் அல்லல்படும் மக்களின் மனது நெருப்பில்லாமல் புகைந்து கொண்டிருக்கும்.

கே: மாமியாருக்கும் மருமகளுக்கும் அடிக்கடி சண்டை மூளக் காரணம் என்ன?

ப: காரணம் பொறுமை. தான்பெற்றுவளர்த்தபிள்ளை நேற்று வந்தவளுக்கு அதிக சலுகை காட்டும்போது கிழட்டு மனம் பொறுமைத் தீயைக் கக்குகிறது.

ஃ

வி. இரத்தினம் பதுளை

கே: அன்புஎன்றுல்என்ன?

ப: மனிதனிடம் இருக்க வேண்டிய பண்பு. ஆனல் இன்று கடிதத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் போடப்படும் அர்த்த மற்ற ஒரு ஒப்பனை வார்த்தையாகி விட்டது.

கே: ஒரு வாரத்திற்கு உமக்கு எத்தனைபோஸ்காட் வருகிறது?

ப: சுமார் அறுநூறு.

ஃ

அ. ராஜதுரை நாவற்குடா

கே: முற்காலக் கல்வி முறைக்கும் இக்காலக் கல்வி முறைக்கும் என்ன வேற்றுமை?

ப: முற்காலக் கல்விமுறை ஆனை ஆவன்னை என்று ஆரம்பித்தது. இக்காலக் கல்வி முறை பானை டானை என்று ஆரம்பிக்கிறது. முற்காலக் கல்வியின் முடிவு அறிவு. இக்காலக் கல்வியின் முடிவு சர்டிபிக்கேட் என்ற ஒரு கடதாசித்துண்டு.

ஃ

கே. ஆர். மனோகரன் அம்பிட்டிய

கே: கன்று ஏன் அம்மா என்று கத்துகிறது?

ப: அதன் அப்பா யார் என்று தெரியாததால்.

ஃ

கே. முருகேசு வீமன்காமம்

கே: பெண்கள்குதிஉயர்ந்த சப்பாத்துகளை ஏன் அணிகிறார்கள்?

ப: ஆண்களைவிட அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக.

ஃ

அ. ச. மூர்த்தி யாழ்ப்பாணம்

கே: மனையாளுக்கும் விபசாரிக்கும்வித்தியாசமென்ன?

ப: ஒன்று வீட்டுச் சாப்பாடு, மற்றது ஹோட்டல் சாப்பாடு.

கே: நான் ஒருவிதவையை விவாகம் செய்ய விரும்புகிறேன், செய்யலாமா?

ப: செய்யலாம். ஆனல் அவளுடைய பழைய ஞாபகங்களைத் தோற்கடிக்கும் சாமர்த்தியம் உம்மிடம் இருக்க வேண்டும்.

ஃ

மு. பாக்கியராசா திருகோணமலை

கே: இலங்கையின் அடுத்த பிரதமர் யார் என்பதை நிச்சயமாக உங்களால் சொல்ல முடியுமா?

ப: நிச்சயமாக முடியும். அடுத்த பிரதமர் நிச்சயமாக ஒரு சிங்களவர்தான்.

ஃ

வி. சின்னராசா செங்கலடி

கே: என்மனைவி என்னோடு சண்டை போடும் போதெல்லாம் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகப் பயமுறுத்துகிறாள். எனக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. என் நிலை உமக்கு ஏற்பட்டால் நீர் என்னசெய்வீர்?

ப: கவலைப்படமாட்டேன். ஏனென்றால் குலைக்கிறநாய் கடிப்பதில்லை என்பது எனக்குத் தெரியும்.

கே: நித்திரை போனல் உமக்கு கண் தெரிவதில்லையாமே. இது உண்மையா?

ப: இது என்ன பிரமாதம், சிலபுதுப்பணக்காரர்களுக்கு விழித்திருக்கும் போதே கண்கள் தெரிவதில்லையே.

ஃ

கு. இரத்தினம் சித்தங்கேணி

கே: நாயினுடைய பற்களா மனிதனுடைய பற்களா அதிகம் பலம் வாய்ந்தன?

ப: நாளுக்கு நாள் பெருகிவரும் கசாப்புக்கடைகளைப் பார்க்கும்போது மனிதனுடைய பற்கள் தான் பலம் வாய்ந்தனஎன்று தெரிகிறது

ஃ

செல்வி பி. கா. ராணி மாலபே

கே: துன்பத்தை இன்பமாக மாற்றுவது எப்படி?

ப: "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்" என்று வழிகாட்டுகிறார் வள்ளுவர்.

அறிமுகப்படுத்துகிறோம்

கலைஞர் 13:

புதுமை நிறைந்த 'புரட்சிக் கமால்'

—ஞானு

"இயற்கையில் பரவிப் படர்ந்த உணர்ச்சிகள் தடித்துத் திரண்டு, இதய நிலத்தில் கவிகின்றன. கவிதையாய் இயல்கின்றன. இயல்பாய் இயலும் கவிதை களில், யாப்பு முதலானவை அமைதலும் அமையாதொழிதலும் இயல்பையே சார்ந்தது. ஒருவேளை இயல்பால் இயங்காமல் தனிப்பட்ட முயற்சியால் இயற்றப்படும் கவிதைகளுக்கும்மேற்கண்ட போராட்டங்கள் பொருந்துதல் கூடும்." இந்தக் கருத்துக்குவியலைக் கேட்டதும் நக்கீரன்—நச்சினார்க்கினியர் பரம்பரையிலே வரும் அனுபவக்கிழம் அளித்த அருள்மொழி என்று மலைத்து விடாதீர்கள். அப்படி ஒன்றுமில்லை.

இருபத்தைந்து வயது நிரம்பாத, ஈழத்திலே வளரும் "இக்கபர்"லின் கருத்துச் செறிவுகள் இவை. கவிதையின் ஊற்றையும், மனித உணர்ச்சியில் சூனை எடுக்கும் அதன் கருவூலத்தையும் ஆழ்ந்த கருத்தோட்டதுடன் பார்க்கும் இவ்விளைஞர் வேறுயாருமல்ல "புரட்சிக் கமால்" என்ற புது முலாத்துடன் கவிதா உலகில் புதுமை பரப்பிவரும் ஜனுப் எம். எம். சாலியே.

வாழ்க்கையிலே புதுமை, இலக்கியத்திலே புதுமை வேண்டித் துடிக்கும் இவ்விளைஞரின் கவிதை ஆரம்பமே ஒரு புதுமை என்றுல் உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். 1947ம் ஆண்டில் ஒரு நாள். பாடசாலையிலே ஒரு விழா. அதற்கான கவிதை ஒன்றை பண்டிதர் ஒருவர் "தூதுக்கிளியாக" இவர் மூலம் தலைமை ஆசிரியரிடம் அனுப்பினர். ஆனல் கவிதை தவறிவிட்டது. மாணவனுக்கோ உடல் நடுக்கம்—உள நடுக்கம்—உயிர்கூட நடுக்கம் எடுத்தது. அந்த நடுக்கத்திலே 'பாட்டுக்குப் பாட்டு' பிறந்தது. கவிதை உருவம் எடுத்தது. விழாவில் அரங்கேற்றமும் பெற்றது. பண்டிதருக்கு புகழும் கிடைத்தது. அப்போதுதான் நடுங்கிய அந்த மாணவன் உடல் நடுக்கம் நின்றது. ஆனல் உள்ள நடுக்கம் வலுத்தது—புழுக்கத்தால் அதிலிருந்து தடங்கிக் கிடந்த ஒரு கவி உள்ளம் கட்டறுத்துப் பாய்ந்தது.

இறுமாப்புக் கொண்ட அந்த இளைஞனின் உள்ளத்திலிருந்து கட்டுரை, கதையாக சுரந்த எண்ணங்கள் புதுவாய்க்கால் வழியாக புரண்டோட ஆரம்பித்தன. "பாரதி பக்தன், இக்பால், வள்ளுவன்" என்ற மறைபெயர்களில் எழுத ஆரம்பித்தார் அந்தப் பாலகன். முதலில் அந்தப் பாலகனை "தருமதூதனிலும்" "தினகரன்" பாலர் பகுதியிலும் இவரின் கவிதைகள் அச்சுவடிவமெடுத்தன. "இவற்றிற்குநன்றியுடையேன். எனினும் எனது முயற்சியில் பேராவம்தந்து ஊக்கமளித்தது "சுதந்திரன்", கவிதையை ஈன்றது நான் செப்பனிட்டு சீராக்கிய சிற்றன்னை 'சுதந்திரன்' என்று இவர் உறவுபாராட்டுகிறார்.

ஜனுப் எம். எம். சாலியே இதுவரை, தனக்கே உரித்தான தனிப்பாணியில் இருநூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள் புனைந்துள்ளார். தமிழகத்து ஏடுகளிலும், ஈழத்து பத்திரிகைகள் பலவற்றிலும் இவர் பாக்கள் வெளிவந்துள்ளன. தான் செய்த "ஊஞ்சற் காவியம்" நண்பர்கள் "அன்பிற்கு" இரையாகி விட்டது என்று கண்ணீர் உகுக்கும்போது பார்க்க வேண்டும் இவரின் குழந்தை உள்ளத்தை.

சின்ன உருவம், சிவந்த மேனி, தமிழ் உடை, புன்முறுவல் நிறைந்த முகம், சரளமான பேச்சு, இவற்றுல் அறிமுகப் படுத்தப்படும் இவ்விளம் பாவலர் ஏருவூரைச் சேர்ந்த ஜனுப் மீராசாகிப்பிற்கும், அவரது பாரியார் திருமதி மறியம் பீவிக்கும் பிறவிப் புகழ்தர உதித்த புத்திரன். 14-6-1930 இவரது பிறந்த நாள்.

ஏருவூர் கனிஷ்ட ஆங்கிலப் பள்ளியில் கல்வி பயின்று, அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் தேர்ச்சி பெற்ற இவர் இப்போது மருதானை அரசினர் மத்திய பாடசாலையில் ஆசிரியராக கடமை ஆற்றுகிறார்.

இவருக்குப் பிடித்தவை: கவிதைச் சுவடி, இயன்றளவு தனித் தமிழ் வழக்கு, மு. வ, 'மஹாகவி' நியாகி, காடு, தனிமை.

இவரது ஆசை: ஈழத்துக் கவிஞர் பலரையும் தொடர்புறுத்தும் வகையில் "கவி [illegible]

இனம்! ரூ. 1, 2, 5, 10, 50
ரூ. நோட்டுகள் இனம்!

மயில் மார்க் முடிகளை கவர் செய்து தரப்படும். சில பேக்குகளில் தங்கக் கலர் பேப்பரில் மயில் மார்க் அச்சிட்டு அதன் பின்புறம் ரூ. 1—2—5—10—50 என்று குறிப்பிட்டிருக்கிறது. மயில் மார்க் முடிகளை வாங்கும் அதிர்ஷ்டமுடையவர்கள் தங்கக் கலர் அடையாளமுள்ள மயில் மார்க் கார்ட்டை

பூமகள் ஸ்டோர்ஸில்

கொடுத்து ரொக்கப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

வைஜயந்திமாலா

மயில் மார்க் மனிதர் முடிகள் எனது அழகை அதிகரித்து முக வசிகரத்தையும் தருவதோடு சரியான முறைப்படி ஜடை பின்னி அலங்கரிக்கவும் உதவி புரிகிறது எனப் புகழ்கிறார் M. K. TMNo 13159 வைஜயந்திமாலா.

★ 60 வருட உத்திரவாதமுள்ள மயில் மார்க் முடிகள் அனுபோக கைத்தொழிலாளர்களால் ஒவ்வொரு ரோமங்களையும் மிகவும் கவனத்துடன் சேர்க்கப்படுகிறது

★ 21 வருட அனுபவமுள்ள மயில் மார்க் முடிகள் துவைக்கத் துவைக்க அதனுடைய பட்டுப் போன்ற பளபளப்பு அதிகரிக்கிறது.

★ ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மயில் மார்க் முடிகள் சுருண்டு அழுக்கடைந்து பல வருடங்கள் மூலையில் கிடந்தாலும் ஒரு தடவை துவைத்ததும் அதிக அடர்த்தியாகவும் வசிகர அழகுசாதன உருவாகவும் புத்தம் புதிதாகவே காட்சி தருகிறது.

பென்சி ஸ்டோர் 173, 177 NC ரோட் திருகோணமலை.
பாபுஜி ஸ்டோர் NC ரோட் திருகோணமலை.

மயில் மார்க் சப்பாத்து & மிதியடிகளும் கிடைக்கும்.

பூமகள் ஸ்டோர்ஸ்,
(கலண்டர் கிங்)
(கண்ணுடி படம் பிரேம் மவுண்ட் மொத்த வியாபாரிகள்)
111, செட்டியார்தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்:

42. கரையாத காதல்

சந்திரமதியின் தாயார் இங்கிலாந்திற்கு வந்தார். தங்கையா தனக்குச் செய்தவுதவியை மறக்க முடியாமல் நாதன் தன்னுடைய உடலையும் நேரத்தையும் பொருட்படுத்தாமல் தன்னலியன்றவுதவி செய்தார்.

அம்மா இப்படிச் சொல்லும்போதே நாதனுடைய புகைப்பட ஏட்டின் நினைவு எனக்கு வந்தது. அதில் முகப்பில் எழுதிய சொற்கள் என் உள்ளத்திற் படிந்திருந்தன. அத்துடன் நாதன் எழுதிய:

கமலாவைக் காணுத கண்
என்ன கண்ணே—அது
கல்லாலே மண்ணாலே
செய்தன்ன கண்ணே

என்ற பாட்டும் என் நினைவிற்கு வந்தது. என்னுடைய ஆவலை அடக்க முடியாமல் ''சந்திரமதிதான் நாதனுடைய மனைவியோ? கமலா தான் அவருடையமகளோ?'' என நான் கேட்டேன்.

''எஞ்சிய கதையையும் கேள்'' எனச் சொல்லி அம்மா வெற்றிலைத் தட்டைக் கையில் எடுத்தார். என்னுடைய உள்ளம் சுக்கு நூறாக வெடித்தது. அம்மா தொடர்ந்து சொன்னர்.

''கடமைஒருபுறம். காதல் ஒருபுறம் எனச் சொல்லலாம். இவ்வளவாக நெருங்கிப் பழகியபோதும் நாதனுக்குச் சந்திரமதிமேல் காதல் பிறக்கவில்லை. ஆனால் சந்திரமதியோ நாதனைக் கண்ட நாள் தொடக்கம் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார். அதனைப் பலவகையிலும் நாதனுக்குச் சொல்லாமல் சொன்னர். நாதன் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. சந்திரமதியின் தாயும் நாதனை மருமகனாகப்பெற விரும்பினர். ஒரு நாள் சந்திரமதியின் தாயார் நாதனை நேராகக் கேட்டார்.

''என்னுடைய பிள்ளையை உங்களுக்கு மணஞ்செய்யப் பெரிதும் விரும்புகின்றேன்'' என்னர் தாயார்சந்திரமணி.

''என்ன? என்ன? எனக்கோ?'' என நாதன் வியப்பு மிகுந்தவராய்க் கேட்டார்.

'ஓம்! ஓம்! அதற்கென்ன?'

''இல்லை சந்திரமதியைக் கேட்டீர்களோ?''

''மகளின் விருப்பத்திற்கு மாறுக நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம்''

''அப்படியென்றால் சந்திரமதியும் ஓம் என்று சொல்லிவிட்டாரோ?''

'தடையில்லை'

''என்னைப்பொறுத்தவரையில் நான் இதனையே சொல்வேன். நானே பரம ஏழை. செம்பாலடித்த ஒரு சல்லியும் இல்லை'' என நாதன் பேச்சைத் தொடங்கினர்.

''அதனால் ஒன்றுமில்லை. உங்களுடைய குணமும் அறிவும் கோடா கோடி பெறும்'' என்னர் சந்திரமணி இடைமறித்து.

''இன்னும் ஒரு அலுவலை நான் சொல்ல விரும்புகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் திரு தங்கையாவை நான் தந்தையாகவே மதிக்கின்றேன். என் தந்தையின் மகள் எனக்கு உடன் பிறந்த வராவர். சந்திரமதியை என்னுடைய தங்கையாகவே நான் கருதி நடக்கின்றேன்''

''சந்திரமதி அப்படி நினைக்கவில்லை. தந்தையைப் பிரிந்த கவலையை ஒருவாறு மறந்த சந்திரமதி தன்னுடைய மேற்படிப்பைக் கைவிட்டு உங்களையே தன்னுடைய தந்தையாகவும் கணவனுகவும் கொள்ள விரும்புகின்னர். இனி உங்கள் விருப்பம்'' எனச் சந்திரமணி சொன்னர்.

''எல்லாவற்றையும் நன்கு யோசிக்கவேண்டும். சந்திரமதியுடன் இதுபற்றிப்பேச எனக்கு நீங்கள் அனுமதிதர வேண்டும்'' என நாதன் மன்றாட்டமாகக் கேட்டார்.

''நான் தருவதற்கென்ன இருக்கின்றது. உங்களை எங்கள் குடும்பத்தவராகவே நாங்கள் மதித்து நடக்கின்றோம். தாராளமாகப் பேசலாம்'' எனச் சந்திரமணி சொன்னர்.

''கிட்டத்தட்டப் பத்து நாட்கள் சென்றன. அப்பொழுது நாதனுக்குப் பெரும்கலை அறிஞர்பட்டச் சோதனையும் முடிந்துவிட்டது. படிப்பு வேலையும் இல்லை. சந்திரமணியையும் சந்திரமதியையும் முகம்கொடுத்துப் பார்க்கமாட்டாத நிலையில் நாதன் இருந்தார். நாதன் தன்னைக்கண்ணெடுத்தும் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் சந்திரமதிக்கு இருந்தது. நாதன் எங்கேகா சென்று பகற்பொழுதைக் கழிப்பார். பின்னர்பொழுது மங்கும் வேளை வீட்டிற்கு வந்து பித்துப் பிடித்தவர் போலவிருப்பார்.

கடைசியாக நாதன் தன்னுடைய துணிவு எல்லாவற்றையும் வரவழைத்துக் கொண்டு ''உங்களைப்பற்றி அம்மா என்னுடன் பேசினர்'' என்று சொல்லி முடிப்பதற்கிடையில் அவருடைய தொண்டை வரண்டுவிட்டது. சந்திரமதி நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். இருவரும் ஒன்றுமே பேசாமல் வீட்டுமுகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''என்னை மணஞ்செய்ய விரும்புகின்றீர்களோ?'' என நாதன் சந்திரமதியைக் கேட்டார், மார்கழி மாதத்தில் வெய்யிலும் மழையும கலந்து வருவதுபோலச் சந்திரமதியின் முகம் இருந்தது. நாணத்தினால் ஒருகிரிப்பும் இன்பத்தினால் ஒரு துளி கண்ணீரும் வந்தன.

''ஆனால் நான் உங்களை என் தங்கையாகவே மதிக்கின்றேன். திரு தங்கையா என் தந்தை. தந்தையின் மகள் என் தங்கை'' என்னர் நாதன்.

''அப்பா உங்களைப்பற்றி என்னிடம் சொல்வதையெல்லாம் கேட்கக் கேட்க உங்களைக் காணுமல் எனக்கு ஒருவித அன்பு பிறந்தது. உங்களை நேரிலே கண்ட நாள் முதல்.....''

''அப்படியானால் திரு தங்கையா இருந்தால் எங்களுடைய திருமணத்திற்கு ஓம் சொல்லியிருப்பாரோ?'' என நாதன் கேட்டார்.

''கட்டாயமாக இனி உங்களைத் தவிர வேறு எவருக்கும் என் உள்ளத்தில் இடம் கொடேன்''

''அப்படியானால் அவருடைய உயிர் அமைதியடைவதற்காக நீங்கள் விரும்பிய படி நான் உங்களை மணஞ் செய்கின்றேன்'' என நாதன் ஏதோ ஒரு பெரிய முடிவைச் செய்பவர்போற் சொன்னர்.

''நீங்கள் என்னை மணஞ் செய்தாலும்சரி செய்யாவிட்டாலும்சரி உங்களுடைய அன்புதான் எனக்குத் தேவை'' இப்படியாக ஒரு பெண் பேசுவதைக் கேட்ட நாதன் முதலிலே திடுக்கிட்டார். படித்தபெண் ஆகையால் இப்படியாகப் பேசத் துணிவு வந்தது என எண்ணினர்போலும்.

''ஒருவரை யாருவர் உளப்பூர்வமாக நேசித்து வந்தார்கள். கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் கழிந்தன. இதுவே தம்பியின் வாழ்வில் மகிழ்ச்சியான காலம். சோதனை மறுமொழியும் வந்தது. தம்பியின் திறமையை எல்லோரும் வியந்தனர். தம்பிக்கும் தம்பியின் நண்பன் சிமித்திற்கும் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் பதவி கிடைத்தது. நாதனுடைய வெற்றியைக்கண்டு [illegible] யும் பூரித்துவிட்டார்கள். இரண்டு மூன்று மாதங்கள் சென்ற பின்னர் திருமணத்தைச் செய்யலாம் எனச் சந்திரமணி தீர்மானஞ் செய்திருந்தார். சந்திரமதியின் உடல் நலம் சிறிது குறைந்திருந்தமையால் சந்திரமணி இங்ஙனம் எண்ணியிருந்தார்.

இப்படியாக அவர்கள் மகிழ்ச்சி அலையின் மேற்பாகத்தில் தவழ்ந்து சென்றார்கள். சந்திரமதியின் உடல் நலம் முன்னேறுதற்குப் பதிலாகச் சிறிது சிறிதாகப் பின்னேறியது. நாதன் சந்திரமதியை ஆருயிர் போல மதித்து வந்தார். தம்பி வற்புறுத்தவே சந்திரமதி வைத்தியரிடஞ் சென்றார். அங்கு வைத்தியர் சொன்ன மறுமொழி சந்திரமணியையும் நாதனையும் திடுக்கிடச் செய்தது; சந்திரமதிக்குக் கசநோய் தொடங்கிவிட்டதாக வைத்தியர் சொன்னர். அத்துடன் இருதயமும் சற்றுப் பெலன் குறைந்திருந்தது. முதற்றரமான முறையில் மருந்து செய்தால் எல்லாம் மாறிவிடும் என வைத்தியர் உறுதிப்படுத்திச் சொன்னர். வைத்தியருடைய வற்புறுத்துதலின் பெயரால் சுத்தமான காற்றோட்டமுள்ள ஒரு பெரிய வீட்டை நாட்டுப் புறத்தில் வாடகைக் கெடுத்து அங்கு நாதனும் சந்திரமணியும் இருந்து ஆகவேண்டியவைகளைச் செய்தார்கள். இங்கிலாந்தில் பெயர்போன இரு வைத்தியர்கள் சந்திரமதிக்கு வைத்தியஞ் செய்தார்கள்.

''இதற்கிடையில் சந்திரமதியின் அன்பு நாதனுக்கு ஒருவிதத்தில் தொல்லையைக் கொடுத்தது. ஒரு நாள் பல்கலைக்கழக வேலை முடிந்ததும் நாதன் நேரடியாக வீட்டிற்குப் போனர். சந்திரமணி வற்புறுத்தவே நாதன் ஒரு மோட்டார் வண்டியை வாங்கி வைத்திருந்தார். அதற்கும் சந்திரமணிதான் காசுகொடுத்தார். சந்திரமதியின் அன்பு எப்படி நாதனுக்குத் தொல்லையாக வந்தது என்பதைச் சொல்ல வந்த நான் இடையில் எதையோ சொல்லிவிட்டேன். சந்திரமதி தன் பக்கத்தில் வந்திருக்கும்படி நாதனுக்குச் சொன்னர். நாதன் இருந்தும் சந்திரமதி பின்வருமாறு பேசத் தொடங்கினர்.

''நான் உங்களை உளப்பூர்வமாக என் காதலர் என்றே வைத்திருந்தேன். நீங்கள் என்மீது கொண்ட அன்பு எல்லை கடந்தது என்பதையும் நான் அறிவேன். ஆனால் உங்களுடைய அன்பை இத்துடன் நிறுத்த வேண்டியதுதான். எனக்கோ கொடிய நோய் பீடித்துவிட்டது. மணவாழ்விற்கு நான் தகுதியற்றவள். என்னை நீங்கள் நேசிப்பதாக இருந்தால் என்னை மணஞ் செய்யும் நோக்கத்தைக்கைவிடவேண்டும். இது என்னுடைய வேண்டுகோள். நீங்கள் இதனை மறுக்கப்படாது''

''உங்களுடைய வேண்டுகோள் எதுவானாலும் நான் அதனை நிறைவேற்றுவேன். ஆனால் இதனை என்னால் செய்ய முடியாது'' என்னர் நாதன்.

''கட்டாயஞ் செய்ய வேண்டும்''

''முடியாது''

''முடியும்''

''முடியவேமுடியாது. முடியாது என்றால் முடியாது''

''உங்களை மன்றாடிக் கேட்கின்றேன். என்னை மணஞ் செய்ப வேண்டாம்''

''உங்களை நான் ஆயிரம் முறை, மன்றாடிக் கேட்கின்றேன். என்னை மணஞ்செய்ய வேண்டும்.

''என்னால் உங்களுக்குத் தொல்லைமிகும்''

''நான் அப்படி எண்ணவில்லை''

''என்னால் உங்களுடன் வாதாட முடியாது''

''புராணத்திலே வருகின்ற சந்திரமதி கற்புடையவர். கணவன் சொல்லைத் தட்டாதவர்''

''உங்களைப்போலப் பேச எனக்குத் தெரியாது''

''தெரியாவிட்டால் ஒன்று செய்யுங்கள். வாயை மூடி வைத்திருங்கள். வீணுக அலட்டவேண்டாம். அமைதியாக இருங்கள்'' எனச் சொல்லி நாதன் சந்திரமதியைத் தலையில் அன்புடன் தட்டினர் சந்திரமதி கண்ணை இருக மூடிக்கொண்டார்.

தலைவலிக்கு
ரிஷி நேத்திர
சஞ்சீவி தைலம்



உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இத்தைலத்தின் உபயோகத்தில் கண் சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் அரிப்பு, கண் பார்வைகுறைவு, கண் கூச்சம், கண்ணிலிருந்து பீளை வடிதல், கண்வலி, கண்குத்து, வெள்ளைழுத்து, ஒருத்தலைவலி, கைகால் தேக எரிச்சல், மண்டையிடி, மூலச்சூடு, அஸ்திகாங்கை, கெர்ப்பச் சூட்டால் உண்டாகும் திரேகாந்தல், காதுநோய், காதுசெவிடு, காதுஇறைச்சல், காதில் சிழ்வடிதல், பீனிசம், தடுமல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மயக்கம், தலைமயிர்உதிர்தல், செம்பட்டமயிர், பித்தநரை முதலியவைகளை ஆச்சரியமாய் குணம்செய்யும். கூந்தல் நன்றாய் வளரும். இத்தைலத்தை உபயோகித்த எவரும் குணமில்லை என்று சொல்ல முடியாது. ஆகையால் நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

புட்டிக்கு ரூ. 3-00 தபால் செலவு சதம் 85

யாழ்ப்பாணம் சோல் ஏஜண்ட்:

எஸ். சுப்ரமணியம் அன் கோ.,

53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, [illegible]

கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்கு யூ. என். பி. ஆட்சி உதவிபுரிகிறது

வட இலங்கை மக்களின் அதிருப்தி

யாழ்ப்பாணம்—

கடந்த சில வாரங்களாக வட இலங்கையெங்கும் நிலவும் மாத்தட்டுப்பாட்டினால் ஏழை மக்கள் பெரும் அவதியுறுகிறார்கள். கூப்பன் கடைகளில் ஒருறுத்தல் மா கூடக் கிடையாத நிலையில் கள்ளச் சந்தை வியாபாரிகள் 1 றுத்தல் 40 சத வீதம் விற்பனவு செய்வதானது பொதுமக்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், அதிருப்தியையும் அளித்துள்ளது. கறுப்புச் சந்தைவியாபாரிகளின் கைப்பிள்ளையாக விளங்கும் இன்றைய யூ. என். பி. ஆட்சியினர் தங்கள் தோழர்களுக்குதாராளமாக மா வழங்கியுள்ளதாகவும், ஏழைப் பொதுமக்களுக்கு 1 றுத்தல் கூடக் கொடுக்கமுடியவில்லையெனக் கூறி வருவதாகவும் விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. இந்த நிலைபற்றிச் சனட்டர் திரு பி. நாகலிங்கம் உணவு மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் ஏழை மக்களின் நலன் கருதி ஒரு கூப்பனுக்கு அரை றுத்தல் மாவாவது வழங்குமாறு கேட்டுள்ளார். திரு. நாகலிங்கம் யாழ்ப்பாணம் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் இதுபற்றி விசாரித்தபொழுது: போதிய மாகையிருப்பில் இல்லாமையால் கையிருப்பிலுள்ள மாவை பாண் போரணைக்காரர்களுக்கும், சாப்பாட்டுக் கடைக்காரர்களுக்கும் கட்டுப்படுத்தி வழங்கிவருவதாகத் தெரிவித்தாராம்.

இது இவ்வாறுனல் கறுப்புச் சந்தைவியாபாரிகளுக்கு எங்கிருந்து போதிய மா கிடைக்கின்றதெனப் பொது மக்கள் வினவுகின்றார்கள். அன்றியும் சில சாப்பாட்டுக் கடை முதலாளிகள் தங்கட்கு வழங்கப்படும் மாவை கறுப்புச் சந்தைமூலம் 1 றுத்தல் 40 சத வீதம் விற்பனவு செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலவிமோசனத்திற்காக உலகஇரட்சகர்

உயிர்த்தெழுந்த தினம்

கொலைக்களத்திலும் அன்பு போதித்த அமரர்

பத்துக் கற்பனைகளையும் கடைப்பிடித்தால் பரில் சாந்தியும்-சந்துஷ்டியும் துளும்பும்

[வடவை ச. தாமஸ்]

அந்த இரவு மிகவும் பயங்கரமான இரவு; துக்கரம் நிறைந்தஇரவு;எங்கும் அமைதி நிறைந்த இரவு; காரிருளுடன் இடிமின்னல் நிறைந்த இரவு: உலகம் கண்டறியாத உன்னதமான இரவு; சரித்திரம் கண்டறியாத சங்கடமான இரவு; அந்த இரவையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள் ஜெருசலேம் நகர யூதர்கள். அந்த இரவு வந்தது. சுமார் பன்னிரெண்டு மணிக்கு 'படீர்' என்று ஒரு ஓசை. அடக்கம் செய்யப்பட்ட கல்லறை ஒன்றின் மேல்முகட்டிலுள்ள பாராங்கல் அப்பால் உருண்டோடியது. அதிலிருந்து ஒரு உருவம் அற்புதமாக—அதிசயமாக வெளிவந்தது. அதிர்ச்சியாலும், மதிமயக்கத்தாலும் அடியற்ற மரம்போல் அக்கல்லறையை காவல் புரிந்த காவலாளிகள் கீழே சாய்ந்தார்கள். ''அடக்கம் செய்யப்பட்ட மூன்றுவது நாள் உயிர்த்து வெளியே வருவேன்'' என்ற அவரின் வாக்குப்படி எம்பெருமான் இயேசுவே அக்கல்லறையில் இருந்து வெளிவந்தார். அந்நாளையே இன்று கிறிஸ்தவ மக்கள் ''உயிர்த்த பெருநாள்'' என்று கொண்டாடும் ஒரு கோலாகால நாளாகும்.

★

புளியாதறை என்னும் அப்பப் பண்டிகை நெருங்கியது. ''இன்று என்னுடன் பானம்பண்ணும் எமது பன்னிரெண்டு சீடர்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்'' என்றார் இயேசு. அதைக்கேட்ட அவரின் சீடர்கள் ஒவ்வொருவரும் ''ஆண்டவரே நானு'' என்று ஏக காலத்தில் கேட்டார்கள். ஆனல் அவரின் வாக்குப்படியே 'யூதாஸ் காரியோத்' என்பவன் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவின் கன்னத்தில் முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான். பின்னல் வரப்போவதை முன்னல் அறிந்த இயேசு மௌனமாகவே இருந்தார். அத்தருணத்திலே வேங்கையைப் போல் பாய்ந்து இயேசுவை பிடித்து பலவிதமான சித்திரைவதை செய்யத் தொடங்கினர்கள் யூதர்கள். ''நிரபராதியான ஒரு மனிதனை ஏன் இந்த வாதனை செய்யவேண்டும்? அந்தமனிதன்தான் செய்த குற்றமென்ன?'' என்பதை அந்த யூதர்கள் அறிந்தார்களில்லை. அரசாங்கத்தின் கட்டளை அது. நிரபராதியை குற்றவாளியாக்குகிறது; குற்றவாளியை நிரபராதியாக்குகிறது சட்டத்தின் சதித்திட்டம்.

★

இயேசுவை பிடித்து கற்தூணிலே கட்டி கசைகளால் அடித்தார்கள்; காரி உமிழ்ந்தார்கள்; கன்னத்தில் அறைந்தார்கள்; இரும்புச் சங்கிலியால் இருகக் கட்டினர்கள். இப்படியே எண்ணில்லாத கொடூரங்களை செய்வித்தார்கள். ''பிதாவே உமது சித்தப்படி ஆகட்டும்'' என்று பொறுமையை கைக்கொண்டார் இயேசு. இதைக்கண்ட சிலர் ''ஒரு குற்றமில்லாத இந்த மனிதனை இப்படிக் கொடுமை செய்கிறார்களே' என்றும் சிலர் ''இவன் செய்த குற்றத்திற்காக இந்தப்பாடு படுகிறான்'' என்றும் பேசினர்கள்.

★

தின்தான் இராஜாவென்றும் உலகத்தை இரட்சிக்கவந்த இயேசுவென்ற குற்றம் அவர்மேல் சுமத்தப்பட்டது. இக்குற்றத்திற்காக பாரமான சிலுவையை தோளிலேற்றி கல்வாரி மலைக்கு நடத்திக் கூட்டிப் போனார்கள். இக்கன்னக் கடூரமான—விஷமத்தனமான—மனிதத் தன்மையற்ற செயலைக்கண்ட சில மாதர்கள் கண்கலங்கி—ஒப்பாரியோடு— பச்சாதாபத்தோடு அழுது இயேசுவை பின்தொடர்ந்தார்கள். இதைக் கண்ட இயேசு அவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினர்:—

''எனக்காக நீங்கள் அழவேண்டாம். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும், உங்கள் குடும்பங்களுக்காகவும் அழுங்கள், ஏனென்றல் பச்சையான இம்மரத்தில் இவ்வளவு அக்கினி பற்றுமானல் காய்ந்த கட்டையில்—உளுத்துப்போன மரத்தில் எவ்வளவோ அக்கினிப்பற்றும்'' என்றார்.

★

அதன் பின்னர் இயேசுவை தெருவழியாக நடத்திக் கல்வாரி மலைக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். மனிதனல் தூக்க முடியாத—பாரமான சிலுவையை சுமக்க முடியாமல் கீழே விழுவதும் பின் எழும்புவதுமாக அவஸ்தைப் பட்டார். மனிதனல் சுமக்கக் கூடிய சிலுவையா அது? உண்மையிலேயே அது ஒரு பாரமான—கனமான—தூக்க முடியாத சிலுவைதான்.

கால்களிலே கடுமையான காயம்; கைகள் உடைவு; கன்னங்களில் அடி. இப்படியே பொறுக்க முடியாத வாதனைக்குமேல் வாதனையால் வெகுண்டார். இதைக் கண்ட யூதர்கள் எள்ளி நகையாடினர்கள்—கைக்கொட்டிச் சிரித்தார்கள்—பரிகாசம் பண்ணினர்கள். மேலும் அவரை கொடுமை செய்வதிலேயே கண்ணும் கருத்துமா இருந்தார்கள்.

★

தீர்ப்புச் சொல்லியாகி விட்டது! அதைக் கண்டு ஆனந்தப் பட்டவர்களும் உண்டு. அதேபோன்று துக்கப்பட்டவர்களும் உண்டு. அக்காலத்திலே குற்றம் செய்தவர்களை சிலுவை மரத்தில் ஆணியினல் அறைந்து கொல்வதுதான் அரசாங்கத்தின் சட்டம். இந்தத் தீர்ப்புத்தான் நிரபராதியான எம்பெருமான் இயேசுவுக்கும் இடப்பட்ட தீர்ப்பாகும். இத்தீர்ப்பைக்கண்டு ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. எவர் நாவிலும் இதே பேச்சாக இருந்தது. தன்னுடைய காலம் நெருங்கிவிட்டதை இயேசு அறிந்தார். அதற்காக அவர் கலங்கவில்லை. மக்களின் அஞ்ஞானத்தைப்போக்கி மெஞ்ஞானத்தைப் பரப்பவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடனேயே சகல நிஷ்டூரங்களையும் அவர் பொறுமையுடன் அனுபவித்து வந்தார். அதற்காகவே அவர் மானிட அவதாரமும் எடுத்தார்.

மாலை மணி ஆறிருக்கும். ''அடி, குத்து, விடாதே'' என்ற கோஷம் வான்முகட்டில் தட்டியது. அன்று தீர்ப்புச் சொல்லப்பட்ட இருகள்வர் மத்தியிலேயே இயேசுவையும் சிலுவையிலே அறைந்தார்கள். மானிட அவதாரம் முற்றுப்பெறப் போவதை அறிந்த இயேசு ''என் பிதாவே என் ஆத்மாவை உமக்குக் காணிக்கையளிக்கிறேன்'' என்று மூன்று முறை சொல்லி தமது உயிரை விட்டார். அதன் பின் அவரை சிலுவை மரத்திலிருந்து இறக்கி நல்லடக்கம் செய்தார்கள். ஆனல் தமது வாக்குப்படியே அடக்கம் செய்யப்பட்ட மூன்றாவது நாள் வெற்றிக்கொடியுடன் அக்கல்லறையைவிட்டு வெளியே வந்தார்.

இயேசு உதித்து வந்தபின் நாற்பது நாள்வரை பூலோகத்திலே இருந்தார். கடைசியாக அவர் கோகிசன் என்னும் தீர்க்கதரிசிக்கு பத்துக்கற்பனை என்னும் பேழையைக் கொடுத்து சத்திய வேதத்தை பாரெங்கும் பரப்பும்படி சொல்லிவிட்டுப் பரலோகம் சென்றார். அக்கற்பனை பின்வருமாறு:—

(1) சர்வேசுரனை முழுமனதுடனே ஆராதிப்பாயாக.

(2) சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாக பாவியாமல் இருப்பாயாக.

(3) சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிப்பாயாக.

(4) பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக.

(5) கொலை செய்யாதிருப்பாயாக.

(6) விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

(7) களவு செய்யாதிருப்பாயாக.

(8) பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

(9) பிறர் தாரத்தை அபேட்சயாதிருப்பாயாக.

(10) பிறர் உடமையை அபேட்சயாதிருப்பாயாக.

மேலேயுள்ள பத்து விஷயமும் இரண்டு விஷயத்தில் அடங்கும் அவையாவன:—

(1) எல்லாத்தையும் பார்க்க சர்வேசுரனை நேசிப்பது.

(2) தன்னைத்தான் நேசிப்பதுபோலே மற்றவர்களையும் நேசிப்பது.

இந்த பத்து விஷயத்தையும் எந்த சமையத்தவர்களாய் இருப்பினும் கடைபிடித்து நடந்தால் அகிலத்தில் சண்டையில்லை; அணுகுண்டு அவசியமில்லை. எல்லோரும் ஓரின மக்களாக வாழலாமல்லவா?

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்க ஐந்தாவது மகாநாடு

இஸ்லாமியர் தாய்மொழிபற்றி விவாதம்

முஸ்லிம் வாலிபர் இயக்கத்தின் ஐந்தாவது மகாநாடு சென்ற 26-3-55ல் ஸாஹிராக் கல்லூரியில் ஆரம்பமானது. இம்மகாநாட்டுக்கு இலங்கையின் பல பகுதிக் கிளை ஸ்தாபனங்களிலிருந்தும் அங்கத்தவர் வந்திருந்தார்கள். முதலில் லேக்ஹவுஸ், துறைமுகம் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். இந்த இடங்களுக்குச் செல்ல பஸ் ஒழுங்கு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனல் நடையிலே செல்லவேண்டியிருந்தது.

அன்று நான்கு மணிக்கு மகாநாடு தொடர்ந்து நடைபெற்றது. முதலில் மாலைதீவு அரசாங்கப் பிரதிநிதி ஜனுப் முகம்மது ஸக்கி அவர்கள் ''அல்லாஹ் அக்பர்'' என்ற ஒலியுடன் வை. எம். எம். ஏ. கொடியை ஏற்றி வைத்தார்கள். அப்போது பாகிஸ்தான் ஹைகமிஷனர் அப்துல் சத்தார், தொழில் மந்திரி டாக்டர் கலீல் முதலிய பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர்.

பின் அல்ஹாஜ் பளீல் ஏ. கபூர் அவர்களின் தலைமையில் மகாநாடுஆரம்பித்தது. முதலில் டாக்டர் கலீல் அவர்கள் வரவேற்புரை கூறினர். மௌலவி எஸ். ஏ. டபிள்யு. புகாரி (எம். ஏ. எல். டி.) அவர்கள் ''இஸ்லாத்தில் இளைஞர்கள்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். இப்பேச்சைக் கேட்பதற்காக மண்டபம் நிறைய மக்கள் குழுமியிருந்தனர். அன்றிரவு ஓர் இலவசப் படக் காட்சி காட்டப்பட்டது.

மறுநாள் மகாநாடு தொடர்ந்து நடைபெற்றது. முதலில் எல்லா அங்கத்தவர்களையும் படம் பிடிக்கப் பட்டது. பின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. தலைவர்: ஜனுப் ரெஸாக், செயலாளர்: ஏ. எச். எம். பாரூக், பரிபாலகர்: சேனட் டாக்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களும் இன்னும் பலரும் தெரிவு செய்யப்பட்டனர். பின் கிளை ஸ்தாபனங்களிடமிருந்து வந்திருந்த பிரேரணைகள் படிக்கப்பட்டன. இந்நிலையில் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட இயக்கக் கூட்டத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. கூட்டமே அல்லோலகல்லோலப் பட்டது. பின் ஒருவாறு சமாளிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்றது.

இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி எது என்பதுபற்றி ஜனுப் அஸீஸ் அவர்களின் தலைமையில் ஒரு பகிரங்க விவாதம் நடைபெற்றது. திருமதி ஆயிஷா றவூப் ஆங்கில மென்றும், புறக்டர் எம். ஏ. பாக்கி மரைக்கார் சிங்களமென்றும் ஜனுப் எம். கே. எம். அபூபக்கர் தமிழ் என்றும் பேசினர்கள். ஜனுப் அபூபக்கர் தமிழ்மொழியே

தாய்மொழி என்பதற்கு பல ஆதாரங்களை எடுத்துக் காட்டினர். அவர் கூறியது: ''இலங்கையர்களெல்லாரும் கூடிக்கொண்டு நாங்கள் இலங்கையர்களா என்று கேட்பதுபோல உள்ளது இவ்விதம் தாய்மொழியைப் பற்றிப் பேசும்போது மூன்று விடயங்களைக் கவனிக்க வேண்டும். அவை பள்ளிக்கூடப் போதனை மொழி, அரசாங்க மொழி, தாய் மொழியாக அமையக்கூடியமொழி. இம்மூன்றையும் ஆராய வேண்டும். சிறு குழந்தைகளுக்கு அவர்களின் தாய் மொழியில் படிப்பிப்பது இலேசு. தமிழ் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி நல்லதொரு கலாச்சாரத்தைப் பரப்பிய பல கலைகளை உடைய உயர்ந்த மொழி. தமிழ்க் கலைகளை முஸ்லிம்கள் புறக்கணிக்க முடியாது. தமிழ்க் கலை தனிப்பெரும் பொக்கிஷம். தமிழைப் புறக்கணித்தால் தமிழிலுள்ள இஸ்லாமிய புத்தகங்களை இழக்க நேரிடும். எங்கள்மத, கலாச்சார, போதனைகளை உணரத் தமிழ் அவசியம். ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் கட்டாயம் படிக்க வேண்டும். அப்போதுதான் உலகோடு தொடர்பு கொள்ளவும், நாட்டு மக்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ளவும் முடியும். ஆனல் முதன் மொழியாக — தாய்மொழியாகத் தமிழ்த்தான் இருக்க வேண்டும்'' என்று கூறினர். இத்துடன் மகாநாடு முடிவுற்றது. இம்மகாநாட்டின் விடயங்களெல்லாம் ஏறக்குறைய ஆங்கிலத்தில்தான் நடைபெற்றன. இதனல் பிற இடங்களிலிருந்து வந்திருந்த அநேகர் அவைகளைப் பற்றி நன்றாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. முஸ்லிம்களின் தாய்மொழிபற்றிய விவாதத்தில் ஜனுப் பாக்கி மரைக்காரும், திருமதி ஆயிஷா றவூபும் ஆங்கிலத்தில் பேசினர்கள். இத

(13-ம் பக்கம் பார்க்க)

'சுதந்திரன்'

சந்தா விபரம்

வருட சந்தா ரூபா 7=50

ஆறு மாத சந்தா ரூபா 4-00

விபரங்களுக்கு எழுதவும்:-

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்தீரன்

SUTANTIRAN

1955 ஏப்ரல் மாதம் 10ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

சுயபாஷா ஆசிரியர்கள் சம்பள உயர்வு

"முட்டாள் தினத்"தில் செய்யப்படும் காரியம் எல்லாம் முட்டாள்த்தனமான காரியமாக இருப்பதில்லை. சில சமயம் புத்திசாலித்தனமான காரியமாகவும் அமைந்துவிடுகிறது. "ஏப்ரல் முட்டாள்தின"மான இம் மாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை நமது மதிப்புக்குரிய நிதி மந்திரியார் திரு எம். டி. எச். ஜயவர்த்தன ஜனப்பிரதிநிதிகள் சபையில் வெளியிட்ட செய்தியும் கொஞ்சம் புத்திசாலித்தனமானதாகவே காணப்படுகிறது! நீண்டகாலமாக அதிருப்தியடைந்திருந்த அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதாக வெளிவந்த செய்தியையே குறிப்பிடுகிறோம்.

திடுதிப்பென்று அரசாங்கம் இந்த சம்பள உயர்வைக் கொடுக்க முன்வந்ததன் இரகசியமென்ன? அரசாங்க ஊழியர்மீது கொண்ட அனுதாபமா? கிடையவே கிடையாது. உண்மைக் காரணங்கள் இரண்டு. ஒன்று, அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கங்கள், யூனியன்கள் எல்லாம் ஒன்று பட்டு ஒரு முகமாக நின்று கொண்டன. சம்பள உயர்வு கொடுக்க தாமதித்தால் எந்த நிமிஷமேனும் வேலை நிறுத்தம் என்ற பூதம் புறப்பட்டு விடலாம் என்ற பயம். இரண்டு, பொதுத் தேர்தல் சமீபத்தில் வரவிருப்பதால் சம்பள உயர்வு கொடுக்காவிட்டால் அரசாங்க கட்சி ஆட்டங் கண்டுவிடும் என்ற பீதி. எது எப்படியிருந்தபோதிலும் அரசாங்க ஊழியர்களின் கோரிக்கை இந்த அளவிலாவது வெற்றிகண்டது நமக்கு மகிழ்ச்சிக்குரியதேயாகும்.

சம்பளம் போதாதென்று நீண்டகாலமாக கிளர்ச்சி செய்து வருபவர்களில் சுயபாஷா ஆசிரியர்களும் ஒரு சாராராவர். இந்தச் சம்பள உயர்வில் இவர்களுக்கும் ஏதோ கிடைத்திருக்கிறது. ஆனால் கிடைத்திருப்பதற்கும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைக்கும் சம்பந்தமேயில்லை. விளக்கமாகச் சொல்லப்போனால் இந்தச் சம்பள உயர்வு பெரும்பாலான சுயபாஷா ஆசிரியர்களின் கண்களில் மண்ணைத் தூவுவதாகவே அமைந்திருக்கிறது. சில அரசாங்க ஊதுகுழல்களான பத்திரிகைகள் ஏமாற்றுத் தலையங்கம் தீட்டியதுபோல் இந்த சம்பள உயர்வினால் சுயபாஷா ஆசிரியர்களுக்கு பிரமாத பயன் எதுவுங் கிடையாது.

சுயபாஷா ஆசிரியர்கள் தங்கள் சம்பளக் கோரிக்கையை அரசாங்க சேவையிலுள்ள இரு பிரிவினரின் சம்பளங்களோடு ஒப்பு நோக்குவதுண்டு. அரசாங்க குமாஸ்தாக்களின் சம்பளத்தையும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களின் சம்பளத்தையும் அவர்கள் சுட்டிக் காட்டி, ஆங்கில ஆசிரியர்களின் சம்பளத்தரத்தோடாவது தங்கள் சம்பளங்களை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் இது நியாயமான கோரிக்கைதான் என்பதே நமது கருத்தாகும். அரசாங்கம் சுயபாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்ற கொள்கையுடையதாயிருப்பது உண்மையானால், ஆங்கிலத்துக்கும் சுயபாஷைகளுக்குமிடையே பேதங்காட்டி சுயபாஷா ஆசிரியர்களின் கோரிக்கையை நிராகரிக்க நியாயமில்லை. ஆனால் அவர்கள் சொல்லும் காரணம் ஒன்றிருக்கிறது. அதாவது, சுயபாஷா ஆசிரியர்களின் தரம் ஆங்கில ஆசிரியர்களின் தரத்தைவிடக் குறைந்ததாக இருக்கிறதென்பதுதான் அக்காரணமாகும்.

சுயபாஷா ஆசிரியர்களுக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், இந்தக் கூற்றில் நிரம்பிய உண்மை யிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சுயபாஷா ஆசிரியர்களும் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் அவர்களும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டார்கள். ஒரு சில சுயபாஷா ஆசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்களைவிட தரத்தில் உயர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் பெரும்பாலோர் அப்படியில்லை யென்பதுதான் நமது கருத்து.

தரத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்ற உண்மையை நாம் ஒப்புக்கொண்ட போதிலும் சம்பளத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கவேண்டும் என்ற கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் இன்றுள்ள தரத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பதற்கு சுயபாஷா ஆசிரியர்கள் பொறுப்பாளிகள் அல்லர். முன்பு இந்நாட்டில் நிலவிய அன்னிய ஆட்சியும், பின்பு இந்நாட்டில் கல்வி இலாகா அனுஷ்டித்துவரும் கல்விக் கொள்கைகளுமே இந்த ஏற்றத் தாழ்வுக்கு காலாயிருந்திருக்கின்றன. கல்வி இலாகா ஆங்கிலப் பாடசாலைகளையும், சுயபாஷைப் பாடசாலைகளையும் ஒரே கண்ணால் பார்த்து, பாதுகாத்துவந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிராது. ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளுக்கு வருத்த பாடத்திட்டங்களையும், நியமித்த பேராசிரியர்களையும், அளித்த வசதிகளையும், சலுகைகளையும் சுயபாஷா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கும் அரசாங்கம் கொடுத்து வந்திருந்தால் சுயபாஷா ஆசிரியர்கள் தரத்தில் குறைந்தவர்களாக விளங்கக்காரணமேதுவுமில்லை. அன்னிய ஆட்சியும், இன்றைய அரசாங்கமும் செய்யத் தவறிய ஒரு காரியத்திற்காக, ஒரேவித சேவை புரியும் இரு பிரிவு ஆசிரியர்களிடையே சம்பளப் பேதம் எதுவும் காட்ட அவர்களுக்கு உரிமை கிடையாது. எனவே ஆங்கில ஆசிரியர்களுக்கும் சுயபாஷா ஆசிரியர்களுக்கும் சமமான சம்பளம் வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும்.

அதே சமயத்தில் சுயபாஷா ஆசிரியர்களும் தங்கள் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சம்பள உயர்வுக்காக அவர்கள் போராடுவதைப் போலவே தங்கள் தரத்தின் உயர்வுக்காகவும் அவர்கள் சிரத்தையெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு சுயபாஷை ஆசிரியரும் ஆங்கிலத்தைக் கற்று அதன் மூலம் பரந்துகிடக்கும் பல்வேறு அறிவுச் செல்வங்களையும், கலைச் செல்வங்களையும் தமது தாய் பாஷையில் அவற்றைப் போதிக்கும் ஆற்றலையும், தனது மையையும் பெறுவாராக.

அநியாயமும் அக்கிரமுமான குடியேற்றச் சட்டத் திருத்தம்

டில்லி ஒப்பந்தம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

ஒருவன் சட்டவிரோதமான ஒரு குற்றத்தைப் புரிகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன்மீது வழக்குத் தொடரப்பட்டால் அவன் அக்குற்றத்தைப் புரிந்தான் என்பதை முதலில் நிரூபிக்க வேண்டியது வழக்காளியினுடைய கடமையாகும். பிரதிவாதி குற்றம்புரிந்தான் என்பதை நிரூபிப்பதில் வழக்காளி வெற்றியடைந்தால்தான் நீதிபதி சம்பந்தப்பட்ட எதிரியைப் பார்த்து "நீ குற்றம்புரியவில்லை என்பதற்கு ஆதாரம் காட்டமுடியுமா?" என்று கேட்பார். வழக்காளி குற்றத்தை நிரூபிக்கத் தவறிவிட்டால் நீதிபதி வழக்கையே தள்ளிவிடுவார். வழக்கில் குற்றத்தை நிரூபிக்க வேண்டியது வழக்காளி கட்சியின் கடமை. விசாரணையின் இந்த முதல் அங்கம் முதலில் நிறைவேற வேண்டும். அதன் பின்னர் பிரதிவாதியாகிய எதிரி வழக்காளி சுமத்தும் குற்றத்தை மறுத்து எதிர்வாதமிடுவான். விசாரணையின் இரண்டாவது அங்கமாகிய இந்த எதிர்வாதம் பிரதிவாதியினுடைய உரிமையாகும். ஏற்கனவே நிரூபணமாகியுள்ள குற்றச்சாட்டை எதிர்வாதத்தில் விடுவித்துக் கொள்ளவில்லையென்றால் அவன் தண்டனைக்குள்ளாக வேண்டிவரும். நீதி பரிபாலனம் சிறந்தவகையில் நடைபெறும் சீரிய நாடுகளிலெல்லாம் இந்த முறையைத்தான் அனுஷ்டித்து வருகிறார்கள்.

ஆனால் நமது இலங்கை அரசாங்கம் கடந்தவாரம் நிறைவேற்றியுள்ள ஒரு விசித்திரமான சட்டத் திருத்தத்தின்படி இந்த நல்ல நீதி பரிபாலன முறை தலைகீழ்ப் பாடமாக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவன் மீது வழக்குத் தொடரும் உரிமையை அரசாங்கம் பெற்றுக்கொள்கிறது. அவன் என்ன குற்றம் புரிந்தான் என்பதை நிரூபிக்கும் கடமை அதற்கு கிடையாது. அந்தத் துர்ப்பாக்கியசாலியான எதிரி தான் அரசாங்கம் சுமத்தும் குற்றத்தைப் புரியவில்லையென்பதை நிரூபித்துத் தப்பிக்கொள்ள வேண்டும். இதுவே கடந்த வாரம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியிருக்கும் குடியேற்றச் சட்டத் திருத்தமாகும்.

இந்த சட்டத் திருத்தத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் யாரை வேண்டுமானாலும் 'கள்ளத்தோணி' என்று குற்றஞ்சாட்டி அவர் மீது வழக்குத் தொடரலாம். சம்பந்தப்பட்டவர் சட்டவிரோதமாக இலங்கையில் குடியேறிய ஒரு 'கள்ளத்தோணி'தான் என்பதை அரசாங்கம் ருசுப்படுத்த வேண்டியதில்லை. ஆனால் அவரோ தாம் ஒரு சட்டபூர்வமான இலங்கைப் பிரஜைதான் என்பதை அத்தாட்சிப்படுத்தியே தம்மை விடுதலையாக்கிக்கொள்ள வேண்டும்.

இந்த சட்டத் திருத்தம் மிகவும் அநியாயமானது, அநீதியானது, கொடுமையானது, அக்கிரமமானது. இதனால் பெரிதும் பாதிக்கப்படப்போகிறவர்கள் தமிழ்ப் பேசும் மக்கள்தான். தமிழர்களும் முஸ்லிம்களும்தான். இவர்களுக்கிடையில் யார் மீது வேண்டுமானாலும் அரசாங்கம் வழக்குத் தொடரலாம். சம்பந்தப்பட்டவர் சட்டவிரோதமாக இலங்கையில் குடியேறியவர் என்பதை அரசாங்கம் நிரூபிக்க வேண்டியதில்லை. அப்படி வழக்குத் தொடர்ந்தாலும் ஒருவன் தான் ஒரு சிங்களவன் என்று சொன்னதும் விடுதலையடைவான். தமிழர்களுடைய, முஸ்லிம்களுடைய நிலை அப்படிப்பட்டதல்ல. அவர்கள் இலங்கையர்தாம் என்பதை அரசாங்கம் நம்பும் அளவிற்கு, ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு, நிரூபிக்க வேண்டும். அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அவன் அசல் இலங்கையனாகை—இலங்கைத் தமிழனாகை அல்லது இலங்கை முஸ்லிமாக இருந்தாலும் நாடு கடத்தப்பட்டே தீருவான்.

எனவே மேற்படி சட்டத் திருத்தம் இலங்கைத் தமிழருக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கும் கூட எவ்வளவு ஆபத்தானது, எவ்வளவு அவமரியாதையானது என்பது சாதாரணமக்களுக்கே விளங்குவதாகும். ஆனால் வெட்கக்கேடு என்னவென்றால், இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு இவ்வளவு படுபாதகமான ஒரு சட்டத் திருத்தத்தை எதிர்த்து வாதாட பெரும்பான்மையான தமிழ்ப்பேசும் பிரதிநிதிகளுக்கு நாக்குவரவில்லை, முதுகெலும்பு இருக்கவில்லை என்பதுதான்.

ஒரே ஒரு பிரதிநிதிமட்டும் தம்மால் முடிந்தவரை எதிர்த்து நின்று வாதாடினார். அதன் பயனாக ஒரு வார காலத்திற்கு ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு சமூகங் கொடுக்க முடியாதவாறு வெளியேற்றமும் செய்யப்பட்டார். இவர்தான் வவுனியாப் பிரதிநிதி திருவாளர் திரு. ஸி. சுந்தரலிங்கம். இவருடையவெளியேற்றத்திற்கு முன்னால் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின்போது இந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்து வாக்களித்த தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகள் திருவாளர் ஸி. சுந்தரலிங்கமும், தமிழரசுக்கட்சிப் பிரதிநிதி திருவாளர் என். இராஜவரோதயமும் தான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

கடந்தவாரம் நிறைவேற்றப்பட்ட குடியேற்றச்சட்டத் திருத்தத்தை பாரதப் பிரதமர் நேரு பலமாக ஆட்சேபித்திருக்கிறார். டில்லி ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் இலங்கை அரசாங்கம் செயலாற்றிவருவதாக அவர் குற்றம் சுமத்தியிருக்கிறார். தேர்தல் வாக்குரிமை பெற்ற இந்திய வம்சாவழியில் வந்த இலங்கைப்பிரஜைகளின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்காமலேயே இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருப்பது மிகவும் தவறானதும் பொருத்தமற்றதுமான செயல் என்று அவர் இலங்கை அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த இலட்சணத்தில்தான் இலங்கை அரசாங்கம் டில்லி ஒப்பந்தத்தை அமுல் நடத்தி வருகிறது. சுதந்திரனைப் பொறுத்தவரையில் இப்படி நடப்பது ஒன்றும் அதிசயமல்ல. டில்லி ஒப்பந்தம் உருப்பெறுவதற்கு முன்னாலேயே ஒப்பந்தம் ஏற்பட்டாலும் இப்படியாகஅதுபயனற்றுப்போகும் என்று தீர்க்கதரிசனம் கூறியது சுதந்திரன் ஒன்றுதான். அப்போது நாம் எழுதியதாவது:-

"மலைநாட்டுத் தமிழ்மக்களின் பிரச்னை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் நேருவுடன் கலந்து பேசுவதற்கு நமது பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை கடந்த புதன்கிழமை காலையில் புறப்பட்டுப் போய்விட்டார். இதரபத்திரிகைகள் எல்லாம் ஆர்ப்பாட்டம் பண்ணுகிறபடி இந்த விஜயத்தினால் பெரும் பயன் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை நமக்கு கிடையாது. இந்த சந்திப்பு தங்களுக்கு விமோசனத்தைக் கொண்டுவரும் என்று மலைநாட்டுத் தமிழர்கள் எண்ணுவார்களேயானால் அவர்கள் ஏமாற வேண்டியதுதான். நமது அரசியல் ஜோஸியத்திற்கு மாறுக இப்பிரச்னை சுமுகமாகத் தீர்ந்துவிட்டால் அது நடவாதது நடந்துவிட்டது: ஒரு அதிசயம் சம்பவித்துவிட்டது என்று நாமும் மகிழ்ச்சி கொண்டாடத் தயாராய் இருக்கிறோம். ஆனால் அந்த அற்புதம் நிகழுமா?;"

[சுதந்திரன் அரசியல் விமர்சனம் 17-1-54]

டில்லி ஒப்பந்தம் என்ன பலனை அளித்திருக்கிறதென்பதை ஒரு வருடத்துக்குப் பின் இப்போது பார்த்தால் "அற்புதம் நிகழவில்லை" யென்பதை உணர்ந்து நமது நேயர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் பிரஜாஉரிமைச் சட்டத்தின்கீழ் ஒரே ஒரு மலைநாட்டுத் தமிழர் மட்டுந்தான் பிரஜாஉரிமை பெற்றிருக்கிறார்.

கடந்த வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் வரை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு பெற்றவர்களின் தொகை மாதமொன்றிற்கு 700க்கும் அதிகமாகும். ஆனால் கடந்த ஒக்டோபருக்கும், அதாவது டில்லி ஒப்பந்தம் இரண்டாவது முறையாக ஊர்ஜிதம் செய்யப்பட்டதற்கும், இவ்வருடம் ஜனவரிக்கும் இடையிலுள்ள நான்கு மாத காலத்தில் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் தொகை ஆக 21தான். ஒக்டோபரில் 9, நவம்பரில் 7, டிசம்பரில் 4, ஜனவரியில் 1. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, பின்பு சிற்றெறும்பாகிய கதையாக இருக்கிறதல்லவா இது!

1954 ஜனவரியில் நிராகரிக்கப்பட்ட பிரஜாஉரிமை மனுக்களின் தொகை 733. பெப்ரவரி 952, மார்ச் 1160 ஏப்ரல் 599, மே 1155, ஜூன் 2117, ஜூலை 2001, ஒகஸ்ட் 1476, செப்டம்பர் 2423, ஒக்டோபர் 2915, நவம்பர் 2977, டிஸம்பர் 2962. இவ்வருடம் ஜனவரியில் 3100.

மேற்படி புள்ளி விவரங்களிலிருந்து வெளியாகும் ஒரு உண்மை என்னவென்றால் நமது அரசாங்கத்தின் பிரஜா பதிவுக் கமிஷனர் பிரஜா நிராகரிப்பு கமிஷனராகத்தான் வேலை பார்த்து வருகிறார் என்பதுதான். பிரஜா பதிவு இந்த ரீதியில் நடைபெற்றுக்கொண்டே போவதாலும் இந்திய பிரஜாஉரிமைச் சட்டத்தினாலும், டில்லி ஒப்பந்தத்தினாலும் என்ன பயன்? இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் பலம் பாதிக்கப்படுவதற்கு மேற்படி சட்டமும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார திட்டத்திற்கு உலக வங்கி கொடுக்கும் புதிய கடன்

மின்சார இலாகாவே அவர்கள் நியமிக்கும் அதிகாரிகளின் கையில் போகுமா? (நமது நிருபர்)

இலங்கையின் மின்சார உற்பத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு உலக வங்கி வழங்கும் கடன், இலங்கைக்கு இது வரை கொடுக்கப்பட்ட எந்த கடனிலும் பார்க்க அதிக வட்டி கொண்டதாயும், அத்துடன் ''கயிறுகள்'' கொண்டதாகவும் இருக்கும் என்று கருதப்படுகிறது.

மின்சார இலாகாவின் நடவடிக்கைகளை மேல் பார்க்கும் உரிமை உலக வங்கி நியமிக்கும் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனையை உலக வங்கி இட்டிருக்கிறது என்று ''சுதந்திரன்'' நடத்திய விசாரணையிலிருந்து தெரிய வருகிறது.

உலகவங்கி நியமிக்கும் இந்த அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தின் மின்சார இலாகாவை திருத்தியமைப்பதுடன் அதன் பரிபாலனத்தையும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை தமது கைக்குள் எடுத்துக் கொள்வார்கள் என்பதும் நிபந்தனையின் ஒரு ஷரத்து.

இலங்கையில் இந்த அதிகாரிகள் தங்கும் காலத்தில் அவர்களது செலவுகளை ஏற்றுக் கொள்வது யார் என்பதும், அவர்கள்மீது போக்கு வரத்து—பொது மராமத்து மந்திரிக்குள்ள அதிகாரம் என்ன என்பது பற்றியும் ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

உலக வங்கி அளிக்கும் இந்த கடனுக்கான வட்டியும், கமிஷனும் நாலே முக்கால் சத வீதம் என்று தெரிகிறது. வட்டியுடன் கமிஷனும் ஏன் சேர்க்கப்பட்டுள்ளதென்றும், இந்த கமிஷன் என்றென்றைக்குமாக கொடுக்கப்படவேண்டுமா என்றும் கேட்கப்படுகிறது.

இந்த கடனீடாலர் செலாவணி மூலமே திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று வாதிக்கப் பட்டுள்ளது. இதற்கு இலங்கை அதிகப் படியான டாலர் சேமிப்பது அவசியமாகிறது. அப்படி என்றால் டாலர் நாடுகளுடன் இலங்கை தனது வர்த்தகத்தை கட்டிப் போட வேண்டும் என்று அர்த்தமாகிறது.

விசாரணைக் குழு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப்தியை கண்டு கதி கலங்கும் யூ. என். பி., மக்களை ஏமாற்ற புது வழிகளை கையாள முனைந்துள்ளது என்று இதுபற்றி தமிழ் மக்களின் ஸ்தாபனங்களில் கருதப்படுகிறது.

அரசாங்கம்எந்த ஏமாற்று சாகஸங்களைச் செய்தாலும், யூ. என். பிக்கு வக்காலத்து வாங்கி சில அரைகுறை மந்திரிகள் என்னதான முனைந்தாலும் இன்றுள்ள ஆட்சி சிறுபான்மை மக்களின் ஜன்ம சத்துரு என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. இதை வாய்ப்புக்கிடைக்கும் போது மக்கள் நிரூபிப்பார்கள் என்று மேலும் இந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அநியாயமும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தமும் பயன்படுகிறதே தவிர வேறு ஒரு பயனும் கிடையாது.

எனவேதான், இந்த படுபாதகமான பிரஜாஉரிமைச் சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்துக்கொண்டுதமிழ்ப் பேசும் மக்கள் அடிமைகளாக வாழ்வதில் அர்த்தம் எதுவும் கிடையாதென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்று திரண்டு ஒரேமுகமாக இந்த அக்கிரமச் சட்டங்களை எதிர்த்துப் போராடி அவற்றை ஒழித்துக்கட்ட வேண்டும். இதற்கு வழி இருக்கிறது, கடந்த தேர்தலில் தமிழ்ப் பேசும் மக்கள் செய்தமாபெரும் தவறை மறுபடியும் செய்யாமல் அண்மையில் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் இச்சட்டங்களை எதிர்த்து நிற்கக்கூடிய பிரதிநிதிகளை அவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்து அனுப்ப வேண்டும். இதை அவர்கள் செய்யாவிட்டால் இந்நாட்டிலிருந்து தமிழ்ப் பேசும் இனம் ஒழிக்கப்படுவது திண்ணம்.

இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

தலாவ-அனுராதபுர புகையிரத நிலையங்களுக்கிடையிலுள்ள 122 மைல் 34 80 சங்கிலியில் அமைக்கப்பட்டுள்ள நாச்சிடுவ புகையிரதக் கடவை 27-4-55ல் மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை (28-4-55) 5 மணி வரைக்கும் திருத்தப்படும். இதனடுவே 27-4-55ல் மாலை 10 மணி தொடக்கம் மறுநாள் காலை (28-4-55) 5 மணி வரைக்கும் எல்லாப் போக்குவரத்து வாகனங்களும் முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கும்.

10 லட்சம் ரூபா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனே துருப்பிடித்துப்போக அரசாங்கம் ஏன் விட்டுவைத்திருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை'' என்று இது சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி அதிகாரியை நமது நிருபர் கேட்டபோது அவர் கூறினர்.

வைத்திய ஆராய்ச்சிக்காக வருடா வருடம் ஒதுக்கப்படும் பணத்தில் பெரும் பகுதி இந்த யந்திர உபகரணங்களை வாங்கவே செலவாகியிருக்கிறது என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த யந்திரங்களில் பல வேலைசெய்யக்கூடிய நிலையில் இல்லை என்று தெரிகிறது. இவற்றை ஏற்றுமதி செய்த வர்த்தக ஸ்தாபனங்கள், இவற்றிற்குத் தேவையான சில முக்கிய பாகங்களை அனுப்பவில்லை என்றும் அதனாலேயே இந்த யந்திரசாதனங்கள் குறட்டைவிடும்நிலையில் இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வைத்திய ஆராய்ச்சி நிலையம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த யந்திரங்கள் தொழில்படாததால் வைத்திய ஆராய்ச்சி நிலையத்திற்கு பெரியளவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று நம்பப்படுகிறது. இந்த உபகரணங்களை பாவிப்பதற்காக உள்ள நிபுணர்கள் வேலைசெய்வதற்கில்லாது தூங்குகிறார்கள்.

பரம்பொருளின் தோற்றமே இசை

ஹனிபாவின் கச்சேரியில் அன்பர் பூபதிதாஸர்

''பரம்பொருளின் பல்வேறு தோற்றங்களில் இசையும் ஒன்று. அதனாலேயே நாதப்பிரம்மம் என்று நவின்றார்கள் நம் முன்னோர். பரம்பொருளின் அத்தகைய தோற்றத்தை இன்று இம்மண்டபத்தில் பிரவகிக்க வந்திருக்கின்றார் இசை முரசு நாகூர் ஹனிபா. அவர் பாட்டு, உங்கள் பாடு'' என்று கூறினர் அன்பர் பூபதி தாஸர் அவர்கள்.

கொழும்பு பூபதி வித்தியாலயத்திற்கு நிதி திரட்டும் முகமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் இசை முரசு நாகூர் ஈ. எம். ஹனிபாவினுடைய ஒரு இசைக் கச்சேரி நடைபெற்றது. அப்போது பேசுகையில்தான் அன்பர் பூபதி தாஸர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இசைக் கச்சேரிக்கு முன்னுள் கொழும்பு மேயர் திரு எஸ். செல்லமுத்து தலைமை தாங்கினார்.

முழக்கக் குரல் படைத்த வரும் பிரபல சினிமா பின்னணிப் பாடகருமான ஜனுப் ஹனிபா சுமார் மூன்று மணித்தியாலங்கள் அங்கு கூடியிருந்தோரை இசை வெள்ளத்தில் மூழ்கடித்து பெரும் பாராட்டலைப் பெற்றார். பல அரிய இஸ்லாமிய கீதங்களையும், பாரதிதாஸன் கவிதைகளையும், தாமும் சினிமா நடிகர் தோழர் கே. ஆர். ராமசாமியும் சேர்ந்து பாடிய ''சொர்க்க வாசல்'' ''சுகம் எங்கே'' படப்பாட்டுக்களையும் பாடினார் ஹனிபா.

தி. மு. க. இயக்கப் பாடல்கள் பாடவேண்டும் என்று சிலர் துண்டெழுதி அவரைக் கேட்டுக் கொண்டபோது ஜனுப் ஹனிபா அளித்த பதில் பண்பும் பணிவும் உடையதாயிருந்தது.

அவர் கூறினர்! ''இயக்கப் பாடல் பாடும்படி சிலர் தொந்தரவு செய்வதாக நண்பர்கள் கேட்டிருக்கிறார்கள். உங்களைவிட தி. மு. க. இயக்கத்தில் அதிக ஆர்வமும் பற்றும் கொண்டவன் நான். ஆயினும் இந்த மேடையில் இயக்கப் பாடல்களை நான் பாட விரும்பவில்லை. இந்த கச்சேரியை ஒழுங்கு செய்தவர்களுக்கும், இம்மண்டபத்திற்கும் இழுக்கு ஏற்பட்டது என்ற அபவாதத்திற்கு தி. மு. க. இயக்கமும் நானும் இலக்காகக் கூடாது, அவற்றை வேறுமேடைகளில் பாடுகிறேன். என்னை மன்னிக்க வேண்டும்''

ஜனுப் ஹனிபா ''லோகே மாயம்'' என்ற சிங்களப் பாடலை அழகான சிங்கள உச்சரிப்போடு பாடியது அனைவருக்கும் வியப்பாயிருந்தது.

ஜனுப் ஹனிபா கர்நாடக சங்கீதத்தில் அதிக ஈடுபாடு இல்லாதவராய்க் காணப்பட்டபோதிலும் அவருடைய பாடல்கள் சிங்கார் ஜனையாகவும், தெளிந்த உச்சரிப்பு உடையனவாகவும் காணப்பட்டன. தமிழ்ப் பதங்களை அழகாகவும் அர்த்தந் திருத்தமாகவும் உச்சரித்தார். இலங்கை வானொலியின் இஸ்லாமிய இசை நிகழ்ச்சிகளில் ''மக்கா அளித்த எங்கள் மன்னா, மன்னா!'' என்ற பாடலை ''மக்கா அலித்த எங்கள் மண்ணா, மண்ணா'' என்று கேட்டுப் புளித்துப்போன காதுகளுக்கு ஹனிபாவின் இஸ்லாமியப் பாடல்கள் இன்பம் அளிப்பனவையாய் இருந்தன.

சுயபாஷை ஆசிரியர்களின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

	தொடக்கம்	முடிவு	
பயிற்றப்பட்ட 1ம் வகுப்பு சுயபாஷா தலைமை ஆசிரியர்	164	230	[1968—2760 / 11 of 72]
1ம் வகுப்பு ஆசிரியத் தராதரம் பெற்ற சுயபாஷா ஆசிரியர்	132	176	[1584—2112 / 11 of 48]

சிறிய பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கும், பத்து ஆசிரியர்களுக்கும்மேற்பட்ட பாடசாலையின் பிரதமஉதவி ஆசிரியர்களுக்கும்:

	தொடக்கம்	முடிவு	
பயிற்றப்பட்ட 2ம் வகுப்பு	110	134	[1320—1608 / 11 of 48]
,, 1ம் வகுப்பு	140	200	[1680—2400 / 10 of 42]
தராதரப் பத்திரமுடைய 3ம் வகுப்பு	80	88	[960—1056 / 2 of 48]
,, 2ம் வகுப்பு	92	108	[1104—1296 / 4 of 48]
,, 1ம் வகுப்பு	112	144	[1344—1728 / 8 of 48]

இச்சம்பள விகிதத்தில் சிறிய பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் சிறிய சம்பள உயர்ச்சியைப் பெறுகிறார்கள். பத்து ஆசிரியர்களுக்கு மேல் கல்வி கற்பிக்கப்படும் பாடசாலையின் சிரேஷ்ட உதவி ஆசிரியருக்கு வகுக்கப்பட்ட சம்பளம் ஆசிரியர்களின் கண்ணில் மண்ணைத் தூவும் ஓர் நடவடிக்கையாகும். எப்படியெனில் இலங்கை முழுவதும் பத்து ஆசிரியருக்குமேல் கல்வி கற்பிக்கும் சுயபாஷா பாடசாலைகள் முன்னூறுக்குக் குறைவாகவே இருக்கின்றன. புதிய சம்பள விகிதத்தின்படி 300க்குக் குறைந்த ஆசிரியர்களே சம்பளம் பெறுவர்.

இன்றைய சம்பள விகிதத்தை ஆங்கில ஆசிரியருடன் ஒப்பிடுகையில் சுயபாஷா ஆசிரியனுடையநிலை பழைய பல்லவிதான். புதிய சம்பள விகிதத்தில் ஒரு பயிற்றப்பட்ட சுயபாஷா ஆசிரியன் ஆரம்ப சம்பளமாக ரூபா 83 சதம் 50 பெறுகையில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியன் 154 ரூபா ஆரம்ப சம்பளமாகப் பெறுகிறான். இந்நிலையில் சுயபாஷா ஆசிரியனுடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறதென்று எப்படிக் கூறமுடியும். புதிய சம்பளத்திட்டம் மக்களை ஏமாற்றும் ஒரு தேர்தல் தந்திரம் என்பது வெளிப்படை.

சுயபாஷா ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று பௌலியர் அறிக்கை கூறியது. இதை நிதிமந்திரி எம். டி. எச். ஜயவர்தனை மறைமுகமாக ஆதரிக்கிறார் என்பது அவருடைய பாராளுமன்றப் பேச்சிலிருந்து தெளிவாகிறது. பாராளுமன்றத்தில் நிதிமந்திரி கூறியதாவது: ''இப்போதுள்ளது போல் ஆங்கில பாடசாலை ஆசிரியர்கள் சுயபாஷா பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரிடையே வித்தியாசம் காட்டாமல் ஒரு குறிப்பிட்ட திகதியிலிருந்து ஒரே வகுப்பு ஆசிரியர்களைத் திரட்டும் திட்டம் ஒன்று தயாராக்கப் பட்டிருக்கிறதென்பதை இத் தருணத்தில் குறிப்பிடுகிறேன். ஆனால் இப்போதுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒரு பரீட்சை வைக்கப்பட்டு அதில் தேர்ச்சியடைந்த பின்னரே ஆங்கில ஆசிரியர்களுடைய சம்பளம் வழங்கப்படும்''

இது மறைமுகமாக சுயபாஷா ஆசிரியர்கள் தரத்தில் குறைந்தவர்கள் என்பதைக் காட்டுகிறது. தரத்தை மட்டிடும் நோக்கமாக இப்பரீட்சை வைப்பதென்றால் நாம் அதை வரவேற்கிறோம். ஆனால் அப்பரீட்சை சுயபாஷா ஆசிரியர்களுக்கு மாத்திரம் வைக்கப்படுவதேன்? ஆங்கில சுயபாஷை ஆசிரியர்களுடைய தரத்தை

(13-ம் பக்கம் பார்க்க)

சத்தியமே ஜெயம்

A. S. D. அமிர்தானந்த லேகியம்

பிரதி தினமும் அனுபவத்தில் — முதன்மையானது — பத்தியமில்லாதது — ருசிகரமானது.

43 — வருஷ வைத்திய அனுபவத்தில் ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது.



எமது நண்பர்கள் கவனிப்பு:

அமிர்தானந்த லேகியத்தால் (1000) வியாதிகள் சுகப்படுமென தற்புகழ் கூறவும், வர்ணிக்கவும் முன்வரவில்லை—எங்கள் வைத்திய முறைக்கு விகடம் அவசியமே இல்லை. வைத்திய அனுபவமுறை அனுபவத்தில் தெரிந்துகொள்ளுங்கள்.

விபரம்:

சரீர உஷ்ணங்களுக்கும், ஜீரண சக்திக்கும், மூல வியாதியஸ்தர்களுக்கும், கணைகுட்டிற்கும், சொறி, சிரங்கு, ஊரல், தடிப்பு இவைகளுக்கும், இரத்த சுத்திக்கும் அனுபவமானது. பிரதி தினமும் மலஜலங்களைக் கிரமப்படி கழிப்பித்து சரீர சுகம் கொடுப்பதில்நிகரற்றது.

புட்டி ஒன்றிற்கு விலை ரூ. 2-50.

முன்பணமனுப்பவும் தபால் செலவு இலவம்.

A. S. D. மருந்துகள் கிடைக்குமிடம்:

மலையாள மெடிக்கல் ஹால்,

179, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13.



பிரவேசக் கட்டணம் சதம் 50

பிரவேசக் கட்டணம் சதம் 50

மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ. 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்.

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....சதம்.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

ரொக்கப் பரிசு ரூ. 1,000-00

முதலாவது பரிசு ரூ. 600-00

இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 13-4-55 பி. ப. 5 மணி

சரியான விடை 17-4-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 24-4-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 30-4-55ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

13. இந்துக்களின் புதுவருடம் இந்த மாதத்தில் ஆரம்பிக்கிறது.
3. கல்வித் தெய்வமான சரஸ்வதியின் ஆசனம்.
5. நீண்ட பிரயாணம் செய்பவர்களுக்கு இது அவசியம்.
6. தேடாக் கயிறு தலை மாறிக்கிடக்கிறது.
8. செப்பு.
9. பழைய இலக்கியங்களை ஆராய்ந்து இதைப் பற்றி ஒரு அரிய நூலை ஆக்கியிருக்கிறார் விபுலானந்த அடிகள்.
10. தம்பதிகளில் ஒருவர்.
12. கடை குறைந்து கிடக்கும் இது கை கூடாவிட்டால் "சாதல், சாதல், சாதல்" என்று பாடியிருக்கிறார் பாரதியார்.
13. உயர்ந்த கோபுரத்தின் உச்சிக்கு ஏறுவதென்றால் சிலருக்கு இது ஏற்படுவது சகஜம்.
15. கைத்தடி.
17. வாழைத்தடலின் சாறு வெள்ளைத் துணியில் பட்டால் இது பிடித்து விடும்.
19. குழந்தைகளுக்கு அஜீரணத்தால் உண்டாகும் ஒரு நோய்.
20. பட்டம் பதவிகளுக்காக அரசாங்கத்திற்கு இது பாடுபவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.
21. இது உள்ளவன் வாழ்க்கையில் முன்னேறுவான்.

மேலிருந்து கீழ்

1. புதுமையான இவர்கள் ஆரம்பத்தில் நிந்தனைக் குள்ளாவது இயற்கைதான்.
2. சந்திரன்.
3. சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த திதியைகண்டு அஞ்சுவது வழக்கம்.
4. இதில் காயம் பட்டால் வீரன் வாளைப் போட வேண்டியதுதான்.
7. ஒருமுறை தீமை புரிந்தவர்மீது வாழ்நாள் முழுவதும் இது பாராட்டும் குணம் சிலருக்கு உண்டு.
8. குழந்தைகளுக்கு குதூகலம் ஏற்பட்டால்..... ப்பு தானாகவே வந்துவிடுகிறது.
10. கால் அணி.
11. அறிஞர்.
14. கண்ணகியின் சிலைவடிப்பதற்காக இதை இமயத்திலிருந்து கனகவிஜயன் என்ற ஆரிய மன்னனின் தலையில் ஏற்றிவந்தானும் ஒரு தமிழ் மன்னன்
16. மாலை நேரம்.
17. இது பெருக்கெடுத்தால் கரையிலுள்ளவர்கள் தவிக்க வேண்டியதுதான்.
18. இன்றையத் தமிழ்ப் பண்டிதர்கள் தமிழின் இதைப்பற்றித் திரும்பத் திரும்பப் பேசித் திருப்தியடைகிறார்கள்.
19. இதனால் நிலைகெட்டவர்கள் பலர்.

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13

சுதந்திரன் காரியாலயம் 194, ஏ, தட்டா தெரு, கொழும்பு-12

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி விதிகளின் சுருக்கம்

1. சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.
2. போட்டிக்குரிய கட்டணம் இலங்கைப் போஸ்டல் ஆடர், இந்திய மணி ஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.
3. சம்பந்தப்பட்ட ஒரு போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூபா 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால் மூலம் சுதந்திரன் மனேஜருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டிவிடை அனுப்ப வேண்டிய விலாசம்.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி-13

தபால்பெட்டி இலக்கம் 1183

சுதந்திரன் காரியாலயம், 194ஏ, தட்டாதெரு, கொழும்பு—12.

சங்கப் பலகை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தில், 'அன்னை சாரதா மணி' யைக் கண்டு களித்து அறிமுகப்படுத்து கிருர் கோ. கோபால கிருஷ்ண மூர்த்தி. ஆனல், 'தூய அன்னை' யெனப் போற்றப்படும் இவரை ஆசிரியர் ஏகவசனத்தில், 'அவள், அவள்' என்று பல முறையும் குறிப்பிட்டிருப்பது அவ்வளவு அழகாய் இல்லை. சரித்திரத்தில், முதன் முதலாக ஆண்—பெண் சம உரிமையை வற்புறுத்தியவர் அரசியல் ஞானி 'பிளேட்டோ' தான்என்று கூறுகிறார் வெ. சுப்பராயலு. இன்னும் அழகிய கவிதைகளும், சிறு கதைகளும் கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றிருக்கின்றன.

கையெழுத்துப் பிரதியாய்த் தோன்றி, கல்லூரி மாணவர் கரங்களில் வளர்ந்து, (அவர்கள் செலவிலே யே) இன்று அச்சுவாகன மேறி அழகுப் பொழிவுடன் தமிழுலகெங்கும் பவனி வரும் 'இளந்தமிழன்' வரலாற்றை மன்றத்தின் அறிக்கைகள் வழுத்துகின்றன.

உன்னத இலட்சியங்களோடு சிறந்து விளங்கும் "இளந் தமிழ" னை நாமும் மனப் பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

"சுரா"

தேண்டாமை ஒழிய வேண்டுமானல்?

திரு வி. க. பதிப்பகத்தாரின் முதல் வெளியீடான 'தேண்டாமை ஒழிய வேண்டுமானல்' என்னும் சிறு நூல் வரப் பெற்றோம்.

தமிழரிடையே தலை விரித்தாடும் தேண்டாமை ஒழிய வேண்டியதன் அவசியம் பற்றி, பல அறிஞர்களுடைய மேற்கோள்களைக் கையாண்டு விறு விறுப்பான நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். எல்லோரும் படிக்கக் கூடிய விதமாக அழகிய வசன நடையில் எழுதப் பட்டுள்ள இந்நூலில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

ஆசிரியர்:- மா. சே. அருள் விலை சதம்:- 20. கிடைக்குமிடம்:- திரு வி. க. பதிப்பகம் 14373 பிச்சாட்ஸ் லேன் மருதானை-கொழும்பு.

என். பி. என். ஏ.

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாட்டுப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

194 A, தட்டா தெரு,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

கண்ணீர்ச் சொட்டு

—"சாலிஹ்"—

அந்தி மயங்கும் நேரம். அகன்று பரந்த நீல வானம் தன்நிற மிழந்து துயில் கலைந்தெழுந்த ஒரு சோம்பேறியின் முகத்தைப் போல மப்பும் மந்தாரமு மாய் இருந்தது. அந்த நீலையில் பறவை இனங்கள் இரவைக் கழிக்க இன்துயில் கொள்ளும் மரங்களை நாடி இறக்கை அடித்துச் சத்த மிட்டபடியே கூட்டங்கூட்ட மாய்ச் சென்றுகொண்டிருந்தன. பறவைகளின் அவசரப் போக்கு அந்த குடைவிரித்து நின்ற ஆலமர விழுதுகளில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த சிறுவனைத் தட்டிவிட்டிருக்க வேண்டும்.

அவன் ஒரு காக்கிச் 'சோட்ஸ்'உம், நீலச் 'சேட்டும்' அணிந்திருந்தான். அவனது சின்னக் கோடு விழுந்திருந்த சாரம், சுருண்டு வாயமாக வலத் தோளில் போடப்பட்டு, இடப்பக்க மாய் கரத்தின்கீழ் தொங்கிக்கொண்டிருந்தது. அந்த ஒல்லிச் சிறுவன் தன் அன்றைய விளையாட்டுக்கெல்லாம் விடுதலை அளித்து விட்டு மேய்ச்சலில் கவனமாய் இருந்த தன் பசுக்களை ஒழுங்குபடுத்தி எடுக்கப் போய்க் கொண்டிருந்தான். 'மைலி' அடா.....டா, ஓ... கோ.....ஓ...கோ.....ஓ கோ .....கறுப்பி, வள்ளி, ஓ... கோ....., பட்டி, பட்டி ஓ...கோ .....ஓ...கோ..... என்று குரல்காட்டிக்கொண்டே இருந்தான். அவன் பசுக்களைச் சேர்த்தெடுப்பதற்குள், இவன் இத்தொழிலில் இவ்வளவுக்கு முன்னேறிவிட்ட அந்தச் சிறுகதையைச் சொல்லிவிடுகிறேன்.

வாகிது; இதுதான் சிறுவனின் பெயர். சுமார் எட்டு வயதிருக்கும். பாடசாலை வாழ்விலே பின்னிப் பிணைந்திருக்க வேண்டியவன். ஆனால் அவன் படித்ததெல்லாம் ஆக ஒரே ஒரு வருடந்தான். அங்கே ஆசிரியர் சொல்லி கொடுத்த சின்னஞ் சிறு கதைகளும் அபிநயப் பாட்டுகளும் அவனை ஓர் கதாப்பிரசங்கியாய் ஆக்கி விடும். போன போன இடமெல்லாம் பாட்டுங் கதையுமாகப் பொரிந்து தள்ளிவிடுவான். அவனைப் பார்த்தவர்களெல்லாம் பையனுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்குமென்றுதான் சொல்லிக் கொண்டார்கள். அதைப் பொய்யாக்கவோ என்னவோ 'மைலி' — செம்மை நிறைந்த அந்தக் கருநிறப் பசு கர்ப்பத்தோடு வந்து சேர்ந்தது. அப்பசு அவன் அநுதாபத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டுவிட வில்லை; அவனது முழுக் கவனத்தையுமே தன்பால் ஈர்த்துக்கொண்டது.

அவன் தம்பி தாயோடு ஒட்டிக் கொண்டிருந்த பொழுது, பாட்டி தன் மகளோடு எவ்வளவு அன்பாய் இருந்தாள்? ஒரு வேலையும் செய்யவிட மாட்டாளே! சோறு சமைப்பதிலிருந்து போட்டுக் கொடுப்பதுவரை பாட்டிதானே செய்துவந்தாள்!! இதெல்லாம் அவன் கண்ணாரக் கண்ட உண்மைகள். இப்பொழுது இந்த 'மைலி' பசுவை எண்ணிப் பார்த்தான். அதுவும் கன்றீனும் பருவம்; நிறை கர்ப்பம். இதனிடம் அன்புகாட்டவோ ஆதரிக்கவோ யார் வர இருக்கிறார்கள். மனிதனை மனிதனே மிருகமாக நடத்தும்போது, இந்த அப்பாவி வாய் பேசாப பசுவை யார் கவனிக்கப்போகிறார்? இதற்குப் பிறகு அவன் மைலிப் பசுவோடு மிக நெருங்கி விட்டான். தன் கனவுகளை—அறிவுத் தாகத்தை கேள்விக் குண்டுகளை சகிக்காது வெருட்டுவிடும் பெற்றோரைவிட அதிகமாக அந்தப் பசுக்களை நேசித்தான். முன்னைப்பாக மைலியை நேசித்தான். வாகிது அவைகளோடு கதைப்பான், சிரிப்பான், ஓடுவான், பாடுவான், தினிபோடுவான், நீர் காட்டுவான்; பகற் பொழுதின்பெரும்பாகத்தை அவைகளோடேயே கழித்தான். சில சமயங்களில் தன் வாய்க்கு வந்தபடி பேசி, வெருட்டுவான்; அடிப்பான்; அவன் தாயைப்போல. தான் ஒவ்வொரு நாளும் தன் தாய் தந்தையரிடம் படிக்கும் பாடங்களை, அப்படியே பசுக்களுக்கும் படிப்பித்து விடுவான். மைலியைக் கோபமாகப் பேசிவிட்டு "நீ அங்கிங்கு ஓடாம உதையாம பேசாமல் இரு கண்ணு!" என்று தடவிக் கொடுப்பான். இவன் தடவுவதில் சுகங்கண்ட பசு வாலைக் கிளப்பி, காலை அகட்டி, தலையை உயர்த்தி, மூக்கை நிமிர்த்திக்கொள்ளும். அப்பொழுதெல்லாம் அதன் மோவாயை தாங்கி தன் கன்னத்தோடு அணைத்துக்கொள்வான். சிலநாளைக் கெல்லாம் மைலி ஒரு வெள்ளைக் கன்றை ஈன்று கொடுத்தது. குறிக்கோளின்றித் துள்ளிக் குதித்தோடும் அவ் வெள்ளைக் கன்றைத் தன் உயிர்போல நேசித்தான், வாலை வளைத்து மேலே உயர்த்திமடிமுட்டிப் பாலைக் குடிக்கும்போது கண்ணுரை—மனமாரக் கண்டு களிப்பான். இந்த சின்னப் பசுக் கன்றுதான் பாடசாலையைப் பாலைவனமாக்கிய முழுப் பொறுப்பையும் ஏற்றுக வேண்டும்.

பாடசாலை என்றால் அவனுக்கு இப்பொழுதெலாம் கசப்பாகத்தான் இருந்தது. ஆசிரியரும் அவருடைய அதட்டலும் உறுத்தலும், கண்பார்வையும் அவனது மனத் திரையில் காட்சி கொடுக்கும். அதன் அதிகார ஆக்கிரமிப்புக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடு அல்லது பிரப்பம் பழம் கிடைக்கும் எறை யதார்த்தத்தை வெளிப்படுத்தும். அந்த வெறுப்பான காட்சியைக் காண அவன் விரும்பவில்லை. அவன் விரும்பியதெல்லாம் அந்தப் பசுக் கூட்டங்களே; அதன் கன்றுகளே. செவி மலர்த்தி முன்னங் கால்களை மடக்கி துள்ளி ஓடும் சிறு வெள்ளைக் கன்றின் காட்சி அவன் பிள்ளை உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. பச்சைப் புல் படர்ந்த பசுமை வெளியிலே, பசுக்களுக்கு மேய்ச்சல் காட்டி வந்தாலென்ன? என்ற கேள்வியும் அப்படித்தான் செய்ய வேண்டுமென்ற பதிலையும் அவனே தீர்மானித்துக் கொண்டான். மறுநாள் பாடசாலை செல்வதென்ற பெயரோடு மாடுகளோடு போய் விட்டான். அந்த இயற்கை எழில் நிறைந்த ஏகாந்தம் அவனுக்கு பிடித்திருந்தது. ஆகவே புத்தகச் சாமான்கள் செடி மறைவில் உறங்கின. வாகிது தன் எண்ணம்போல பசுக்களோடு - முன்னைப்பாக மைலி ஓடு ஓடி, ஆடிப்பாடி, மகிழ்ந்து திரிந்து கொண்டிருந்தான். பெற்றுரையும், ஆசிரியரையும் ஏமாறவைத்த உண்மையும் ஒருநாள் வெளிப்பட்டுவிட்டது.

★

மாலை நேர மஞ்சள் வெயிலில், தலைமை ஆசிரியர் ஒருநாள், வீதிவழியே நடைபழகிகொண்டிருந்தார். வழக்கமாகச் சனநடமாட்டமின்றி வெறிச்சென்றிருந்த அந்த கிராமமும், அதனை அடுத்த பரந்தவெளியும் அதன் பசுமையும் பாடும் தென்றலும் ஆடி ஓடிச் சிரித்துச் செல்லும் சிற்றருவிப் போக்கும் ஆசிரியரைக்கூடக் கவர்ந்து விட்டது. அவருடைய அறுபது வயதும் தள்ளாமையும் கூடத் தெரியாது நடந்து கொண்டேயிருந்தார். திடீரென்று ஏதோ [illegible] வந்தவர்போல் அந்தச் சிற்றெழுங்கையின் நாலாவது வீட்டடியில் போய் சாதல் கமீது சாகுல்கமீது என்று கூப்பிட்டார். இதுதான் வாகிதுடைய தந்தையின் பெயர். வீட்டில் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தவர் தலையை நீட்டிப் பார்த்து போட்ட 'சிறுவாலோ'டு ஒடிவந்தார். சிறுவால் என்பதற்கு அகராதிபுரட்டினால் வாசகர்கள் நிச்சயமாய் ஏமாறித்தான் ஆகவேண்டும். அது சில கிராமத்தவர்களால் வயல் வேலைகளின்போதும், வேறு வேலை நேரங்களிலும் அணிந்து கொள்ளும் முழங்காலுக்கு மேற்பட்ட ஒரு 'லோங்ஸ்'. "ஏன் உன் மகன் ஏழெட்டு நாளாய் பாடசாலைக்கு வரவில்லை?" என்று கேட்டார் ஆசிரியர். "என்னய்யா!" என்று ஆச்சரியத்தோடு கேட்ட சாகுல்கமீது வாயைப் பிழந்தாரே தவிர பதில் கூறவில்லை. ஏனென்றால் அவர் மகன் வாகிது ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் போவதையும் திரும்பி பாடசாலை கலையும் நேரத்திற்கு வருவதையும் அவர் தன் கண்ணாலேயே பார்த்துக் கொண்டுதானே இருந்தார். அதே நேரத்தில் வந்த அடுத்த வீட்டுப் பையன் ஒருவன் "அவன் மாட்டோடு திரியுறான் ஐயா" என்றதும்தான், வாகிது பள்ளி செல்வதும் திரும்பி வரும் உண்மையுந் தெரிந்தது. பீறிட்டுவரும் ஆத்திரத்தோடு "நான் இனி ஒழுங்காய் அனுப்பிவைக்கிறேன் ஐயா" என்று தலை சாய்த்துச் சொல்லி அனுப்பி விட்டார். அவர் போன பிறகு திண்ணைப் படியில் இருந்துகொண்டு வாகிது வரும் வழியையும் வீட்டுக் கூரையையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தார். கூரையில் அவர் வண்டிமாட்டிற்காக வெட்டி வைத்திருந்த துவரங்கம்பு இருந்தது. அதே நேரத்திலே வாகிதும் வந்து சேர்ந்தான். அவனைப் பிடித்து அந்தத் துவரங் கம்பால் "இல்லே வாப்பா நான் போ மாட்டேன் வாப்பா" என்று கதறக் கதற வெளுத்துத்தள்ளி விட்டார். அந்த அடி ஞாபகத்தில் இருந்த வரை இரண்டு நாள் பாடசாலைக்குப் போய்வந்தான். பிறகு 'மைலி'யையும் வெள்ளைக் கன்றையும் பார்த்தான். அவைகளும் பார்த்தன. தன் பிரிவால் அவைகள் வாடுவது போலஉணர்ந்தான். பழைய படி நீர்காட்டினான்; உணவூட்டினான். தொடர்ந்து மாடு மேய்க்கச் செல்லும் பழக்கத்தையும் ஆரம்பித்துக்கொண்டான். இதற்காக அவன் பலமுறை அடிவாங்கி இருக்கிறான். ஆனால அந்த பசுமை படர்ந்த புல்வெளியையும் கலகலவெனச் சிரித்தோடும் குளிர்நீர் ஓடையையும் சிறுசிறு குன்றுகளையும் யானைக் கூட்டங்களைப்போல் படர்ந்திருக்கும் கற்பார்களையும் நீண்டும், குறுகியும் சடைத்தும் வளர்ந்து காட்சி தந்த மரங்களையும் அவனால் மறக்க முடியவில்லை என்பதைவிட, 'மைலி'யையும் கன்றையும் அவனுல் பிரிந்திருக்க முடியவில்லை என்று கூறிவிடலாம். அவன் செத்தாலும் மைலி என்றுதான் சாவான்என்பதை உணர்ந்து கொண்ட அவன் தந்தை வாகிதின் போக்குக்கே விட்டுவிட்டார். அவனைப் பற்றி நீங்கள் இவ்வளவுந் தெரிந்து கொண்டால் போதும். இனி வாகிதைக் கவனிப்போம்.

★

வானத்தில் கரிய முகிற் கூட்டங்கள் அந்தமிந்தும் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தன. அவை கக்கித் துண்டு துண்டாய் வெட்டி எறிவதுபோல, பளீர் பளீர் என மின் வெட்டித் தள்ளியது. அதைத் தொடர்ந்து வானம் குமுறிக் கொந்தளித்தது. பசுக்களும் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தன. அடா, மைலி, கறுப்பி, ஓகோ..... பட்டி, பட்டி ஓ...கோ...கோ .....வள்ளி! எங்கடா போவது? பட்டி, பட்டி ஓ...கோ ...கோ..... என்று நிரைதவறிப் பாயும் பசுக்களின் பெயர் கூறிக் குரல் காட்டிக் கொண்டே போனான். பளார்! என்றோர் மின் ஒளி! ஒரு விநாடிக்குள் ஆயிரம் பீரங்கிகளை ஒருமித்துச் சுட்டதுபோல படார்ர்ர்..... பட், படீர் என்ற முழக்கம். பசுக்கள் பயத்தால் சிதறி விட்டன. புல்லும் புதரும் அடர்ந்த மற்றைக் காட்டினூடே மைலி, வாவா, பட்டி, பட்டி ஓ...கோ...கோ .....ஓ...கோ.....என்று ஓடிக் கொண்டிருந்தான். புற்றின் அடியே இடிகேட்டு நடுங்கிக் கிடந்த நாகம், அவனுடைய காலோடு இரண்டடி தூரம் போய் நெளிந்து சுருண்டு விழுந்தது. அப்பொழுதும் அவன் மைலி ஓ...கோ..... தலையைக்கிறுக்கியது. மைலியின் முன்போய் விழுந்தான். பசு அவனைப் பார்த்துக் கொண்டேஇருந்தது. அவன் எழும்பவே இல்லை. வானத்தின் பொடு பொடுத்த மழைத்துளி ஒடு, மைலியும் அவனுக்காக இரண்டுசொட்டுக் கண்ணீர் வடித்துவிட்டது.

டில்லியில் கூடியுள்ள ஆசிய மகாநாடு

ஆசிய நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், சமூக ஊழியர்கள், பொருளாதார மேதைகள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், எம்.பிக்கள் முதலானோரின் 4 நாள் மகாநாடு புதுடில்லியில் கூடியிருக்கிறது. 20 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளார்கள்.

நேரு — சௌஎன்லாயின் பஞ்சசீலக் கொள்கைகளை பாரறிய ஏற்றுக்கொள்வதும், அதன் அடிப்படையில் உலக நெருக்கடிக்கு மாற்றம் காணும் திட்டம் தீட்டுவதும் மகாநாட்டின் நோக்கம். இது இம்மாதம் 18ம் திகதி பங்டொங்கில் கூட இருக்கும் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் மகாநாட்டிற்கான முன்னோடியாக நடைபெறுகிறது இதை பாரதப் பிரதமர் நேருவின் மைத்துனி ஸ்ரீமதி ராமேஷ்வரி நேரு கூட்டுவித்தார்.

பெண்களுக்கு ஓர் மகா சஞ்சீவி

கெர்ப்பத்தைத் தடுக்கும் ஆறுவித நோய்களையும் அகற்றி, சூதக வயிற்றுவலி, வாய்வு, தலைவலி, மயக்கம், ஏப்பம், படபடப்பு, திரேகம் பூரித்தல், குத்தல், உழைவு, சோம்பல், ஆயாசம், பலவீனம், உஷ்ணம், விலக்கம் மிகுதியாகப் போகுதல், கொஞ்சம் கண்டு மறைதல் போன்ற சகல வியாதிகளையும் போக்கவல்லது

கெர்ப்பக்கோள நிவாரணி

சிறியது—ரூ. 3-75.

பெரிய புட்டி விலை ரூ. 7-00

வி.பி.பி. செலவு வேறு.

சென்ற் மேரி வைத்தியசாலை,

201, செட்டியார் தெரு, கொழும்பு.

பலவீனர்களுக்கு

கூடுதல் தாதுசத்து அவசியம்

நீங்கள் 100% முற்றிலும் தகுதியுடையவர்கள் என்பதாக உண்மையில் கூறமுடியுமா? உடல படுக்கத்தக்கூடிய உணவு உங்களுக்குத் தேவையில்லையா?

அப்படி முடியாத பட்சத்தில் நெஸ்டோமால்ட் நீங்கள் அவசியம் உபயோகிக்கவேண்டிய பானமாகும். நெஸ்டோமால்ட் சுகதமானது செழுமையான பால் சத்தியூட்டமாகட்ட பார்லி, கோதுமைப்பட்டமின B1 - இரத்தசுத்தத்தை வளர்ச்சிக்கும் வீரியத்திற்கும் முக்கியத்துவமானது.

தினசரி ஒரு கிளாஸ் நெஸ்டோமால்ட் அருந்திவருவது விடமின B1 குறைவை மட்டும் நிவர்த்தி செய்து மட்டுமின்றி சத்துவம் உங்களை உற்சாகமாக ஜீவிக்கச் செய்யும்.

இதை உட்கொள்வதால் செலவு குறைவு. உங்கள் ஆரோக்கிய நன்மையோ பெரிது. அது மட்டுமா, நெஸ்டோமால்ட் நல்ல இதப்பானது.

நெஸ்டோமால்ட்

எல்லோருக்கும் இன்றியமையாத பானம்.

ஓர் நெஸ்லஸ் சயாரி பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணப் படத்தில் இதிகாசக் கதை!

இராமாயணத்தை அல்லது மகாபாரதத்தை ஏ. வி. எம். படஸ்தாபனத்தார் வர்ணப்படமாக தயாரிக்க இருக்கின்றனர் என்று தெரிகிறது. இது தமிழிலும், ஹிந்தியிலும் எடுக்கப்படுமாம்.

இப்படத்திற்கு திரு. எம். வி. இராமன் டைரக்ட் செய்வார். சில பண்டிதர்கள் இதற்கான கதை வசனத்தை தொகுத்துவருகின்றனர். ஜூன் மாத அளவில் இதன் படப்பிடிப்பு ஆரம்பிக்கும். இது அசாதாரணமான நீளப்படமாக இருக்கும்.

இந்திய நாட்டின் தலை சிறந்த இதிகாசப் பொக்கிஷங்களான இராமாயணமும், மகாபாரதமும் உயர்ந்த வர்ணப்படரூபம் எடுக்க வேண்டும் என்ற உணர்வு கலை உலகில் நீண்டகாலமாக இருந்துவந்தது. உலகம் முழுவதும் இன்று பாரதத்தின் ஒப்பரிய கலைப் பொக்கிஷங்களுக்கு தலை தாழ்த்துகிறது. இந்த நிலையில் இவை பட உருவம் எடுப்பது வரவேற்கத்தக்கது. கம்பராமாயணத்தை தொடர்ந்து பாரதமும், மற்றும் சிறந்த இலக்கியங்களும் படங்களாக தயாரிக்கப்படும் என்ற அங்கலாய்ப்பு மக்களிடை எழுந்துள்ளது.

ஃ

நீதிபதி

ஜெப்படித்திருடன் தொட்டுபோட்டார்கூலி வரை இன்று தமிழ் படங்களின் கதாநாயகன்களாகியுள்ளார்களல்லவா? ஆனால் சமுதாயத்தின் ஆக உயர்ந்த படியிலே — அதாவது நீதி வளங்கும் நேர்மைவள்ளலாக கருதப்படும் நீதிபதிக்கு இதுவரை தமிழ் படம் ஒரு 'சிமோன்சான்ஸ்' தான் கொடுத்தது. இப்போது அந்த 'நீதிபதி'யின் பேராலே ஒரு படம் என்றுதானே எண்ணுகிறீர்கள்.

சரி, 'ஏட்' மாம்பழசாமியை அதுதான் ஹெட் கான்ஸ்டபிளை உங்களுக்குத் தெரியுமா?

அவர் பழுத்த பக்தர். நெற்றியிலே பட்டை, காக்கிச் சட்டை, அரைக்குமேல் பட்டை கொண்டவர். தலையில் சிவப்பு தொப்பி வேறு. தைரியம்-துணிவு துளிகூடக் கிடையாது. எப்படியோ 'எட்'டாக உயர்ந்துவிட்டார்.

ஒரு இடம். இரு தையல் தொழிலாளர்கள், கையை வெட்டு கழுத்தை வெட்டு என்று பேசிக்கொண்டிருந்தார்கள். சாட்சாத் 'எட்'டுக்கு துடைநடுக்கம் எடுத்து விட்டது. இது இவரது சூரப்புலித்தனத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

இந்த 'எட்'டாகவருபவர் வேறு யாருமல்ல மிஸ்டர் பாலையாவேதான்.

கே. ஆர். ராமசாமி பெண் வேஷம் போட்டுவர பாலையா காதல் செய்யும் காட்சி பிரமாதமாக இருக்கப் போகிறது. இதில் கதாநாயகனுக நாகேஸ்வரராவும், கதாநாயகியாக பத்மினியும் நடிக்கலாம். சாதாரணப் பாட்டாளியாக ராமசாமி நடிக்கும் இப்படத்தில் மாலதி, குசலகுமாரி, எம். என். ராஜம். சகஸ்ரநாமம் முதலியோர் நடிக்கிறார்கள். எ. எஸ். சாமி டைரக்ட் செய்யும் இதற்கு திரு. ஏ. கே. வேலன் வசனம் எழுதியிருக்கிறார்.

ஃ

ஒன்றேகுலம்

திருமூலர் தொட்டு இன்றுள்ள சீர்திருத்தவாதிகள் வரை 'ஒன்றேகுலம்' என்ற உச்சரிக்க — ஒதத்தவறியது கிடையாது, எனவே இந்த

ஸ்டூடியோவில்

'ஓதுமந்திரத்தை' மறந்து விட சினிமா உலகம் என்ன மந்தை உலகமா?

திரிவேணி பிக்சர்ஸார் சென்னை பிலிம் சென்டர் ஸ்டூடியோவில் தயாரிக்கும் படத்திற்கு ''ஒன்றேகுலம்'' என்று பெயரிட்டுள்ளனர். சென்னை முதல் அமைச்சர் காமராஜர் அந்தப் பெயரை வைத்தார்.

இந்தப் படத்திற்கான பெயர் சூட்டுவிழா சமீபத்தில் பிலிம் சென்டர் ஸ்டூடியோவில் நடந்தது. சென்னை சட்டசபை சபாநாயகர் சிவஷண்முகம்பிள்ளை தலைமை வகித்தார்.

இந்தப்படம் சாதிப் பிரிவினையை எதிர்த்த படம் என்று தெரிகிறது. நாடு சுதந்திரம் அடைந்தது. ஆனால் ''தீண்டாதார்'' என்று ஒதுக்கப்பட்ட—ஒடுக்கப்பட்ட அந்த மக்கள் குலத்திற்கு விமோசனம் கிடைத்ததா? இதை சித்தரித்து தீண்டாமை ஒழிப்புக்கு வழி காட்டும் இப்படம் தமிழ் நாட்டில் தனிப்பெரும் சாதனையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

இதில் மாதுரிதேவியும், மனோகரும் முக்கிய பங்கு எடுத்து நடிக்கிறார்கள். இதில் பெரும்பகுதி ''சூட்'' செய்து முடிகிறது. வெகு சீக்கிரத்திலேயே திரையிடப்படும் என்று நம்பப் படுகிறது.

லதாவின் படம்

லதா மங்கேஷ்கார்—ஹிந்திப்பட உலகத்தின் கானக்குயில், இவர் தனது சொந்தப்படம் ஒன்றை சென்னை ஏ. வி. எம். ஸ்டூடியோவில் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார் என்று தெரிகிறது.

இப்படத்தில் நாளினி ஜெயவந்த் கமிருது, பிஸ்வாஸ் ஓம் பிரகாஷ் ஆகியோர் நடிப்பார்கள் என்றும் நம்பப்படுகிறது.

நல்ல கதாப்பிரசங்கி காஞ்சனமாலை

கதாப்பிரசங்கம் தமிழ் நாட்டில் பன்நெடுங்காலமாக இருந்துவரும் வழக்கம். இது பெரும்பாலும் ஆலயங்களிலேயே நிகழ்ந்து வந்தது. பக்தியிலும்—வழிபாட்டிலும்நீண்ட காலமாக ஊறிக்கிடந்த தமிழ் நாட்டில், மக்கள் மத்தியில் மதத்தைப் பரப்ப இது பெரும் சாதனமாகக் கருதப்பட்டது. அதோடு கலை உலகிலே நவீன போக்குகள் வளரும் வரைக்கும், பழம்பெரும் இதிகாசங்களையும்—புராண ஆகமங்களையும் மக்கள் மன்றத்திற்கு கொண்டுவர இந்த வழி கையாளப்பட்டது.

ஆனால் புதிய புதிய இலக்கியத்துறைகள் தமிழ் நாட்டில் வளர்ந்துவரும் இன்று இந்த புராதான வழிமுறை பெரும்பாலும் மறக்கப்படக் கூடிய அளவில்தான் உள்ளது. என்றாலும் இதன் பாரம்பரியத்தை முன்னுக்குக் கொண்டு போகும் பெரியார்கள் தமிழ் நாட்டில் இல்லாமல் இல்லை.

இவர்களில் ஈழத்திற்கு அடிக்கடி விஜயம் செய்து அருமையான கதாபிரசங்கங்கள் திகழ்த்தும் திருமதி காஞ்சனமாலை அம்மையார் ஒருவர்.

இனிமையான பாட்டுக்கள், தெளிவான நடைப்பாணி, சரளமான ஓட்டம், ஆழ்ந்தஞானம் இவற்றுடன் கதாபிரசங்கங்களை கேட்போர் மனமுருக ஜனரஞ்சிதமாக நிகழ்த்தும் இவர் 1946ம் வருடம் கும்பனித் தெரு கோயிலுக்கு வரவழைக்கப்பட்டார். அன்று முதல் ஒவ்வொரு வருடமும் இவரை ஈழம் வரவழைக்கத் தவறுவதில்லை. கொழும்பு விவேகானந்த சபையிலும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையிலும், அனலைத்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் அருமையான கதாப்பிரசங்கங்கள் நடத்தியிருக்கிறார்.

இவருக்கு நல்ல சங்கீத ஞானம் உண்டு. இனிமையான குரலில் மிகவும் சுலபமாகவும், சரளமாகவும், நல்ல பாவத்துடனும் பாடி மக்கள் மனதை ஈர்ந்துவிடுகிறார். இவரது கதாப்பிரசங்கங்களின் வெற்றிக்கு இவரது சங்கீத ஆற்றலே உயிர்க்கோளம் எனலாம்.

1902ல் ஆற்காட்டில் பிறந்த இவர் சிறுவயது தொ

ட்டே தெய்வ பக்தியும், மத ஈடுபாடும் கொண்டிருந்தார். கடவுள் வழிபாட்டில் தன் உள்ளத்தை உறைய விட்ட இவர் பல புராணங்களை படித்தறிந்தார். இதுவே இவரை பிற்காலத்து கதாப்பிரசங்க வாழ்க்கைக்கு வழி காட்டி செப்பனிட்டது. பக்தி மார்க்கம் பரப்புவது இவரது குழந்தைப்பருவ அவா.

சென்னை நகரசபை சுகாதார இலாகாவின் இன்ஸ்பெக்டராக இருந்த திரு கே.

(13-ம் பக்கம் பார்க்க)

கடவுள்

உண்டா? இல்லையா?

எது கடவுள்? எங்கே கடவுள்? ஏன் கடவுள்? இதுவா கடவுள்? இல்லை கடவுள்? ஆகியவைகளை விரிவுடன் விளக்கும் நூல்

விலை சதம் 45 தபால் செலவுடன்

''பிரேமாஞ்சலி''

''விரகேசரி'' வாரப்பதிப்பு ஆசிரியர் 'லோகநாதன்' எழுதிய அற்புதமான நவீனம்

விலை ரூ. 2-25 தபால் செலவு சதம் 15 தனி

நவலட்சுமி புத்தகசாலை

136, செட்டியார் தெரு - கொழும்பு

இயல் இசை நாடகம்

சைவமங்கையர் கழகம் அளித்த 'தாளமும் சுருதியும்'

''நேரமும் - நிதானமும், தமிழனுக்குவராது. அது ஆங்கிலேயனின் ஏகபோகம் என்ற கருத்து நம் நாட்டிலே நீடித்து நின்றிருக்கிறது. ஆனால் இந்த ஆங்கில மோகிகளுக்கு சவால் விட்டவாறே, வசதியும் வாய்ப்பு மிருந்தால் தமிழனும் எதையும் சாதிப்பான் என்பதை பறையடித்துக் கொண்டு திரை விலகியது. ஆம்! சைவமங்கையர் கழகம் அளித்த 'தாளமும் சுருதியும்' பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

சென்ற வாரத்தின் இறுதி நாட்கள் இசையும் - கலையும் கலந்த-செறிந்த நாட்கள். ஏனென்றால் சின்னஞ் சிறு குழந்தைகள் குறு நடை போட்டு (நடித்து) மழலை பாடி (பாடி) அமிர்தம் பேசி (பேசி) பார்த்தோரை பரவசமூட்டிய நாட்கள் அல்லவா?

14 நிகழ்ச்சிகள் கொண்ட இந்த கலைக் கதம்பத்தில் ஐந்து பரத நாட்டியங்கள். பதம், வர்ணம், ஜெதீஸ்வரம், அபிநயம், தில்லானு- இந்த பாவனைகள் எல்லாம் தனிப்பொலிவுடன் திகழ்ந்தன. இடை இடையில் சிறு குறைகள் இருந்தபோதிலும் அசாதாரணமான இந்த பழம் பெரும் கலையை சிறுமிகள் பெருமிதத்துடன் ஆடி வெற்றி கண்டார்கள்.

சைவக்கலை — தமிழ்க்கலை பரப்பும் சைவமங்கையர் கழகம் தாரள மனப்பான்மையோடு கிறிஸ்தவக் கலைக்கும், மேல் நாட்டுக் கலைக்கும் இடமளித்து சிறந்த முன்னேடி அமைத்தது. 'வர்ணம் திட்டப்பட்ட பாவையின் திருமணமும்', 'சொக்கலெட் காய்ச்சலும் இந்தப் பணியை பாராட்டக் கூடியளவு நிறைவேற்றி வைத்தன.

செல்வச் சீமாட்டியின் பிறந்த நாள். சொக்லெட் உண்டதால் ஜுரம் எடுக்கிறது. ஒரே பரபரப்பு. டாக்டர் வரவழைக்கப்படுகிறார். வேலைக்காரி விட்டில் பூச்சிபோல ஆட்டிப்புடைக்கப்படுகிறாள். சிங்காரச் சீமாட்டிகளின் சொகுசு வாழ்வையும் - அகங்காரத்தையும், அதே போல நாட்டிற்காகப் போராடிய வீரன் பட்டினியுடன் திண்டாடுவதையும் 'சொக்லெட்காய்ச்சல்' வர்ணிப்பதே ஒரு தனிப் பாணி.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக ஒருகுட்டி நாடகம்.

''போர் - போர், சதா யுத்த வெறி. இது தானா வீரம்? இரத்தம் தோய்ந்த வெற்றி'' இந்த வார்த்தைகள் பொங்கெரி மூட்ட தன் மனைவி மன்றாடுகிறாள் மன்னர் அரசி. ஆம், சாவகநாட்டிற்கு சாவு பரப்ப - அந்த அப்பாவி மக்களை அடிமை கொண்டாள ஆதிக்க வெறி பிடித்த உதய சூரியனை எதிர்த்து, தமிழ் பண்பாட்டின் வழி வரும் அந்த மாதர் குல மாணிக்கம் முழங்குகிறாள்.

இந்த வார்த்தைகளுடன் ஆரம்பிக்கும் இந்த சிறு நாடகம் உதய சூரியனின் யுத்த வெறியையும்-சாவக நாட்டு வீரர்களின் சுதந்திர ஆர்வத்தையும் ஒப்பரிய பாணியில் சித்தரிக்கிறது.

போக வேண்டாம் என்று மனைவி தடுக்கிறாள். நல்லறிஞர் நந்திதேவர் தடுக்கிறார். என்றாலும் ஆதிக்க வெறியன் நின்ற பாடில்லை. அவனால் அமுதூட்டி வளர்க்கப்பட்ட விஜயன் சாவக மக்கள் பக்கம் சேர்கிறான். யுத்தம் மூளுகிறது. என்றாலும் இறுதியில் நீதி வெல்கிறது.

''போர் ஆயுதங்கள் துருப்பிடித்துக் கிடக்கின்றன'' என்று போர்த்தளபதிகள் கொக்கரிப்பது, இன்று போர்க் கருவிகளை குவித்து வரும் வல்லரசுகளின் போக்கை உலுப்பிக்காட்டுகிறது.

''அவர்கள் ஆள்பலம் கொண்டிருக்கலாம், ஆனால் நாம் உரிமைக்காகப் போராடுகிறோம்'' என்பதும் ''காசுக்குப் போராடும் அந்த கயவர்கள் எங்கே?'' என்று விஜயன் கேட்டதும் இன்று உள்ள ஆக்கிரமிப்பாளருக்கு அபாய அறிவிப்பாக அமைந்துள்ளது.

அதோடு 'கல்லென்றாலும் கணவன்' என்ற பேதை மனோபாவத்தில் வந்த தமிழ் நாட்டிலே ''கணவனுகடமையா? நீதியா நேர்மையா?'' என்று உதயனின் பாரியார் பொங்குவது தமிழ் கலையில் ஒரு புரட்சியென்றேகூறலாம்.

மொத்தத்தில் பழம் பெரும் கலைகளை—சம்பவங்களை, கலாக்காரங்களை இன்றைய யதார்த்தத்தேவைக்குத்தக்க முறையில் எப்படி வளர்க்கலாம் என்பதற்கு இந்தநாடகம் ஒரு எடுத்துக் காட்டு.

நல்லமுறையில், புதுமையோடு இந்த நாடகத்தைத் தயாரித்த சைவமங்கையர் கழகத்தை மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழுக்கு ஒரு ஆட்சியும், மக்கள் கலைகளை வளர்க்கும் ஆட்சி அமைப்பும் இருந்தால் எமது கலைகள் எவ்வளவுதூரம் முன்னேறும் என்ற உண்மையை இந்த கலாநிகழ்ச்சிகள் நினைவூட்டின.

—பிரேம்ஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்பின்ஸ்டன்

"சுரங்கனி"

வியாழன் முதல் மத பேதய

செல்லமஹால்

எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த நாம்

வியாழன் முதல்

ஸ்ரீராம், குசல குமாரி நடித்த

போன மச்சான் திரும்பி வந்தான்

முருகன் டாக்கீஸ் [கொழும்பு]

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணி, சனி, ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கும் ஞாயிறு காலை 10 மணிக்கும் காட்சிகள்

கழுத்தளவு கஷ்டம் வந்தாலும் கடமையில் தவறக்கூடாது என்பதே ரகுவின் தாரக மந்திரம். ரகு ஜமீந்தார் குலசேகரனின் ஒரே மகன்—கடமையின் முன்னில் தந்தையின் வாக்கைத் தட்டுகிறான் — மனைவியுடன் வீட்டில் நின்று வெளியேற்றப்படுகிறான். ஜமீன்தாரின் மருமகன் மூர்த்தியின் சந்தர்ப்பச் சதுரங்கத்தில் குலசேகரனின் குடும்பம் சொக்கட்டான்களாய் மாறுகிறது. உண்மைக்கு அழிவில்லையல்லவா? —மூர்த்தியின் கதி, குலசேகரனின் குடும்ப விளக்கு எரியுமா என்பதையெல்லாம் திரையில் பாருங்கள்

பல வருட திரை மறைவிற்குப் பிறகு நகைச்சுவை ஜோடிகள் கிருஷ்ணன்—மதுரம் திரை விருந்தளிக்கும் முதல் படம். பார்க்கத் தவறுதீர்கள்.

எம். கே. ராதா, கிருஷ்ணன், மதுரம், பாலையா, பண்டரிபாய், கே. வரலக்ஷ்மி முதலியோர் நடித்த

ஜெய்சக்தியின்

"நல்லகாலம்"

டைரக்ஷன்: சின்ஹா & வேம்பு.

சுயபாஷை ஆசிரியர்களின்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டிடுவதாயின் இரு வகுப் பாருக்கும் பொதுவான ஒரு பரீட்சை வைப்பதே நீதியாகும். இதைவிடுத்து சுதந்திர இலங்கையில் என்றுமே பாஷைத் துவேஷத்தை உண்டாக்கும் புதிய முறைகளை இன்றைய அரசாங்கம் கைக்கொள்ளுவது முற்றிலும் விரும்பத்தகாததாகும்.

இன்றைய அரசாங்கம் பேச்சளவிலே தேசியமொழிகளை உயர்ந்த அந்தஸ்தில் வைக்கப் போகிறோம் என்று கூறுகிறது. ஆனால் கிரிகையில் அதன் நடவடிக்கை தேசிய மொழியைக் கொலை செய்வதாகும். தேசியமொழியைப் போதிப்பதிலேதான் சுயபாஷா ஆசிரியர்களென்ற ஒரு வகுப்பு இலங்கை தோற்கள் தமது உரிமையை பெறுவதற்காக கனசவேட்டிவ் அரசாங்கத்தைத் தேர்தலில் எதிர்த்துப் போராடி தொழிற்கட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தினர். இதன் பயனாய் அவர்களின் உரிமை கிடைத்தது. இதைப்போலவே இலங்கை முழுவதும் பரவிக்கிடக்கும் 30,000க்கு அதிகமான சுயபாஷா ஆசிரியர்கள் எதிரேவரும் தேர்தலில் யு. என். பி. அரசாங்கத்தை எதிர்த்துப்போராட வேண்டியிருக்கிறது. இதற்கு சிங்கள—தமிழ் ஆசிரியர் சங்கங்கள் கூட்டாகச் சேர்ந்து ஒரு திட்டத்தை வகுத்து சுயபாஷா ஆசிரியர்களை வழி நடத்துவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

நல்ல கதாப்பிரசங்கி..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். சோமசுந்தரத்தை தனது 24வது வயதில் திருமணம் செய்துகொண்டார். கணவன் தனதுமதத்தோண்டுக்கு உடந்தையாக இருந்ததால் சிறு பிராயத்து ஆசை பூர்த்தியாக வழிபிறந்தது.

1952ல் தனது அருமை நாயகனை இழந்த இவருக்கு 25 வயதுடைய பாலசுப்பிரமணியன் என்ற புத்திரன் உண்டு. இவரது மன ஆறுதலும்—தெம்பும் பாலசுப்பிரமணியனே.

பல கதாபிரசங்கங்களை நிகழ்த்தும் இவர் இன்றும் அறிவு பெறுவதில் அடங்காத ஆர்வம் காட்டுகிறார். கதாபிரசங்கங்கள், மதசம்பந்தப்பட்ட பிரசங்கங்களை கேட்கத் தவறுவதில்லை. அதேபோல நித்தம் ஆலய வழிபாட்டையும் தவறுவதில்லை.

சென்ற சில வாரங்களுக்கு முன் கும்பனித்தெரு கோயிலில் கதாபிரசங்கம் நிகழ்த்திய திருமதி காஞ்சனா அம்மையார் மீண்டும் பல தடவைகள் ஈழம்வந்து தன் அன்புப்பணி புரிவார் என்று தெரிகிறது.

—

அரில இலங்கை..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னல் தங்கள் தாய்மொழியாக எது நிர்மானிக்கப்படுகிறது என்பதை அறியவந்த அநேக முஸ்லிம்களுக்கு இவர்களின் பேச்சு விளங்கவில்லை. ஜனாப் அபூபக்கர் தமிழில் பேசிய பேச்சு எல்லோரும் விளங்கக்கூடியதாக இருந்தது.

—'உலகவன்'

வருகிறது ! வருகிறது !! வருகிறது !!!

கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியை அளித்த அதே பத்மினி பிக்சர்ஸாரின் தயாரிப்பு

சிவாஜிகணேசன், அஞ்சலிதேவி, கிருஷ்ணன், மதுரம் முதலியோர் நடிக்கும்

முதல் தேதி



சென்ட்ரல் ஸ்டார்

(கொழும்பு) (நாளை)

இன்று காலை 10 மணி, மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும், நாளை மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்

குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய வாழ்வையும் பிரதிபலிக்கும் சிறந்த சமூகப் படம்.

ஸ்ரீராம், சாவித்திரி, வரலக்ஷ்மி, துரைராஜ், தங்கவேலு, ராமச்சந்திரன் நடித்த

குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேடியத்தின் கர்த்தா மேரி கியூரி

1867ம் ஆண்டு வார்சோ நகரில் பெண்களுக்கு மங்காப் புகழ் நல்கவும் விஞ்ஞான உலகிற்கு ஒப்பரிய சேவை செய்யவும் ஒரு மாது சிரோன்மணி பிறந்தார். சுதந்திரத்தை இழந்து அடிமை நாடாகத் தவிக்கும் போலந்தில் தான் மேரி ஸ்குலோடோவ்ஸ்கா பிறந்தார். அந்தக்காலத்தில் போலந்தை ருஷ்யர்கள் ஆண்டு வந்தார்கள்.

இவருடைய தகப்பனார் தன் நாட்டை அடிமைத் தளையிலிருந்து விடுவிப்பதற்காக பல புரட்சிக் கழகங்களில் சேர்ந்து பாடுபட்டார். காலாகாலத்தில் மேரியையும் இந்தச் சுதந்திர வேட்கை ஆட்கொண்டது. இதனால் அரசாங்கத்திற்குப் பயந்து கிராக்கே என்னும் ஊருக்கு ஓட வேண்டியிருந்தது.

பின்பு இவரது ஆற்றலையும், திறமையையும் அறிந்த அரசாங்கம் இவருக்கு ரஷ்யாவில் ஓர் பொறுப்பு வாய்ந்த உத்தியோகம் கொடுத்தது. ஆனால் மேரி தன் நாட்டாருக்கு அரசாங்கம் இழைக்கும் கொடுமையை அறிந்த அந்த வேலையை ராஜினமாச் செய்தார். பின்பு பாரிஸ் நகரம் சென்று தன் ஜாகையை அமைத்துகொண்டார்.

பாரிஸில் இவர் மிகவும் கஷ்டப்பட்டார். ஏழ்மையால் வாடினார். தந்தையின் வறுமை நிலையை அறிந்து அவரிடமும் உதவி கோரவில்லை. பின்பு போர்போன் ஆய்வு மன்றத்தில் அதற்கான உபகரணங்களைக் கழுவி சுத்தமாக வைத்திருக்கும் வேலையை வறுமையின் காரணமாக ஏற்றுக்கொண்டார்.

இந்த ஸ்தாபனத்தின் உரிமையாளர், பேராசிரியர் லிப்மன் மேரியின் திறமையையறிந்து மேரியின் தகப்பனாரை அணுகி அவரை விஞ்ஞான பட்டப் படிப்பு பயில பண உதவி நல்குமாறு வேண்டினார். தகப்பனாரும் அதற்கிசையவே மேரியும் வெகு திறமையாகவே கற்று வந்தார்.

மேரியின் ஆராய்ச்சி பித்து 1894ம் ஆண்டில் அவரின் வருங்காலக் கணவரின் நட்பைத் தேடிக் கொடுத்தது. பியரிகுயூரி மேரியைப் போலவே ஆராய்ச்சி வல்லுனர். எனவே இருவரிடையேயும் நட்பு வளர்ந்து காதலாகப் பரிணமித்தது.

1896ம் வருடம் பிரபல விஞ்ஞானி ஹென்றி பெக்கரெல் யூரேனியத்திலுள்ள ஓர் வகை உப்பு ஒளிக்கதிரை உண்டாக்கி, கடுதாசி கார்ட் போர்ட் முதலியவற்றையும் அது ஊடுருவிச் செல்லவும் வல்லமைபடைத்தது என்பதைக் கண்டுபிடித்தார். மேரியும் இவ்வித ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்ததால் மேலும் உற்சாகத்துடன்

கரம்பனூர் கருணை

தொடர்ந்து இதை ஆராய்ந்து யூரேனியம் உள்ள உலோகங்களின் ஒளிச் சக்திதான் மேம்பட்டது என்ற முடிவுக்கு வந்தார்.

இதைப்பற்றி மென்மேலும் இருவரும் பரீட்சை செய்தனர், இந்த இடைவிடா ஆராய்ச்சியின் முடிபே 1898ம் ஆண்டு இந்த அம்மையாரால் கண்டுபிடிக்கப்பட்ட ரேடியம் இதைப்பற்றி தொடர்ந்து ஆராய்ச்சி செய்வதற்கு இதற்கான உபகரணங்கள் கிடைப்பது அரிதாயிருந்தது. ஒரு கிராம் ரேடியம் உற்பத்தி செய்வதற்கு இவர்களுக்கு 22 டன் 'பிசபிலண்ட்' தேவையாயிருந்தது. இவற்றை வாங்குவதற்கோ பணமில்லை. ஆனால் ஆஸ்திரேலிய அரசாங்கம் இவற்றை இவர்களுக்கு நல்கி உற்சாகமளித்தது.

இவர்கள் வேலை செய்த ஆய்வு மன்றம், இவர்களுக்குத் தனிக் கட்டடம் கொடுத்தார்கள். கியூரி அம்மையாரே இம்முயற்சியில் ஈடுபட்டார். இரண்டு வருடங்கள் மனந்தளராது ஆராய்ச்சி செய்தார்.

1900ம் ஆண்டில் பாரிஸில் நடந்த பௌதிக சாஸ்திர மகாநாட்டில் இவர்களின் கண்டுபிடிப்பு அறிவிக்கப்பட்டது. மேரிக்குப் புகழ்மாலைகள் வந்து குவிந்தன. இவரது கணவர் பியரிக்கு ஜெனிவா சர்வகலாசாலையில் பேராசிரியர் வேலை அளிக்கப்பட்டது. ஆனால் அவர் அதை ஏற்கவில்லை. ஏனெனில் மனைவியை விட்டுப் பிரிய மனமின்மையால்இந்த ஆராய்ச்சியின் பயனை கியூரி அம்மையாருக்கு பாரிஸ் சர்வகலாசாலை ''விஞ்ஞான டாக்டர்'' பட்டம் அளித்தது. 1903ம் ஆண்டில் பௌதிகத்திற்கான நோபெல் பரிசையும் பெற்றார். இதனால் கிடைத்த 8000 பவுண்ட் தொகையை இவ்வாராய்ச்சியில் ஈடுபட்ட பெக்கரெலுக்கும் பகிர்ந்து அளித்தனர். மேலும் இவர்களது முயற்சியையும், உலகிற்குச் செய்த சேவையையும் பிரபல ஆங்கில விஞ்ஞானிகளான, குரூக்ஸ் ராம்சே, ஒலிவர் லொட்ஜ் தொம்சன் முதலியோர் போற்றிப் புகழ்ந்தனர்.

1906ம் வருடம் ஏப்ரல் மாதம் கியூரி அம்மையாரின் கணவர் பியரி ஓர் விபத்தில் சிக்கி இறந்தார். ஆனால் இவர் மனந்தளராது பாடுபட்டு 1914ம் வருடம் பாரிஸில் ரேடியம்ஸ்தாபனத்தை நிறுவினர். 1911ம் ஆண்டிலும் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதுவே ஒரே நபருக்கு இருமுறை கொடுக்கப்பட்ட நோபல் பரிசு வேறெவருக்கும் இருமுறை நோபல் பரிசு கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பின்பு தாயகமாகிய வார்சோ நகரிலும் ரேடியம் ஸ்தாபனத்தை நிறுவினர்.

விஞ்ஞான உலகிற்கு அரிய சேவை செய்தவரும், பெண்களுக்கு நன்மதிப்பைத் தேடிக் கொடுத்தவருமான கியூரி அம்மையார் 1934ம் ஆண்டு இயற்கையெய்தினர். ஆனால் அவர் எழுதிய ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்கள்கொண்ட. ''ரேடியோ இயக்கத்தைப்பற்றிய விளக்கம்'' என்னும் நூலும், உலகின் இன்றியமையாத ரேடியமும் அவரை என்றென்றும் மனதிலிருத்தும்!



ஒரு மூலசக்தி (நியூக்ல எனர்ஜி) எதிர்காலத்தின்சக்தி. பத்து வருடங்களில் இந்த சக்தியை பிரமாண்டமான அளவு வளர்ப்பதற்கு பிரிட்டன் திட்டமிட்டுள்ளது. பிரிட்டனிலுள்ள கம்பர்லான்டில் நிறுவப்பட்டுள்ள கரு மூலசக்தி நிலையத்தில் காண்க. இதிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்யப்படும்.

மாணவர்களுக்கிடையில்:

வளரும் தோழமை

மாஸ்கோவிலுள்ள லெனின் கிராட் ஜில்லாவில் இருக்கிறது எங்களுடைய பள்ளிக்கூடம். மாஸ்கோவின் இதர ஜில்லாக்களைவிட மிகவும் சமீபகாலத்தில் தோன்றிய ஜில்லா இது. மிகவும் விஸ்தாரமான ரீதியில் இங்கு கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. குடியிருப்பு வீடுகளும் அவற்றின் அருகே புத்தம் புதிய பள்ளிக்கூடங்களும் ஆண்டு தோறும் கட்டப்பட்டு வருகின்றன. 706ம் எண் பள்ளி இரண்டு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இன்று இந்தப் பள்ளியில் மொத்தம் ஆயிரம் சிறுவர்களும் சிறுமிகளும் கல்வி பயிலுகின்றனர்.

எங்கள் பள்ளியின் மாணவர்களும் மாணவிகளும் பற்பல நாடுகளையும் சேர்ந்த சிறுவர் சிறுமிகளுடனும் இளைஞர்களுடனும் கடிதத் தொடர்புகொண்டுள்ளனர். தவிரவும் ஹங்கேரி, கொரியா, சிலி, இந்தியா, இதர பல நாடுகளிலும் அவர்கள் வயதுவந்த பல நண்பர்களைப் பெற்றுள்ளனர். கல்வி பயிலுவதற்காக அயல்நாடுகளிலிருந்து சோவியத் நாட்டிற்கு வரும் மாணவர்கள் சிலசமயம் எங்கள் பள்ளிக்கு விஜயம் செய்வதுண்டு.

''தேசங்களிடையே சமாதானத்தை வளர்ப்பதற்கான'' சர்வதேச ஸ்டாலின் பரிசு பெற்றவரான டாக்டர் சைபுதீன் கிச்சிலுவிற்கும் எங்கள் பள்ளியின்மாணவர், மாணவிகளுக்குமிடையே போற்றற்குரிய நட்பு வளர்ந்துள்ளது.

இந்த நட்பு வளர்ந்ததின் வரலாறு வருமாறு:

1953 பிப்ரவரியில் ஒரு நாள் மாலையில் பனிபலமாகப் பெய்துகொண்டிருந்தபோது எங்கள் பள்ளியின் முன் ஒரு கார் வந்து நின்றது. மாஸ்கோவாசிகளுக்கு நன்கு அறிமுகமான ஒருவர் காரிலிருந்து இறங்கி வந்தார். பிரபல இந்தியப் பொதுநல ஊழியரும் சமாதான வீரருமான டாக்டர் சைபுதீன் கிச்சிலுதான் அவர்.

''எனது இளம் நண்பன் சாஷா கிராமிலேவ் உள்பட பல சிறுவர்களும் சிறுமிகளும் விருந்தினரைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். மாஸ்கோ ஆஸ்பத்திரி ஒன்றில் டாக்டர் கிச்சிலு இச் சிறுவனைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தனர். சாஷா முதலில் குணமடைந்து ஆஸ்பத்திரியைவிட்டு விலகினான். தன் நண்பரிடம் விடைபெற்றுக்கொள்ளும்போது சாஷா அவர் விரைவில் குணமடைய வேண்டுமென்று வாழ்த்தினார்; தனது பள்ளிக்கு வருமாறு அவரை அழைத்தான்.

டாக்டர் கிச்சிலு தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ''வாய்ப்புக் கிடைத்த மறுகணமே உன்னை வந்து சந்திக்கிறேன்'' என்றார்.

பள்ளியிலே இன்று அவர் வசதியான, விசாலமான அறையில் சிறுவர்கள் சிறுமிகளிடையே அமர்ந்து அவர்களுக்கு இந்திய நாடுபற்றிக் கூறிக்கொண்டிருக்கிறார். புத்தகங்களிலிருந்தும் திரைப் படங்களிலிருந்துமே இவர்கள் யாவரும் இந்தியாவைப்பற்றி தெரிந்துகொண்டிருந்தனர். இதன்பின் இம் மாணவர்கள், மாணவிகளின் படிப்புபற்றியும் அவர்களுடைய பொழுதுபோக்கு நடவடிக்கைகள் பற்றியும் கூறுமாறு விருந்தினர் கேட்டுக்கொண்டார்.

சைபுதீன் கிச்சிலுவின் உதவியுடன் சோவியத் பள்ளி மாணவர்களும் மாணவிகளும் இந்தியப் பள்ளி மாணவர்கள், மாணவிகளுடன் கடிதப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

சமாதானத்திற்குப் பாடுபடும் இளைஞன் கெஹர் சிங் (பெரெலி, உத்தர் பிரதேஷ்) 706ம் எண் பள்ளிக்கு எழுதிய பல கடிதங்களில் ஒன்று இது:

''அருமை நண்பர்களே, வாழ்த்துக்கள் உங்கள் கடிதத்தின்மூலம் நீங்கள் தெரிவித்துக்கொண்டுள்ள சகோதர வாஞ்சையையும் நல்வாழ்த்துக்களையும் கண்டு நான் ஆதர்சமூட்டப்பட்டிருக்கிறேன்.

உங்களுடன் நட்பை வளர்த்துக்கொள்ள வேண்டுமென ஆசைப்படுகிறேன் நான். எனவே தொடர்ச்சியாக உங்களுக்கு நான் கடிதம் எழுத வசதியாக இருக்கும்பொருட்டு உங்களது சொந்த முகவரிகளைக் குறித்து அனுப்பும்படிக் கேட்டுக்கொன்கிறேன்.''

(தொடரும்)

உயிர்த்த திருநாள்
அஞ்சலி!

மனிதனுய்ப் பிறந்து வாழ்ந்து
மாண்டுமீண் டுயிர்த்தீர் வாழ்வில்,
மறுமலர்ச் சியைக்காண் பித்தீர்;
மகிமைசே ரியேசு நாதா!

புனித,நின் நெறிமெய் யன்பு
புவியெலாந் தழைக்க வேண்டில்,
பொருள்வளம் பலுகி யெங்கும்
பொலியவேண் டுஞ்சு பீட்சம்;

மனிதர்வாழ் வின்பி ராண
வாயுவாஞ் சமாதா னம்மிவ்
வையத்தில் வளர வேண்டில்,
வன்மம்,போர் தொலைய வேண்டும்

நனிறைந் திடில்லம் வரழ்வு
நந்தமி ழினமொன் றுய்,மெய்
நட்புற வேண்டும், யேசு,
நாதனே இருபை செய்யும்!

—எஸ். எல். சவுந்தரநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

இந்தியாவில் இந்தியும் ஈழத்தில் சிங்களமும் தமிழுக்கு முட்டுக்கட்டை போடுகின்றன

தமிழினத்தின் இன்னல் தீர்க்க எட்டுத்திக்கிலும் தமிழ் வளர்ச்சிக் கழகங்கள் வேண்டும்

நாவலப்பிட்டிய மாணவர் கலாவிருத்திச் சங்கத்தில் பேச்சு

'உலக அரங்கிலே தமிழுக்கு தகுந்த ஆதரவில்லை. தகுதியான தலைவர்கள் இல்லாத இன்றைய தமிழ்ச் சமுதாயம் தமிழின் இக்கால நிலையை எண்ணிக் கவலைகொள்கிறது. இக் குறைகள் நீர தமிழ் வளர்ச்சிக் கழகங்கள் தீவிர முயற்சி எடுத்துழைக்கவேண்டும்'' என்று நாவலப்பிட்டி சென். மேரிஸ் கலாசாலைத் தமிழ் மாணவர் கலாபிவிருத்திச் சங்க வருடாந்த விழாவுக்குத் தலைமைவகித்த பேராதனை பல்கலைக் கழக விரிவுரையாளர் டாக்டர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது தலைமையுரையில் ''கொழும்பு போன்ற நகரப் பகுதிகளில் வதியும் தமிழர் வருங்காலத்தில் உத்தியோகம் பெறுவதைக் கருத்தாகக் கொண்டு தம் மக்களைச் சிங்களம் கற்கத் தூண்டுகின்றனர். இந்தியாவில் ஹிந்தியும், இலங்கையில் சிங்களமும் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகத் தோன்றியிருக்கின்றன. தமிழர்கள் விழிப்படையாவிட்டால் தமிழ் விரைவில் அழிந்துவிடும். இன்னும் சிலகாலம் சென்றால் லெமூரியாக் கண்டம் ஒன்றிருந்தது என்று இப்போது சொல்வதுபோல தமிழ் பாஷை ஒன்றிருந்தது, தமிழினம் ஒன்றிருந்தது, என வருங்காலச் சந்ததியினர் கூறக்கூடிய நிலைக்கு தமிழ் வந்துவிடலாம். ஆகவே உயிரைக் கொடுத்தாகிலும் தாய்மொழியைக் காப்பாற்றவேண்டும் என்று கூறினர்.

இவரைத் தொடர்ந்து வித்வான் எஸ். ஜெகநாதாச்சாரி பேசினர்.

அடுத்துப் பேசிய பண்டிதர் க. சபா. ஆனந்தர் பண்டைக்கால தமிழ்ப் புலவர்கள் தொடக்கம் இன்று கல்கி வரையுள்ள தமிழ் அறிஞர்கள் வளரும் தமிழுக்கு எவ்வண்ணம் பணியாற்றியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டினர்.

இதைத் தொடர்ந்து கட்டுரை, பேச்சு, சங்கீதம் ஆகிய போட்டிகளில் திறமை பெற்ற மாணவர்களுக்குக் கண்டிப் பகுதி கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமைக்காரராகிய வண. டி. பி. வடக்கே பட்டணி சுவாமியார் அவர்கள் பரிசுகளை வழங்கினர்கள்.

கடைசியாக, கலாசாலை மாணவ, மாணவிகளால் நாடகம், நடனம் முதலிய வைகள் நடத்தப்பட்டு விழா வெற்றிகரமாக முடிவெய்தியது.

மூதூர் இந்து வாலிபர் சங்கம்

மூதூர் இந்து வாலிபர் சங்க ஆதரவில் சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. உயர்திரு சச்சிதானந்த மாத்ஜீ பேசுகையில்: ''ஜெபம் மனிதனுக்கு ஒரு ஔடதம் போன்றது. இதை ஒவ்வொருவரும், நாடோறும்செய்துகொண்டு வருவோமேயானால் உடல் நோய்கள்கூட நீங்கிவிடும்'' என்று கூறினர்.

இக்கூட்டத்துக்கு உபதலைவர் திரு. க. வயிரமுத்து தலைமை வகித்தார். கொட்டியாபுரப்பற்று கருமாதிகாரி திரு வி. ஆர். நவரத்ன ராஜா உட்பட அனேக பிரமுகர்கள் சமுகமளித்திருந்தார்கள்.

காரியதரிசி திரு. எஸ். சபாரத்தினம் ஆசிரியரவர்கள் பேசுகையில் விரைவில் இச்சங்க ஆதரவில் திருக்குறள் வகுப்பொன்று சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் ஓர் பகவத்கீதை வகுப்பொன்றும் தொடங்கப்படுமென்றும் கூறினர்.

பேராசிரியர் முத்துசிவன் நினைவுநாள்

கிரிலப்பனையில் பாரதி இளைஞர் சங்க ஆதரவில் சென்ற 22-3-55ல் சங்கத் தலைவர் ஸ்ரீ நயமணி கு. ச. வேலாயுதம்பிள்ளை தலைமையில் முத்துசிவன் நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

தலைவர் ஆவடி காங்கிரசுக்கு விஜயம்செய்து பல அறிஞர்களை சந்தித்து பாரதியார் நூல்கள் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்காக அவரைப் பாராட்டிப் பல அன்பர்கள் பேசிய பின்பு அறிஞர்களின் நினைவு நாளையும் அமரர்களின் காவியத்தையும் போற்றுவது தமிழர்களின் மரபு என்று செயலாளர் அ. பட்டையா கூறினர். பாரதியார் நூல்களை பொதுவுடமையாக்கிய சென்னை அரசாங்கத்தைப் பாராட்டி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலுப்பைக்குளம் கரப்பந்தாட்டமைதானத் திறப்புவிழா

இலுப்பைக்குளம் ஜன சமூக நிலையத் தலைவர் திரு. அ. ஆசீர்வாதம் தலைமையில் 20—3—55 மாலை நாலு மணிக்கு இவ்விழா நடந்தேறியது. செட்டிகுளம் கிழக்கு கி. ச. தலைவர் திரு. எஸ். பீ. பொன்னையாவை ஐ. ச. நிலையச் சார்பில், காரியதரிசி திரு. கே. வி. கந்தசாமி வரவேற்று, வரவேற்புரை நிகழ்த்தினர். நிலையக் கட்டிடத்திற்கண்மையில் அமைக்கப்பெற்ற புதுக்கரப் பந்தாட்ட மைதானத்தை கி. மு. ச. தலைவர் திரு ம. யுவானி திறந்து விளையாட்டை ஆரம்பித்துவைத்தார்.

முடிவில் திரு எஸ். எல். சவுந்தரநாயகம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

விவேகானந்தா வாசிகசாலை

காரைதீவு விவேகானந்த வாசிகசாலையின் பொதுக் கூட்டம் 26-3-55 ல் திரு க. இளையதம்பி தலைமையில் நடந்தேறியது. செயலாளர் தெய்வநாயகம் சென்ற கூட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தார். அடுத்து திரு கே. ஆறுமுகம் பேசும்பொழுது வாலிபர்களாகிய நாம் வாசிகசாலை என்ற பெயரில் இந்நிலையத்தை இயக்கிக்கொண்டிருந்தால்மட்டும் போதாது நமது சமுதாயத்திலுள்ள குறைகளைபோக்கிவருங்கால சந்ததியினர் வளம் பெற்று வாழ்வதற்கு ஏற்ற பணிகளையும் புரிய வேண்டும் என்று கூறினர்.

பின் திருவாளர்கள் வே. சீனித்தம்பி, செ. மயில்வாகனம், க. சின்னத்தம்பி தனுதிகாரி ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரையில் வள்ளுவர் தினம் கொண்டாடுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை முன்னடியே வகுத்தெடுத்தல் வேண்டும் என்று கூறினர்.

இளைஞர் முன்னேற்றக் கழகம்

அளவெட்டி இளைஞர் முன்னேற்றக் கழக 2-வது வருடாந்த விழா சென்ற 26-3-55ல் அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் திரு அ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு வி. பொன்னம்பலம் சமூக சேவை என்னும் விஷயம்பற்றிப் பேசுகையில் மக்கள் அனைவரும் ஒரே சமூகமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அடுத்தபடியாக கிராம முன்னேற்ற அதிகாரி திரு கே குமாரசாமி ''தமிழர் பண்பாடும் கிராமமுன்னேற்றமும்'' என்னும் விஷயம் பற்றியும், வித்துவான் பி. சிவபாத சுந்தரனார் ''காந்தீயம்'' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

அடுத்தபடியாக உத்தியோகஸ்தர் தெரிவில் மகாஜன சபைக் காரியதரிசி திரு ஆ. பாலசுப்பிரமனியம் தலைவராகவும் திரு ச. கந்தசாமி காரியதரிசியாகவும், திரு த. தேவதாஸ் தனுதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

வித்தியாதரிசிக்குப் பிரியாவிடை

புத்தளம்—சிலாபப் பகுதித் தமிழ்ப்பாடசாலைகளின் வித்தியாதரிசி திரு. கனக சபாபதி கண்டிக்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு வடமேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தாரால் கடந்த 26-3-55 பெண் பாடசாலை மண்டபத்தில் புத்தளம்—சிலாபப் பகுதி உதவி மாகாண அதிபர் திரு பீ. ஆர். தேவராஜன் தலைமையில் பிரியாவிடை அளிக்கும் நோக்கமாய் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சிலாபம் கன்னியர் மடத் தமிழ்ப் பாடசாலை மாணவிகள் மலைகள் சூட்டி வரவேற்புக் கீதங்கள் பாடினர். அழகிய சித்திர வேலைப்பாடுகளுடன பொன்னட்சரங்களால் எழுதப்பட்ட வாழ்த்துப் பத்திரமொன்று வாசித்து அளிக்கப்பட்டப்பின் சிற்றுண்டி உபசரணைகள் வழங்கப்பட்டன.

மாங்காடு கி. மு. சங்கம்

மாங்காடு கிராம முன்னேற்றச் சங்கத் தீர்மானத்தின்படி மேற்படி கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கள்ளத்தனமாகக் கள் இறக்கும் தொழிலைக் கலாட்படை அதிகாரிகள் திடீர்ப் பரிசோதனை நடாத்தினர். பரிசோதனையின் விளைவாய்ச் சில குற்றவாளிகளைக் காலாட் படையினர் பிடித்தனர். இதன்விளைவாக மாங்காடு ரோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் கல்வி கற்கும் திரளான மாணவரைச் சில நாட்களாகப் பாடசாலைக்கு அனுப்பாது பெற்றோர் தடுத்துள்ளனர். இந்நடவடிக்கைக்கு முன்னேடியாயிருந்த பாடசாலை ஆசிரியருக்கு இடமாற்றம் கொடுத்தாலொழியப் பாடசாலைக்கு மாணவரை அனுப்பமாட்டோமெனப் பெற்றோர் கூறுகின்றனர். பாடசாலை முகாமைக்காரரால் பாடசாலைக்கு விடுதலை கொடுக்கப்பட்டு மேற்படி கிராம அதிகாரி மீது நடவடிக்கை கையாண்டுள்ளனர்.

மாணவர் தேர்ச்சிச் சங்கம்

சியம்பளகஸ் தென்ன அரசினர் தமிழ் பாடசாலையில் மாணவர் தேர்ச்சிக் கழகக் கூட்டம் சமீபத்தில் பாடசாலை உதவி ஆசிரியர் திரு க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இதில் பல விகட நடிப்பும் பேச்சு பாட்டு, அரபுப் பாட்டு, ஆங்கிலம், தேகப் பயிற்சி முதலிய நிகழ்ச்சிகளும் நடந்தேறியது.

பதுளை சமாதான இயக்கம்

பதுளை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் திரு கே சாமுவேல்ரட்ணம் தலைமையில் சமாதான இயக்கத்தின் பொதுக்கூட்டமொன்று சென்ற 26-3-55 ல் நடைபெற்றது.

பதுளை ''புதுமை முரசு'' ஆசிரியர் திரு அ. தங்கராசன் பேசுகையில்: ''உலக கண்ணோட்டம் விடும் தோழர்கள் தமிழரின் இன்றைய வாழ்வை முதலில் கவனிக்க வேண்டும். கல்லோயாப் பகுதியில் தமிழ் மக்களுக்கு அடுத்தடுத்து இழைக்கப்படும் அநீதிகளை முதலில் கவனித்து பிறகு உலகப் பிரச்னைகளுக்கு செல்லுவது பொருத்தமாகும்'' எனக் கூறினர். அதற்கு முன் தோழர் மு. அ. வேலு, ஏ. இளஞ் செழியன், ஆசைத்தம்பி, வே செல்வராசா ஆகியோர் பேசினர். இடையிடையே தோழர் கலைமாறன் அவர்கள் இன்னிசை வழங்கினர்கள்.

முஸ்லிம் கிராம அபிவிருத்திச் சங்கம்

கம்பிரிகஸ்வெவ முஸ்லிம் கிராம அபிவிருத்திச் சங்க ஆண்டு விழாவுடன் கம்பிரிகஸ்வெவ அரசினர் பாடசாலைப் பெற்றோர் தினம் கடந்த 25-3-55 ல் கம்பிரிகஸ்வெவ அரசினர் பாடசாலை மண்டபத்தில் மதவாச்சித் தொகுதிப் பிரதிநிதி திரு எம். சேனநாயக்கா தலைமையில் கொண்டாடப்பட்டது.

பகுதிகாரியாதிகாரியும்பிரதம காரியாதிகாரியும் வரவுத்தியோகஸ்தர், கிவுளக்கடைப் பாடசாலைத் தலைமையாசிரியர் முதலாயினரும் கூட்டத்திற் சொற்பொழிவாற்றினர்.

காரியதரிசி திரு கே. முருகேசு அவர்களின் நன்றியுரையுடன் புது வருட உத்தியோகஸ்தர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விமானங்களை தேடிப் பிடித்து தாக்கும் 'குருவி'

கலிபோர்னியா—

எதிராளிகளின் விமானத்தை தேடிப் பிடித்து தாக்கும் ஒரு வெடிகுண்டை அமெரிக்கா கண்டுபிடித்திருக்கிறது. இந்த வெடிகுண்டு மேகத்திலும் ஊடுருவிச் சென்று எதிராளி விமானத்தை தாக்கும் சக்தி உள்ளது. இதற்கு குருவி என்று பெயர். எந்தவித மான விமானங்களையும் எந்த சமயத்திலும் இது தாக்கக் கூடியது.

இப்படிப்பட்ட வெடிகுண்டை அமெரிக்கா வெடித்து பரிசோதனை செய்ததில் வெற்றிகரமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சிக் கழகம்

கொழும்பு, மத்திய கல்லூரி, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டம் சென்ற 25-3-55 ல் கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் திரு இராஜரத்தினம் தலைமையின் கீழ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திரு அந்தோனி சவாரி 'புத்தரை' ப்பற்றியும் தோழர் குமாரசாமி 'உமார்கய்யாம்' என்னும் பாரசீகக் கவிஞனைப்பற்றியும் தோழர் விக்டோரியா 'தமிழ் மறையை உணர்ந்த தமிழ் உள்ளம்'' என்று இளங்கோவடிகளைப்பற்றியும் தோழர் ம. மகமது 'மாணவர் கடமை' யைப்பற்றியும் தோழர் சேவுகப் பெருமாள் 'அன்பு' என்னும் பொருள் பற்றியும் தோழர் சுந்தரலிங்கம் 'தமிழகம்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்

இந்த எழுத்துக்கள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும்சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெகு விரைவில் நகர மத்தியில் விஜயாவின் மிஸ்ஸியம்மா

ஆணழகன் ஜெமினிகணேசன், தேவதாஸ் புகழ் சாவித்திரி, புதுமுகம் ஜமுனா
முதலியோர் திறம்பட நடிக்கும்

விஜயாவின் மிஸ்ஸியம்மா

குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் குதூகலச் சித்திரம். உங்கள் உள்ளத்திற்கு உண்மையான உணர்ச்சியூட்டும் உன்னதச் சித்திரம். கண்கள் தூங்கத் தூண்டினாலும் களிப்படைந்த உள்ளம் கண்களை அயரவிடாமல் காவல் புரியும். இப்பேர்ப்பட்ட உன்னத திரை ஓவியத்தைக் காணத் தயாராகுங்கள்.

காமினி (கொழும்பு) மகத்தான வேது வாரம்!

இன்னும் பல திரைகளில்

இன்றைய சிங்கள சமூகத்தின் ஒப்பரிய ஓர் கதையான

★ அசோகா

மிஸ் புஷ்பாஜனட், சுமதிபிபிலே,
மிஸ பிரேமகாந்தி, ஆனந்த வீரக்கூன்
முலியோர் நடித்தது.



வெற்றிகரமான 4வது வாரம்!

கிங்ஸ்லி கொழும்பு | விஜயா மட்டக்களப்பு | வெலிங்டன் யாழ்ப்பாணம்&திருகோணமலை | வெம்பிளி கண்டி

சிவாஜிகணேசன், பத்மினி, ஸ்ரீரஞ்சனி நடிக்கும்

மொடேர்ன் தியேட்டர்ஸ்

இல்லற ஜோதி

விரைவில் எதிர்பாருங்கள்!

சினிமாஸ் லிமிட்டெட ஸ்தாபனத்தாரின் அடுத்த
மகத்தான வெளியீடு!

மதுபாலா, திலிப்குமார், நிம்மி

முதலியோர் நடிக்கும்

பெஹ்பூப்ஸ

அமார் [ஹிந்தி]

மைலன் [கொழும்பு] 2வது வாரம்!

பத்மினி, சிவாஜி கணேசன்,
பாலையா நடிக்கும்
அருணா பிலிம்ஸ்

தூக்குத் தூக்கி

சபையர் வெள்ளவத்தை

சிவாஜி கணேசன், பண்டரிபாய் நடிக்கும்

அந்த நாள்

குயின்ஸ்லன் நுகேகொடை

யார் குற்றம் (சிங்களம்)

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 185ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1955 ஏப்ரல் 10ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org